விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 தை 14 புதன்கிழமை (28.01.2015) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 040

ரா
ம்
கோ
THE RAMCO CEMENTS LIMITED
RAMCO
SLS 107 தரம் கொண்டதும், உலகதர 14001, 9001 சான்றிதழ் பெற்றுள்ள ஒரே சீமெந்து ராம்கோ

## கறுப்பு பட்டியலில் இலங்கை சேர்ப்பு

(கொழும்பு)

தாம் விதித்த காலக்கெடுவுக்குள் சட்டவிரோத ஆழ்கடல் மீன்பிடிக்கு எதிரான நடவடிக்கைகளை எடுக்கத் தவறியமைக்காக ஐரோப்பிய ஒன்றியம் இலங்கையை கறுப்புப் பட்டியலில் சேர்த்துள்ளது.

இதையடுத்து, இலங்கை கொடி தாங்கிய கப்பல்களினால் பிடிக்கப்படும் கடலுணவுப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கு அதிகார பூர்வமாகத் 24 ஆம் பக்கம் பார்க்க....

## ஊடக அடக்குமுறை விரிவான விசாரணை

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் படுகொலை, கடத்தல்கள், தாக்குதல்கள் உள்ளிட்ட ஊடக அடக்குமுறைகள் தொடர்பில் விரிவான விசாரணைகள் நடத்துவதற்கு விசேட பிரிவு ஒன்றை உருவாக்க தேசிய நிறைவேற்றுச் சபை நேற்று ஒப்புதல் வழங்கியுள்ளது.

கடந்த அரசின் ஆட்சியின்போது ஊடகவியலாளர்கள் பலர் கொல்லப்பட்டனர், கடத் 23 ஆம் பக்கம் பார்க்க....

# புலிப் பீதியைக் கிளப்பி ஆட்சியைப் பிடிக்க சதி

## வடக்கு இராணுவ முகாம் தாக்கப்படும் அமைச்சர் ராஜித திடுக்கிடும் தகவல்

(கொழும்பு) வடக்கின் சில இராணுவ முகாம்கள் மீது தமிழீழ விடுதலைப்புலிகள் தாக்குவதைப் போன்று தாக்குதல்களை மேற்கொண்டு மீண்டும் இனக் கலவரத்தை தூண்டி ஆட்சியைக் கைப்பற்ற முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தரப்பினர் முயற்சித்து வருவதாக அரசாங்கப் பேச்சாளர் அமைச்சர் ராஜித சேனாரட்ண தெரிவித்துள்ளார்.

(23 ஆம் பக்கம் பார்க்க)

## உணவு எடுத்து சென்ற குடும்பஸ்தரின் உயிரைப் பறித்தது உழவு இயந்திரம்

### தலை நசியுண்டு பரிதாபகரமாக மரணம்




(கரணவாய்)

உழவு இயந்திரம் ஒன்று மோதி அதன் சக்கரம் தலைமீது ஏறியதில் தலை நசியுண்டு குடும்பஸ்தர் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

இச் சம்பவம் நேற்றுக் காலை பருத்தித்துறை வல்லிபுரக் குறிச்சி சிங்கநகரில் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் போதனாமடம் கரவெட்டியைச் சேர்ந்த சரவண முத்து சந்திரமோகன் (வயது 48) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது,

நேற்றுக்காலை தனது உறவினருக்கு உணவு எடுத்துச் சென்ற வேளை 24 ஆம் பக்கம் பார்க்க....



ஏற்கெனவே அறிவிக்கப்பட்டவாறு வடமாகாண ஆளுநராக முன்னாள் வெளிவிவகார அமைச்சின் செயலாளரான எச்.எம்.எம்.ஜி.எஸ்.பலிஹக்காரவுக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று நியமனக்கடிதம் வழங்கிய போது ...

## புதிய ஆளுநர்கள் 6 பேர் நியமனம்

(கொழும்பு)

புதிய ஆளுநர்கள் 6 பேருக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாணம், கிழக்கு மாகாணம், சப்ரகமுவ மாகாணம், மத்திய மாகாணம், வடமத்திய மாகாணம், ஊவா மாகாணம் ஆகியவற்றுக்கே 24 ஆம் பக்கம் பார்க்க....

## மைத்திரியின் பிரதிநிதி ஐ.நாவுடன் சந்திப்பு



(ஜெனிவா)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் விசேட பிரதிநிதி, ஐக்கிய நாடுகள் மனித உரிமைப பேரவையின் ஆணையாளரை சந்திக்க உள்ளார். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் சர்வதேச விவகார ஆலோச 24 ஆம் பக்கம் பார்க்க....

## உறவுகளை மீட்டுத் தாருங்கள்

(யாழ்ப்பாணம்)

காணாமல் போன தமது உறவுகளினை மீட்டுத்தருமாறு கோரி வடமாகாண முதலமைச்சரிடம் அவர்களது உறவினர்கள் கதறி அழுததோடு மகஜரும் கையளித்துள்ளனர்.

இச்சம்பவம் நேற்று காலை 10.30 மணியளவில் நெடுந்தீவு பிரதேச செயலகத்தில் நடைபெற்ற மக்கள் சந்திப்பின் போதே இடம் பெற்றுள்ளது. 24 ஆம் பக்கம் பார்க்க....

## பெப்ரவரி முதலாம் திகதியிலிருந்து

# சகல பேருந்து கட்டணங்களும் 8–10 சதவீதத்தால் குறைக்கப்படும்

### இடைக்கால பட்ஜெட் நாளை சமர்ப்பிப்பு

(கொழும்பு)

சகல பேருந்து கட்டணங்களும, பெப்ரவரி மாதம் முதலாம் திகதியிலிருந்து 8 முதல் 10 சதவீதத்தால் குறைக்கப்படும் என உள்ளக போக்கு வரதது அமைச்சர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம் பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய அமைச்சர் ரஞ்சித் மத்தும பண்டார இதனை குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே 9 ரூபாய் என்ற குறைந்த கட்டணம் ஒரு ரூபாயால் குறைக்கப்பட்டு 8 ரூபாயாகவும், 13 ரூபாய் என்ற கட்டணம் 12 ரூபாயாகவும் குறைக் கப்பட்டுள்ளது.

18 ரூபாய் முதல் 34 ரூபாய் வரையான கட்டணம் 2 ரூபாயால் குறைக்கப்பட்டுள்ளது.

37 ரூபாயிலிருந்து 41 ரூபாய் வரையான கட்டணம் 3 ரூபாயால் குறைக்கப்பட்டுள்ளது.

அதேபோல, 44 ரூபாவிலிருந்து 59 ரூபாய் வரையான பேருந்து கட்டணம் 4 ரூபாயால் குறைக்கப்பட்டுள்ளது. 62 ரூபாய் முதல் 64 ரூபா வரையான 23 ஆம் பக்கம் பார்க்க....

## நொதர்ன் பவர் நிறுவனத்தை தற்காலிகமாக மூடுமாறு உத்தரவு

### மல்லாகம் நீதிமன்று நடவடிக்கை

(சுன்னாகம்)

நொதர்ன் பவா நிறுவனத்தை தற்காலிகமாக மூடுமாறு மல்லாகம் நீதிமன்றம் உத்தரவினை நேற்று பிறப்பித்துள்ளது.

பொதுமக்கள் சார்பாக தொடரப்பட்ட வழக்கை ஆராய்ந்த மல்லாகம் நீதிமன்ற நீதவான் எஸ்.சதீஸ்தரன் இந்த உத்தரவை நேற்று பிறப்பித்துள்ளார்.

நொதர்ன் பவர் நிறுவனத்தை உடன் அமுலுக்கு வரும் வகையில் அதன் செயற்பாடுகளை இடைநிறுத்தி வைப்பதுடன் மறு அறிவித்தல் வரும் வரை தற்காலிகமாக மூடுமாறும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த மாசுபாடுகள் தொடர்பில் சுதந்திர ஆணைக்குழுவினை அமைத்து அத 24 ஆம் பக்கம் பார்க்க....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# புதிய அரசியல் கூட்டணிக்கு தலைமையேற்க போவதில்லை


## ☆ கோரிக்கையை நிராகரித்தார் மகிந்த

(கொழும்பு)

புதிய அரசியல் கட்சியையோ அல்லது புதிய அரசியல் கூட்டணி ஒன்றையோ தான் ஆரம்பிக்கப் போவதில்லை என்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

மகிந்த ராஜபக்சவை புதிய அரசியல் கூட்டணி ஒன்றுக்கு தலைமை தாங்குமாறு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பங்காளிக் கட்சிகள் வலியுறுத்தி வருகின்றன.

இதனால் அவர் புதிய அரசியல் கட்சி ஒன்றை ஆரம்பிக்கலாம் என்றும் செய்திகள் வெளியாகி இருந்த நிலையில், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முக்கிய பிரமுகர்களை மகிந்த ராஜபக்ச கடந்த ஞாயிற்றுக் கிழமை சபாநாயகரின் அதிகாரபூர்வ இல்லத்தில் சந்தித்து பேச்சு நடத்தினார்.



இதன்போது, எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் புதிய அரசியல் கூட்டணி ஒன்றுக்குத் தலைமை தாங்கி பிரதம வேட்பாளராக போட்டியிடுமாறு மகிந்த ராஜபக்சவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

ஆயினும், அதற்கு மகிந்த ராஜபக்ச மறுத்து விட்டதாக கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

அதேவேளை, ஜனாதிபதி தேர்தலில் தோல்வியுற்றதை அடுத்து, சுதந்திரக் கட்சியில் ஒதுக்கப்பட்டுள்ள மகிந்த ராஜபக்சவை, கட்சியின் காப்பாளர் பதவியில் இருந்தும் நீக்குவதற்கான முயற்சிகள் இடம்பெற்று வருவதாக தெரிவிக்கப்படுகிறது. (செ-11)


## வாடகைக்கு

யாழ்.பிரதான வீதிக்கு அண்மையில் அலுவலக/வீட்டுப்பாவனைக்கு கட்டிடம் வாடகைக்கு உண்டு. மாதம் ரூ.25000/- அளவில்.

தொடர்பு :

0714408794, 0714797357

(9272)


# ☆ தம்பிராசாவுக்கு கொலை மிரட்டல்

# இராமநாதன் உள்ளிட்ட 9பேரை உடன் கைது செய்ய உத்தரவு

(யாழ்பாணம்)

ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் அங்கயனின் தந்தையாரான இராமநாதன் மற்றும் அவரது உதவியாளரான அன்பழகன் உள்ளிட்ட 9 பேரை உடனடியாக கைது செய்து நீதிமன்றில் ஆஜர்படுத்த யாழ். நீதிவான் த.சிவகுமார் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

2013 ஆம் ஆண்டினில் நடைபெற்ற வட மாகாண சபை தேர்தலின்போது செப்ரெம்பர் 20 ஆம் திகதி யாழ் நகரில் வைத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வட மாகாணசபை வேட்பாளரான தம்பிராசாவிற்கு கைத்துப்பாக்கி காட்டி கொலை மிரட்டல் விடுத்தமை தொடர்பில் செய்யப்பட்ட முறைப்பாட்டினை அடுத்தே சுமார் 17 மாதங்களின் பின்னர் இராமநாதனுக்கு எதிராக கைதுக்கான உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

யாழ்நகரப்பகுதியில் வைத்து தனக்கு விடுக்கப்பட்ட கொலை அச்சுறுத்தலையும் அத்துடன் அப்போது பிரசன்னமாகியிருந்தவர்களில் பெயர் தெரியாதவர்களது புகைப்பட ஆதாரங்களையும் தம்பிராசா சமர்ப்பித்திருந்தார்.

இந் நிலையில் நேற்று வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட வேளை அவர்கள் அனைவரையும் அரசியல் தலையீடுகள் எதனையும் பொருட்படுத்தாது கைது செய்து நீதிமன்றில் ஆஜர்படுத்த வேண்டும் என யாழ்.நீதவான் உத்தரவிட்டுள்ளார். (செ-4)


## மனோதத்துவ வைத்தியம்

(General Psychotheraphy)

பிரபல மனோதத்துவ நிபுணர்



Dr.P.ஆறுமுகம்

T.P.: 0719315664 , 0777569205

மீண்டும் யாழில்

25.01.2015 முதல் 31.01.2015 வரை 7 நாட்கள் மட்டுமே இருப்பார். உடன் பதிவுகளை மேற்கொள்ளவும்.

பதிவுக் கட்டணம் ரூபா: 300/-

ஆரம்பநிலை மனநோய் விரைவில் சுகமாக்கலாம். நீரிழிவு நோய்க்கு திறமான மூலிகை மருந்து உண்டு. ஆஸ்துமா, மாதவிடாய்க் கோளாறுகள், வெள்ளைபடுதல், குழந்தைப் பேறின்மை, வாதநோய், தலையிடி, பல்முரசு கரைதல் போன்ற நோய்களுக்கு வைத்தியம் உண்டு.

இளைஞர்கள் ஞாபகத்திறன் குறைவு, கல்வியில் நாட்டம் குன்றிப் பயம், நடுக்கம், நரம்புத் தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு மனப்பான்மை உண்டாகக் காரணமான இளமையில் ஏற்படும் தவிர்க்க முடியாத தவறுகளைத் திருத்தி வாழ்வில் வெற்றிபெற பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள்.

தாம்பத்திய பாதிப்புக்கள் (பிறவியில் ஆண்மையற்றவர்களைத் தவிர) எந்தவித மோசமான தாம்பத்திய கோளாறுகளையும் மனோதத்துவரீதியில் திறமான மூலிகை மருந்துகளாலும் 45 நாட்களில் சுகமாக்கலாம். பலர் சுகமாகியுள்ளனர். ஆண்களுக்கு ஏற்படும் விந்து உயிரணுக்கள் குறைபாடுகளுக்கு சிறந்த மூலிகை மருந்து கொடுக்கப்படுவதால் யாழ்ப்பாணத்தில் பல பேருக்கு குழந்தைகள் கிடைத்தமைக்கு ஆதாரங்கள் உண்டு.

நாதன் இன்

(பழைய கமால் லொஜ்) 392/A, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம். (சிவதர்சன் எலக்ரிக்கல் கடைக்கு அருகில்) (பெருமாள் கோவிலுக்கும் வெலிங்டன் சந்திக்கும் இடையில்)

(C-9942)



## பணிநிலை வெற்றிடம்

ஜெயந்திநகர், கிளிநொச்சி என்னும் முகவரியில் அமைந்துள்ள மகாதேவா ஆச்சிரமச் சிறுவர் இல்லத்தில் கீழ்க்காணும் பணிநிலை வெற்றிடம் உண்டு.

### 1.நூலகர்

**தகைமைகள்**

நூலக தகவல் விஞ்ஞான பட்டதாரிகள் அல்லது நூலக தகவல் விஞ்ஞான பட்டதாரி பரீட்சைக்கு தோற்றி பெறுபேற்றை எதிர்பார்த்திருப்பவர்கள். அல்லது இலங்கை நூலக தகவல் விஞ்ஞான டிப்ளோமா தீரம் - III (LEVEL - III) பரீட்சையில் (DIPLIS) சித்தி பெற்றவர்கள். 20வயதிற்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும்.

நிறுவனத்தின் விதிமுறைகளுக்கு அமைந்து இல்லத்தில் தங்கியிருந்து பணியாற்ற வேண்டும். உணவு, தங்குமிடம் என்பன வழங்கப்படும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

### 2.நடன ஆசிரியர்

**தகைமைகள்**

பல்கலைக்கழக நடனப் பட்டதாரிகள்

பெண்பாலார் மட்டும் விண்ணப்பிக்க முடியும்.

நிறுவனத்தின் விதிமுறைகளுக்கு அமைந்து இல்லத்தில் தங்கியிருந்து பணியாற்ற வேண்டும். உணவு, தங்குமிடம் என்பன வழங்கப்படும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

விண்ணப்ப முடிவுத் திகதி : 05.02.2015

தொடர்புகளுக்கு: தி.இராசநாயகம்

தலைவர், மகாதேவா ஆச்சிரமச் சிறுவர் இல்லம்,

ஜெயந்திநகர், கிளிநொச்சி.

தொலைபேசி இலக்கம் : 0770604950, 0214923118

(C-9947)





## மூலிகை மருத்துவத்தில் சாதனை

தெய்வீக மூலிகை மருந்துகளால்



ஆண்மைக்குறைவு, குழந்தையில்லாமை, சர்க்கரை நோய், சொரியாசிஸ், ஆஸ்மா, மூலநோய், எடைகூட /குறைய, மஞ்சள் காமாலை(B)(HBSAG), பாலியல் நோய் முழுமையாக குணமாகும் அதிசயம்

23 ஆயுர்வேத மருத்துவர்களின் ஆராய்ச்சியின் சாதனைகள்

100% உறுதி

உயிரணுக்கள் உற்பத்தியில் 100% சாதனை

**ஆண்மைக்குறைவு** - ஆண்மைக்குறைவு ஏற்பட முக்கிய காரணங்கள் இரண்டு. தானாக வருவது முதல் காரணம். நாமாக வரவழைத்துக் கொள்வது இரண்டாவது காரணம். விஷக்காய்ச்சல், உடல் பலவீனம் போன்றவைகளின் காரணமாக ஆண்மைக்குறைவு இயல்பாக ஏற்படுகின்றது. அதையும் தவிர்த்து இளமைப்பருவத்தில் ஏற்படுகின்ற தீய பழக்கங்கள், போதைப்பொருட்கள் பயன்படுத்துதல், தனது சக்திக்கும் அதிகமான உடல் உழைப்பு, டென்ஷன், சர்க்கரை நோய், சரியாக சாப்பிடாமை, உடல்சூடு போன்றவைகளால் ஆண்மைக்குறைவு தானாக வரவழைத்துக்கொள்ளப்படுகிறது. இதன் காரணமாக நரம்புத்தளர்ச்சி, உடல் படபடப்பு, மயக்கம், சோர்வு, கை, கால் கடுக்கம், அசதி, கண் எரிச்சல், கன்னத்தில் குழி விழுந்து காணப்படுதல், ஞாபக சக்தியின்மை, தூக்கமின்மை, தனியாக சிந்தித்தல், திருமண பயம், இல்லறத்தில் முழுமையாக ஈடுபட முடியாமை, விரைவாக விந்து வெளியேறுதல், குழந்தையின்மை போன்றவைகள் ஏற்படுகின்றன. இதிலிருந்து விடுபட்டு இல்லற வாழ்வை இனிமையாக ஆரம்பிக்க பக்க விளைவுகளற்ற முறையில் சிகிச்சையளிக்கிறார்.

**குழந்தையின்மை** - ஆண்களுக்கு ஏற்படும் உயிரணுக்கள் உற்பத்தியின்மை, உயிரணுக்கள் குறைவு மற்றும் பெண்களுக்கு ஏற்படும் மாதப்பிரச்சினை, கர்ப்பப்பை வளர்ச்சியின்மை, கர்ப்பப்பைச் சுருக்கம், கருமுட்டை உற்பத்தியின்மை, கருமுட்டை வளர்ச்சியின்மை மற்றும் வெள்ளைபடுதல் போன்ற பிரச்சனைகளிலிருந்து விடுபட்டு குழந்தைப்பாக்கியம் பெறலாம்.

**சர்க்கரை நோய்** - இந்த நோய்கள் ஏற்படுவதற்கு முக்கிய காரணங்கள்.மனித உடம்பில் சுரக்கின்ற இன்சுலின்கள் சரியாகசுரக்காமையே காரணம். இதன் காரணமாகவே இரத்தத்தில்உள்ள சர்க்கரையின் அளவு தானாகவே கூடிவிடுகின்றது. இவ்வாறு பாதிக்கப்பட்ட நபர்களுக்கு எங்களது தெய்வீக மூலிகை மருத்துவத்தின் மூலம் இரத்தத்தில் உள்ள சர்க்கரையின் அளவை கட்டுப்படுத்துவது மட்டுமின்றி செயலிழந்த கணையத்தை மீண்டும் செயல்படச் செய்து அதிலிருந்து சுரக்கின்ற இன்சுலினை முழுமையாகச் சுரக்கச்செய்கின்றோம். இதன் காரணமாக மீண்டும் இரத்தத்தில் சர்க்கரையின் அளவு கூடுவதில்லை. இங்கு சர்க்கரை நோயால் பாதிக்கப்பட்ட ஆண்மைக்குறைவு, நரம்புத்தளர்ச்சிக்கு நல்ல முறையில் குணமடைய சிகிச்சை அளிக்கப்படுகின்றது.

**சிறுநீரகப்பிரச்சனை** - சிறுநீரகப்பிரச்சனையால் பாதிக்கப்பட்ட மற்ற டாக்டர்களால் கைவிடப்பட்ட ஒரு பக்க மற்றும் இருபக்க கிட்னியும் தோல்வி அடைந்தவர்கள் கூட எங்களது சிகிச்சையால் பலன் பெற்று வருகிறார்கள்.

**மூலநோய்** - மூல நோயால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அறுவை சிகிச்சை செய்தும் பலம் அடையாதவர்கள் இரத்தம் வடிதல், வலி, எரிச்சல், மலம் கழிக்க முடியாமை போன்ற பிரச்சனைகளில் இருந்து விரைவில் குணமடைந்து மூல நோயை முற்றிலும் அகற்ற முடியும்.

**சொரியாசிஸ்** - தலையில் பொடுகு போன்று ஆரம்பித்து உடல் முழுவதும் பரவி மீன்செதில் போன்று தோன்றும். நாட்கள் ஆக ஆக உடலின் தோல்கள் இறுகி வெடித்து இரத்தம் வடியும். நகங்கள் சொத்தையாகும். இந்த நோய் ஒருவரிடம் இருந்து மற்றொருவருக்கு எளிதில் பரவக்கூடியது. இந்த நோயை எமது சிகிச்சை மூலம் முழுமையாக குணமாக்கலாம்.

மேலும் சிறப்புச் சிகிச்சைக்கு அரசு பதிவு பெற்ற சித்த மருத்துவர் Dr.G.ஜெகதீஸ்குமார் அவர்களை தொடர்பு கொள்ளவும்.

(சி-9945)

ஸ்ரீ தேவி சித்த ஆயுர்வேத வைத்தியசாலை

இராமாபுரம், சென்னை-89,

Email: sridevisiddha@gmail.com Skype: sridevisiddha

செல்: 0091 9842437873

செல்: 0091 9600336009



NORTH LEAD Computer & Accessories Wholesaler, Computer Repairing & Services

Computer & Language Classes, Computer Printing & Designing

யாழ் மற்றும் கிளிநொச்சி நகரில் எங்குமில்லாத விலைகளில்

LAPTOP & LAPTOP ACCESSORIES FOR SALES & SERVICE

சகல மடிக்கணனி உதிரிப்பாகங்கள் விற்பனைக்கு



சகலவிதமான கணனிகளும் சிறந்த முறையில் பழுதுபார்க்கப்படும்

| | |
|---|---|
| Laptop Keyboard : 3850 | Laptop Ram From : 2800 |
| Laptop Batteries : 5850 | 500GB Lap Hard Disk: 6950 |
| Laptop DVD Writer : 3800 | 1TB Lap Hard Disk : 9850 |
| Laptop Chargers Org : 2250 | Lap Wireless Mouse : 950 |
| Lap LCD-LED Display : 7950 | Laptop Orginal Bag : 1850 |
| Lap Motherboard From: 18350 | Laptop Skin & Cleaner Kit : 800 |

No: 328, Stanley Road, Jaffna. (Near to Ariyakulam Junction) Tel: 021-222 4459, 0774192275

Branch: No:12, Kanagapuram Road, Kilinochchi (Near to Barathi Hotel) Tel/Fax: 021-206 0909, 0772533390

(சி-9943)


## மரண அறிவித்தல்

### கந்தையா சரஸ்வதி

சிவன் கோயிலடி காரைநகரைப் பிறப்பிடமாகவும் சிவன் கோயிலடி உருத்திரபுரீஸ்வரம் உருத்திரபுரத்தை நிரந்த முகவரியாகவும் காந்திகிராமம் கோணாவில் கிளிநொச்சியை தற்காலிக முகவரியாகவும் கொண்ட கந்தையா சரஸ்வதி நேற்று (27.01. 2015) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி கந்தையாவின் அன்பு மனைவியும், பிறேமாவதி, சௌந்தரராஜன், காலஞ்சென்ற இராசேந்திரம், இரவீந்திரராசா ஆகியோரின் அன்புத் தாயாரும், சண்முகசுந்தரம், சந்திரவதனா, சூரியகுமாரி (அதிபர்- கிளி/இராமகிருஸ்ண வித்தியாலயம்), மல்லிகாதேவி ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.1.2015) புதன் கிழமை அன்னாரது தற்காலிக இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக உருத்திரபுரம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
குடும்பத்தினர்.

(சி-9948)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நரேந்திரமோடி இலங்கை தொடர்பில் மிகுந்த அக்கறை கொண்டுள்ளார்


(கொழும்பு)

இலங்கை தொடர்பில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி மிகுந்த அக்கறை கொண்டுள்ளார் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கையும் இந்தியாவுடன் வரலாற்று உறவுகளை புதுப்பித்து இணைந்து செல்ல தயாராகவுள்ளதாக ரணில் தெரிவித்தார்.

இதேவேளை இந்திய குடியரசுத்தின நிகழ்வை முன்னிட்டு கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஒன்று கூடலில் ரணில் விக்கிரமசிங்க உரையாற்றினார்.

இந்தநிலையில் இலங்கையின் வர்த்தகர்கள் இந்தியாவுடன் வர்த்தகத் தொடர்புகளை அதிகரித்துக்கொள்ளவேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.



வழமையாக அமைச்சர்களே இந்திய குடியரசுத்தின நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக பங்குபற்றுவர்.

எனினும் நேற்று முன்தினம் இந்த நிகழ்வில் பிரதமர் என்ற வகையில் ரணில் விக்கிரமசிங்க பங்கேற்று இராஜதந்திர முறைமையை மாற்றியுள்ளதாக இந்திய செய்தித்தாள் குறிப்பிட்டுள்ளது.

இந்தநிகழ்வில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா, எதிர்க்கட்சி தலைவர் நிமால் சிறிபால டி சில்வா உட்பட்டோரும் பங்கேற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)


**வாழ்க்கையில் வெறுப்பா?**

பிரச்சினை எதுவானாலும்,
எம்முடன் தொலைபேசியில்
அல்லது நேரில் பேசுங்கள்.
இரகசியங்களைப் பேணுவோம்.
காலை 9.00 – பி.ப 1.00
மதச்சார்பற்றது

(#.9913)

**கைகொடுக்கும் நண்பர்கள்**

104, 4ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.
**021 222 8117, 0779008776**


# ஒரே பாம்பின் விஷம் 3 உயிர்களை பறித்தது

## மாணவி ஆபத்தான நிலையில்

பாம்பு ஒன்றினால் தீண்டப்பட்ட நாய் ஒன்று அந்தப் பாம்பைக் கடித்துக் குதறியதுடன் தனது குட்டியைக் கடித்ததால் குட்டியும் உயிரிழந்த தோடு தானும் இற ந்து போனது. அதனுடன் இந் நாயினால் கடி யுண்ட தரம் ஐந்து மாணவி ஒருவர் ஆபத்தானநிலையில் மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.


நேற்று முன்தினம் கரணவாய் செக்காலைப் பகுதியில் இச் சம்பவம் இடம் பெற்றுள்ளது. சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவ தாவது,

வீட்டு வளவு ஒன்றில் இருந்த நாயை இரவு நேரம் விஷப்பாம்பு ஒன்று தீண்டியுள்ளது. பாம்பினால் தீண்டப்பட்ட நாய் பாம்பைக் கடித்துக் குதறியுள்ளதுடன் தனது குட்டியையும் கடித்துள்ளது.

பாம்புமூன்றுதுண்டுகளாக்கப்பட்டுள்ளது. அத்துடன் படிப்பதற்காக வீடு ஒன்றிற்குச் சென்று திரும்பிக் கொண்டிருந்த தரம் 5 மாணவி ஒருவர் மேற்படி நாயினால் கடியுண்டு மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு ள்ளார். சம்பவத்தில் கந்தசாமி லலீதா (வயது 10) என்பவரே இவ்வாறு நாயின் கடிக்கு இலக்காகி மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ-60)

# மரண அறிவித்தல்

## அமரர் கிருஸ்ணன் இலட்சுமி



கோண்டாவிலை பிறப்பிடமாகவும் கலாசாலைவீதி திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட கிருஸ்ணன் இலட்சுமி 24/01/2015 சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் கணபதி வள்ளியின் அன்பு மகளும், கறுவல்-தெய்வியின் மருமகளும், கிருஸ்ணனின் அன்பு மனைவியும் கனகரட்ணம், பரமேஸ்வரி , தவராசா ( ஜேர்மனி) புவனேஸ்வரி, காலஞ்சென்ற இராஜேஸ்வரி, வசந்தன் (சுவிஸ்) ஜெயக்குமார் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், மனோரஞ்சிதராணி, பரமேஸ்வரன், உருத்திரா, தவராசா, செல்வமகள் , இந்திரா ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் 28/01/2015 இன்று புதன்கிழமை காலை 9 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கலாசாலை வீதி,
திருநெல்வேலி.

தகவல்
கி.கனகரட்ணம் (மகன்),
முன்னாள் சாரதி வட பிராந்திய
விவசாய ஆராய்ச்சி நிலையம்.

# அரசாங்க அறிவித்தல்
# மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்.
# கேள்வி கோரல்

யாழ். மாவட்ட செயலகத்தால் பின்வரும் பொருட்களை பெற்றுக் கொள்வதற்காக பொருத்தமான வழங்குநரிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன. இவை தொடர்பான மேலதிகமான தகவல்களையும் விண்ணப்பப்படிவத்தினையும் செயலக களஞ்சிய நலன்புரிக்கிளையில் 2015.01.28 தொடக்கம் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை 2015.02.10 ஆம் திகதி பிற்பகல் 2.30 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் வழங்கலின் விபரத்தினை குறிப்பிட்டு தலைவர், பெறுகைக்குழு, மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிட்டு பதிவுத்தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். அல்லது நேரடியாக செயலக நிதிக்கிளையிலுள்ள கேள்விப்பெட்டியில் சேர்த்தல் வேண்டும். கேள்விகள் 2015.02.10 ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிக்கு திறக்கப்பட்டு ஆராயப்படும். அதன் போது விண்ணப்பதாரரோ அல்லது அவரின் பிரதிநிதியொருவரோ சமுகமளிக்கலாம்.

- காகிதாதிகள், எழுதுபொருட்கள்
- நுகர்வுப் பொருட்கள்
- வாகன ரயர்கள்
- உணவு/ சிற்றுண்டி வகைகள்
- மின் இணைப்பு பொருட்கள்
- ஹாட்வெயர் பொருட்கள்
- குடிநீர் வகைகள்/ பால்மா வகைகள்
- அலுவலக அடையாள அட்டை செய்தல்

முக்கிய குறிப்பு:- பெறுகைக்குழுவினரால் தெரிவு செய்யப்படும் வழங்குநர் கொள்வனவுக் கட்டளை கிடைக்கப்பெற்று 3 தினங்களுக்குள் பொருட்களை யாழ். மாவட்ட செயலக களஞ்சிய நலன்புரிக்கிளையில் நேரடியாகவோ அல்லது கூரியர் மூலமாகவோ ஒப்படைத்தல் வேண்டும். இதற்கு ஏற்றவகையில் தங்களால் கூறுவிலைகள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

**சுந்தரம் அருமைநாயகம், மாவட்டச் செயலரும்,**
**அரசாங்க அதிபரும், யாழ். மாவட்டம்.**

# மாதாந்த கலை நிகழ்ச்சி-2015

வட. இலங்கைச் சங்கீத சபை 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இளம் கலைஞர்களை ஊக்குவிக்கும் நோக்கமாக அவர்களின் ஒத்துழைப்புடன் மாதந்தோறும் கலை நிகழ்ச்சிகளை நடத்தவுள்ளோம்.

தை மாத (ஜனவரி) நிகழ்வு 31.01.2015 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு வட. இலங்கைச் சங்கீத சபை, மருதனார்மடத்திலுள்ள தற்பரானந்தன் கலையரங்கில் நடைபெறும்.

இந்நிகழ்வு ஜெயச்சந்திர வைரபமூர்த்தி குடும்பத்தின் அனுசணையுடன் நடைபெறும்.

**நிகழ்ச்சி நிரல்**

01. பாட்டு- செல்வி ஜெயச்சந்திர வைரபமூர்த்தி வைஷ்ணவி (கலாவித்தகர்)
02. பரதம்- இணுவையூர் குமர நர்த்தனாலய மாணவர்கள் வழங்கும் நிருத்தியாஞ்சலி
03. பாட்டு- திரு.தவநாதன் றொபேட் (விரிவுரையாளர், யாழ். இராமநாதன் நுண்கலைப்பீடம்)

இந்நிகழ்விற்கு கலைஞர்ப் பெருமக்களை அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு:-வட. இலங்கைச் சங்கீத சபையினால் கலை வகுப்புக்கள் 03.02.2015 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நாள் வகுப்பு ஆரம்பிக்கப்படும். தொடர்ந்து வகுப்புக்கள் சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமைகளில் பிற்பகல் 2.00 மணிக்கு நடைபெறும்.

**ஆசிரியர் விபரம்**

01. பாட்டு- திரு. பொன்ஸ்ரீ வாமதேவன் (ஓய்வுநிலை இசையாசிரியர்)
02. பரதம்- திருமதி துஷ்யந்தி சுகுணன் (முது தத்துவமாணி பரதநாட்டியம்)

**வட.இலங்கைச் சங்கீத சபை,**
**மருதனார்மடம்.**

# இராசி பலன்

28.01.2015
தை 14, புதன்கிழமை
சூரிய உதயம் காலை 6.30 மணிக்கு
நவமி பின்னிரவு 2.11 மணிவரை
பரணி பிற்பகல் 3.56 மணிவரை
இராகுகாலம் 12.36-2.06 மணிவரை
சுப நேரம் 5.06-6.36 மணிவரை
கார்த்திகை விரதம், சித்தாமிர்தம்

வளவன்

**மீனம்:** வாக்கு மேன்மையுண்டு, போசன சுகக் குறைவுகள் ஏற்படலாம், எடுத்த காரியங்களில் சில தாமதம் உருவாகும், சிலர் கௌரவ குறைவாக நடந்து கொள்ளலாம்.

**மேடம்:** வெகுமானங்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, சயன சுகமுண்டு.

**இடபம்:** பிறருக்கு உதவி செய்யும் எண்ணம் உருவாகும், எடுத்த காரியங்கள் தாமதமாகலாம், சுப செலவுகளில் சயன சுகக் குறைவான நாள், சேம்பலை விலகுவது நல்லது.

**மிதுனம்:** உறவினர்களின் வருகையால் குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும். எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும் நாள், பொது வாழ்வில் புகழ்கூடும்.

**கும்பம்:** மனோ தைரியம் கூடும், முயற்சிகள் எளிதில் கைகூடும் நாள், உறவினர் வழியில் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, பயணங்களால் போசன சுகமுண்டு.

**கடகம்:** உங்களின் திறமைக்கு பாராட்டுக்கள் கிடைக்கும் நாள், முயற்சிகளில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், தன்னம்பிக்கை அதிகரிக்கும் நாள், ஆரோக்கியமான நாள்.

**மகரம்:** ரோக பயமுண்டு, குதூகலம் தரும் பயணங்கள் இடம்பெறலாம், தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், பெற்றோர் மீதான பாசம் கூடும்.

**சிம்மம்:** எதிர்பாராத செலவுகள் ஏற்படலாம், அஜீரணம் சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம், திட்டமிட்ட பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, தந்தை வழி உறவில் அனுகூலமுண்டு.

**தனுசு:** மனக்குழப்பங்கள் கூடும் நாள், முயற்சிகள் தாமதமாகும், பிறருக்கு உதவி செய்வதில் பிரியப்படுவீர்கள், பிள்ளைகள் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**விருச்சிகம்:** சுவாரஸ்யமான நாள், ஆசைப்பட்ட பொருள் ஒன்றை வாங்கி மகிழ்வீர்கள், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், முயற்சிகள் எளிதில் கைகூடும்.

**துலாம்:** மனோ தைரியம் கூடும், எடுத்த காரியத்தை எளிதில் செய்து முடிப்பீர்கள், களஸ்திர நன்மையுண்டு, விருந்துகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**கன்னி:** மனதில் இனம்புரியாத கவலைகள் தோன்றி மறையும், முயற்சிகளில் சில தடை தாமதங்கள் ஏற்படலாம், பயணங்களில் போது விழிப்புணர்ச்சி அவசியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்ம ஞானத்தைத் தேடி

## ஆன்மீகம் 134

# மனக்கோட்டைகளைத் தகர்த்தல்!

அதன்பிறகு நீங்கள் உங்கள் மண வாழ்க்கையிலும் பிரம்மச்சாரியாக இருக்க முடியும்! இதுவே உண்மையான பிரம்மச்சரியம் என்பது. அதற்குப் பதிலாக மக்கள் பிரம்மச்சரியத்திற்காக தங்களுக்கு இயல்பான வழியிலிருந்து விலகிச் சென்று மேலும் அடக்குதலின் காரணமாக மன நோய்க்கு ஆளாகிறார்கள்.

சரி... நான் சொல்ல முயற்சிப்பதை உங்களால் பின் தொடர முடிகிறது? யாருக்கேனும் ஏதேனும் விளக்கம் தேவையா? ஆனால், ஸ்வாமிஜி, நாங்கள் உள்ளே ஒரு உருவத்தைச் சுமந்து கொண்டிருக்கிறோம் என்பதைக்கூட உணர்வதில்லையே...

ஆம்... ஏனெனில், நாம் ஒருபோதும் உள்ளே பார்த்ததில்லை. நாம் உள்நோக்கிச் செல்வதைத் தவிர மற்ற எல்லா இடங்களுக்கும் செல்கிறோம். உங்களுக்குத் தெரியுமா, 80 சதவிகித சக்தி இந்த சக்கரத்தில் அடைபட்டிருக்கிறது! இந்தச் சக்கரத்தை சக்தியூட்ட வேண்டிய தேவைகூட இல்லை. அது வெறுமனே திறக்கப்பட்டு தூண்டிவிடப்பட்டால்கூட அதிலிருந்து வெள்ளமாகப் பாய்ந்து வரும் சக்தி உங்கள் முழு வாழ்க்கையையுமே உருமாற்றி விடக்கூடியது.

நீங்கள் உங்களுக்குள் ஆழமாகப் பார்த்தீர்களானால் உங்களுடைய துயரங்களுக்குக் காரணம், நீங்கள் பார்ப்பதற்கும் பார்க்க விரும்புவதற்கும் இடையில் ஒரு பொருத்தமின்மை இருப்பதாக எப்பொழுதும் நீங்கள் எண்ணுவது தான் என்பதைப் புரிந்து கொள்வீர்கள். இந்த நீங்கள் பார்க்க விரும்புவதுதான் நீங்கள் சுமந்து கொண்டிருக்கும் உருவம்.

குறைந்த பட்சம் இப்பொழுதிலிருந்தாவது நீங்கள் பார்ப்பவற்றில் எல்லாம் உங்கள் மனதின் விளையாட்டை விழிப்புணர்வுடன் கவனிக்க முயற்சி செய்யுங்கள். உங்கள் மனம் புகுந்து அவற்றை எடைபோடுவதற்கு முன் காட்சிகளை அது எவ்வாறு இருக்கிறதோ அவ்வாறே பிடிக்க முயற்சி செய்யுங்கள். அப்பொழுது தான் உங்களால் மனம் எவ்வாறு நுட்பமாகவும் இடையறாமலும் நீங்கள் பார்ப்பவற்றிலெல்லாம் செயற்பட்டு எப்பொழுதுமே நீங்கள் பார்ப்பவற்றில் ஏதோ தவறு இருக்கிறது என்று உங்களை நம்ப வைக்கிறது என்பதைக் காண முடியும்.

சமஸ்கிருதத்தில் நமக்கு உண்மையைக் கற்பிக்கும் இரண்டு சொற்றொடர்கள் உள்ளன. திருஷ்டி சிருஷ்டி மற்றும் சிருஷ்டி திருஷ்டி. முதலாவது திருஷ்டி சிருஷ்டி என்பது உலகத்தை உள்ளவாறே பார்ப்பது, வருவதை அப்படியே ஏற்பது, நிஜத்தில் எது இருக்கிறதோ, அதை வரவேற்பது. சிருஷ்டி திருஷ்டி என்பது உலகத்தை நாம் அது எவ்வாறு இருக்க வேண்டும் என்று விரும்புகிறோமோ, அவ்வாறே நமது சொந்த வண்ணக் கண்ணாடிகளின் மூலமாகவும் நமது கனவுகளின் மூலமாகவும் காண்பது. முன்னது அமைதியான வாழ்வை நோக்கி இட்டுச் செல்லும், பின்னது துயரத்தை நோக்கி இட்டுச் செல்லும். சரிதானே?

ஒரு சின்னக் கதை....

ஒருமுறை ஒரு மனிதர் என்னிடம் வந்து சொன்னார். ஸ்வாமிஜி, எங்கள் வீட்டில் இருப்பது நானும் என் மனைவியும், வெறும் இரண்டு பேர் மட்டும்தான்.



ஆயினும் அமைதியில்லை! நான் சொன்னேன், யார் சொன்னது உங்கள் வீட்டில் இரண்டு போர் மட்டும்தான் இருக்கிறார்கள் என்று? நீங்கள் நான்கு பேர் இருக்கிறீர்கள். அவர் அதிர்ச்சியடைந்தார். நான் சொன்னேன், நீங்கள், உங்கள் உள்ளிருக்கும் பெண், உங்கள் மனைவி, அவள் உள்ளிருக்கும் ஆண்! அதனால்தான் நான் சொல்கிறேன் நீங்கள் நான்கு பேர் என்று! உங்கள் உள்ளிருக்கும் ஆணையோ, பெண்ணையோ வெறுமனே விட்டுவிடக் கற்றுக் கொள்ளுங்கள். பிறகு உங்கள் வீட்டில் எப்படி ஒரு மாற்றம் நிகழ்கிறது என்று பாருங்கள். அந்த மனிதர் அமைதியாகச் சென்றுவிட்டார். (தொடரும்)

பரமஹம்ஸ் சுவாமி


# அதிசய உலகம்

## தனது உடலில் 11,000 வோல்ட் மின்சாரத்தை தாங்கும் அதிசய சிறுவன்....

இந்தியாவில் அரியானா மாநிலத்தில் 16 வயது சிறுவன் ஒருவன் 11,000 வோல்ட் மின்சாரத்தை தனது உடலில் தாங்குவதாக தகவல்கள் வெளியாகியுள்ளது.

அரியானாவில் உள்ள சோனிபட் நகரின் அருகே உள்ள குக்கிராமத்தை சேர்ந்த 16 வயது வாலிபன் தீபக் ஜங்ரா, மூன்று வருடங்களுக்கு முன் ஹீட்டரை சரி செய்த போது கையில் இருந்த ஸ்குருடிரைவர் மின்சாரம் பாய்ந்து கொண்டிருக்கும் ஒயரின் மீது பட்டுள்ளது.

ஆனால் அவனுக்கு ஷாக் அடிப்பதற்கு பதிலாக அந்த கிராமத்திற்கே மின்சாரம் தடைபட்டுள்ளது. பின்னர் தனக்கு ஏதோ ஒரு சக்தி இருப்பதை புரிந்து கொண்ட அவன் தொடர்ந்து வேறு வேறு வோல் டேஜ்கள் கொண்ட மின்சாரத்தை சோதித்துள்ளான்.



தன்னால் எவ்வளவு மின்சாரத்தை தாங்க முடியும் என்று சோதனை செய்ய விரும்பி கிராமத்தில் உள்ள மின்கம்பத்தில் ஏறி 11000 வோல்ட் மின்சாரத்தை தொடச் சென்றான். அப்போது அவனது தாய் உட்பட அங்கு கூடிய கிராம மக்கள் அனைவரும் அவன் தற்கொலை செய்து கொள்வதாக எண்ணி கீழே இறங்கும்படி சத்தம் போட்டுள்ளனர். ஆனால் 11000 வோல்ட் மின்சாரத்தை தொட்ட பிறகும் அவன் உயிரோடு இருப்பதை பார்த்து அதிசயித்துள்ளனர். மேலும், கிராமத்தினரால் அதிசய மனிதனாக பார்க்கப்படும் ஜங்ரா நடிகரை போல பிரபலமாகியிருந்தாலும், மருத்துவர்களோ இது ஆபத்தென்றும் இது பல்வேறு குறைபாடுகளை உண்டாக்குமென்றும் எச்சரித்துள்ளனர்.

# சமைப்போம் சுவைப்போம்

## ஓட்ஸ் சம்பா ரவை இட்லி



**தே.பொருட்கள்:-**

ஓட்ஸ் - 1 கப்

வெங்காயம் - 1

பச்சை மிளகாய் - 1

பூண்டு - 1 பல்

மிளகு தூள் - 1/4ஸ்பூன்

பால் - 1 கப்

தண்ணீர் - 1 கப்

எண்ணெய் - 2 டீஸ்பூன்

உப்பு - தே.அளவு

**செய்முறை:-**

இஞ்சியை தோல் சீவி பொடியாக நறுக்கிக் கொள்ளவும். ப.மிளகாயை பொடியாக நறுக்கிக் கொள்ளவும். முதலில் ஓட்ஸை வறுத்து பொடி செய்து கொள்ளவும். பிறகு, சம்பா ரவையை சிவக்க வறுத்து, இரண்டையும் கடைந்த தயிரில் சேர்க்கவும். கடாயில் எண்ணெய் விட்டு கடுகு, உளுத்தம்பருப்பு தாளித்து இத்துடன் சேர்க்கவும். கறிவேப்பிலை, இஞ்சி, கொத்தமல்லித் தழை, பெருங்காயத்தூள், பச்சை மிளகாய், உப்பு ஆகியவற்றையும் கலந்து 30 நிமிடம் ஊற விடவும். பிறகு, இந்தக் கலவையை இட்லி தட்டில் ஊற்றி வேகவைத்து எடுக்கவும். சுவையான, சத்தான ஓட்ஸ் சம்பா ரவை இட்லி ரெடி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணிகளை மீள ஒப்படைக்க உடனடி நடவடிக்கை தேவை

## தமிழ்தேசியக் கூட்டமைப்பு அரசிடம் கோரிக்கை

(கொழும்பு)

**திருகோணமலை, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் மற்றும் வன்னி மாவட்டங்களில் உள்ள பொதுமக்களின் காணிகளை அதன் சொந்தக்காரரர்களிடம் ஒப்படைப்பதுடன் அவர்களை சகல உட்கட்டமைப்பு வசதிகளுடனும் மீள்குடியேற்றம் செய்ய வேண்டுமென்று யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உத்தியோகபூர்வ பேச்சாளருமான சுரேஷ் க.பிரேமச்சந்திரன் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.**



இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

திருகோணமலை மாவட்டம் மூதூர் பிரதேசத்தைச் சேர்ந்த சம்பூர் பகுதியில் சுமார் 4ஆயிரம் பேருக்குச் சொந்தமான ஏறத்தாழ ஆயிரத்து 100 ஏக்கர் காணிகளை கடந்த எட்டு ஆண்டுகளுக்கு முன்னர் எவ்வித சட்ட நடைமுறையும் பின்பற்றப்படாமல் அந்த காணிகளுக்குச் சொந்தமான மக்களை அப்புறப்படுத்தி உயர்பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் மகிந்த அரசு கையகப்படுத்தியது.

அந்த இடத்தில் இருந்த 8 கோயில்கள், 6 பாடசாலைகள், வைத்தியசாலை ஒன்று மற்றும் பொதுமக்களின் வீடுகள் அனைத்தும் தரைமட்டமாக்கப்பட்டுள்ளன. பின்னர் இந்த இடம் சிறப்புப் பொருளாதார வலயமாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. ஆனால் அந்த இடத்தில் இன்றுவரை எதுவித கட்டமைப்பும் மேற்கொள்ளப்படவில்லை. இந்த நிலம் முன்னாள் ஜனாதிபதியின் பாரியார் ஷிரந்தி ராஜபக்ஷவின் நெருங்கிய உறவினர் தில்ஷான் விக்கிரமசிங்கவின் நிறுவனமான கேட்வே இன்டஸ்ரீசுக்குக் கையளிக்கப்பட்டது.

பொதுமக்களுக்குச் சொந்தமான காணியை முதலில் அதியுயர் பாதுகாப்பு வலயம் என்ற போர்வையிலும், பின்னர் விசேட பொருளாதார வலயம் என்ற போர்வையிலும் தனது குடும்ப உறவினருக்காகக் கபளீகரம் செய்தமையானது அரசு செய்த பாரிய குற்றமாகும்.

இன்றும் நான்கு முகாம்களில் எந்தவிதமான அடிப்படை வசதிகளுமின்றி, உலர் உணவுப்பொருட்களும் மறுக்கப்பட்ட நிலையில், ஏறத்தாழ பட்டினி நிலையில் அவர்களைக் கடந்த எட்டு ஆண்டுகளாக வைத்திருப்பது அவர்களைப் பட்டினிபோட்டுக் கொல்வதற்கு ஒப்பாகும். இவ்வாறான பாரிய தவறுகளை புதிய அரசாங்கம் காலதாமதமின்றி நிவர்த்தி செய்ய வேண்டுமென்றும் அரசின் நூறுநாள் வேலைத்திட்டத்தில் உள்வாங்கி அந்த மக்களின் காணிகளில் காணிக்குச் சொந்தக்காரர்கள் அனைவரையும் மீள்குடியேற்றம் செய்ய வேண்டும் என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வலியுறுத்திக் கேட்டுக்கொள்கின்றது என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

## பதுளை மாவட்டத்தில் மண்சரிவினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவி

பதுளை மாவட்டம் கொஸ்லந்தை பகுதியில் மண்சரிவினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவது தொடர்பாக 31.10.2014 ஆம் திகதி வடக்கு மாகாண பேரவைச் செயலகத்தில் முதலமைச்சர் தலைமையில் நடைபெற்ற கூட்டத் தீர்மானத்திற்கமைவாக யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் மாவட்டங்களில் சேகரிக்கப்பட்ட சுமார் 35 இலட்சம் ரூபா பெறுமதியான நிவாரணப் பொருட்களும் மாகாண சபை உறுப்பினர்களிடமிருந்து 3 இலட்சம் ரூபாவும் பொதுமக்கள் மற்றும் வடமராட்சி வர்த்தகர் சங்கத்திடமிருந்து 5 இலட்சத்து 41 ஆயிரத்து 600 ரூபாவுமாக மொத்தம் 8 இலட்சத்து 41 ஆயிரத்து 600 ரூபா பணமாக சேகரிக்கப்பட்டது.

நிவாரணப்பொருட்கள் 24.11.2014 அன்று கொஸ்லந்தையில் வைத்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட்டதோடு சேகரிக்கப்பட்ட நிதியில் அனர்த்தத்தினால் தாய் தந்தையரை இழந்த 7 பிள்ளைகளின் பராமரிப்புக்காக 25 ஆயிரம் ரூபா நேரடியாக பராமரிப்பாளர்களிடம் வழங்கப்பட்டது. 8 இலட்சத்து 10 ஆயிரம் ரூபா அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதியை சேர்ந்த பாடசாலை மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக அப்பகுதி பாடசாலை அதிபரின் சிபார்சிற்கமைய மாணவர்களின் பெயரிலுள்ள மக்கள் வங்கிக் கணக்குகளில் தலா 10ஆயிரம் ரூபா வீதம் 81 மாணவர்களுக்கு வைப்பிலிடப்பட்டுள்ளது. மிகுதி தொகை 6ஆயிரத்து600 ரூபா கைதடியிலுள்ள அரச சிறுவர் இல்லத்திற்கு வழங்கப்பட்டது என வடக்கு மாகாண சபையின் அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் அறிவித்துள்ளார். (இ

## தமிழர் பிரதிநிதித்துவம் குறையும் ஆபத்து

நாடாளுமன்றத் தேர்தல் இந்த ஆண்டு நடுப்பகுதியில் நடத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படும் நிலையில், புதிய நாடாளுமன்றத்தில் வடக்கில் இருந்து தெரிவு செய்யப்படும் உறுப்பினர்களின் எண்ணிக்கை குறைவடையும் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

2014 ஆம் ஆண்டு வாக்காளர் பட்டியலின் அடிப்படையில், யாழ்.மாவட்டத்துக்கு ஒதுக்கப்படும் நாடாளுமன்ற ஆசனங்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்டுள்ளது.

2010ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் யாழ். மாவட்டத்தில் இருந்து 9 உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

எனினும், 2014ஆம் ஆண்டு வாக்காளர் பட்டியலின் அடிப்படையில், யாழ். மாவட்டத்துக்கு 7 நாடாளுமன்ற ஆசனங்களே ஒதுக்கப்பட்டுள்ளன.

இதனால், வடக்கு மாகாணத்தில் இருந்து கடந்த நாடாளுமன்றத்துக்கு 15 உறுப்பினர்கள் தெரிவான போதும், இம்முறை 13 உறுப்பினர்களே தெரிவு செய்யப்படும் நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால், நாடாளுமன்றத்தில் தமிழர்களின் பிரதிநிதித்துவம் குறைவடையும் ஆபத்து ஏற்பட்டுள்ளது. (இ-5)

## வன்னியின் சில இடங்களில் மண்ணெண்ணெய் தட்டுப்பாடு

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த மூன்று நாட்களாக மண்ணெண்ணெய்க்கு தட்டுப்பாடு நிலவி வருவதாக நுகர்வோரால் தெரிவிக்கப்படுகிறது.

கிளிநொச்சி கரடிப்போக்கு சந்தியிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையம், கிளிநொச்சி பொலிஸ் நிலையத்திற்கு அருகாமையிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையம் ஆகியவற்றில் மண்ணெண்ணெய் கொள்வனவு செய்யச் செல்வோர் ஏமாற்றத்துடன் திரும்புவதை அவதானிக்க முடிகின்றது.

இது தொடர்பில் எரிபொருள் நிரப்பு நிலையத்தினர் கூறுகையில்,

எதிர்வரும் காலங்களில் எரிபொருட்களின் விலை மேலும் குறைவடையும் என அரசாங்கத்தினால் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் கொள்வனவு செய்து விற்பனை செய்வதால், விலைக்குறைப்பின் போது தமக்கு நட்டம் ஏற்பட்டு விடும் என்று கருதியே மண்ணெண்ணெய் கொள்வனவை இடை நிறுத்தியுள்ளதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை கிளிநொச்சி மாவட்டத்தில் அதிகளவான மக்கள் விவசாயத்தையே நம்பி வாழ்கின்றனர்.

இதில் காந்தி கிராமம், கோணாவில், ஜுனியன்குளம், கண்ணகிபுரம், முக்கொம்பன், நஞ்சுண்டான்காடு ஆகிய கிராமங்களில் மின்சாரம் இன்று வரை கிடைக்கப் பெறாமையால் இங்கு விவசாய நடவடிக்கையில் ஈடுபடும் குடும்பங்கள் நீர் இறைக்கும் இயந்திரங்கள் பயன்படுத்தி நீர் இறைப்பதால் அவர்களுக்கு மண்ணெண்ணெய் தேவையாகும்.

இவ்வாறான பல்வேறு தேவைகளைக் கொண்டியங்கும் மேற்படி கிராம மக்கள் கடந்த மூன்று நாட்களாக மண்ணெண்ணெய் இன்றி அவதியுறுவதாக தெரிவிக்கின்றனர்.

விலை குறைப்பு என்பதற்காக மண்ணெண்ணெய் தட்டுப்பாட்டை ஏற்படுத்தி விவசாய நடவடிக்கைக்கு இடையூறு ஏற்படுத்தாதவாறு இருக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென பொது மக்களால் கோரிக்கை விடுக்கப்படுகின்றது. (அ-2-271)


இவர்களுக்கு மணமகள் தேவை — கல்யாண மாலை — இவர்களுக்கு மணமகன் தேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: திருவோணம்
கி.பா: 5 1/4
உயரம்: 182cm
தகைமை/தொழில்: BSC/ நிலஅளவையாளர் (டுபாய்)
தொ.இ: B/4046

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: கேட்டை
கி.பா: 29 1/2 உயரம்: 5'7''
தகைமை/தொழில்: BA/ முகாமைத்துவ உதவியாளர்
எதிர்பார்ப்பு: சைவபோசனம்
தொ.இ: B/4047

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: ரேவதி
கி.பா: 49 செவ் 7 இல்
உயரம்: 5'8"
தகைமை/தொழில்: DIPLOMA IN IT/ தனியார் தொழில் (இத்தாலி NOT PR)
தொ.இ: B/4050

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: ரோகினி
கி.பா: 23 சூரிசெவ் 12 இல்
உயரம்: 5'7"
தகைமை/தொழில்: MCP, MCTS, UKAP CIMA/ முகாமையாளர்
தொ.இ: B/4051

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1976 இந்து
நட்சத்திரம்: புனர்பூசம்
கி.பா: 36
உயரம்: 5'
தகைமை/தொழில்: O/L
எதிர்பார்ப்பு: சைவபோசனம்
தொ.இ: G/4092

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: விசாகம்
கி.பா: 62 செவ் 7 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: CIVIL ENGINEERING
தொ.இ: G/4096

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: கேட்டை
கி.பா: 64 செவ் 8 இல்
உயரம்: 5'தகைமை/தொழில்: பட்டதாரி/ அரச தொழில்
தொ.இ: G/4098

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: அத்தம்
கி.பா: 16 3/4
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: BBA/ கணக்காளர்
தொ.இ: G/4099

**கல்யாண மாலை**
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
... காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகாத்மா காந்தியடிகளின் 67 ஆவது சிரார்த்த தின நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை காந்தி சேவாசங்கம் நடத்தும் மகாத்மா காந்தியடிகளின் 67 ஆவது சிரார்த்த தின நிகழ்வு எதிர்வரும் 30 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சங்கத்தின் தலைவர் தி.இராசநாயகம் தலைமையில் இல.774, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள சங்கத்தின் யாழ்.மாவட்ட பணிமனையில் நடைபெறவுள்ளது.


பிற்பகல் 3 மணிக்கு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு முன்பாக யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியிலுள்ள காந்தி திருவுருவச்சிலைக்கு மலர் மாலை அணிவித்து மலர் அஞ்சலி செலுத்தும் நிகழ்வைத் தொடர்ந்து ஆரம்பமாகும் சிரார்த்த தின நிகழ்வின் வரவேற்புரையை காந்தீயம் ஆசிரியர் எம்.ஷாந்தன் சத்திய கீர்த்தி நிகழ்த்துவார். அருளாசியுரையை சின்மயா மிசன் யாழ்ப்பாணம் வதிவிட ஆச்சாரியார் பிரம்மச்சாரி ஜாக்ரத சைதன்யா வழங்குவார். பிரதம விருந்தினராக யாழ். இந்திய துணைத்தூதுவர் ஏ.நடராஜன் கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினர்களாக யாழ்.பல்கலைக்கழக ஓய்வுநிலைப் பேராசிரியர் மா.சின்னத்தம்பி, மூத்த காந்தியவாதி சோ.க.தம்பிப்பிள்ளை, மெய்யியல்துறை விரிவுரையாளர் ந.சிவகரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். காந்தீயம் பத்திரிகை வெளியீடும் இடம் பெறும். வெளியீட்டுரை யாழ்.பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தலைவர் மு.ஜெ.சுஜீந்திரன் வழங்குவார். சங்கத்தின் யாழ்.மாவட்ட கிளைத் தலைவர் கா.கார்த்திகேசு கவிதாஞ்சலி நிழ்த்துவார். 2014 காந்தி ஜெயந்தியை முன்னிட்டு நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டிக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் இடம்பெறும். (இ




# உரும்பிராய் வரை ஊடுருவியது கழிவு எண்ணெய்

(யாழ்ப்பாணம்)

**உரும்பிராய் சந்திப் பகுதியில் உள்ள வீட்டுக் கிணறு ஒன்றில் கழிவு எண்ணெய் நீரில் மிதப்பது வீட்டு உரிமையாளரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. உரும்பிராய் சந்திக்கு அண்மையில் மேற்குப் பக்கமாக 100 மீற்றர் தொலைவிலுள்ள வீட்டுக்கிணறு ஒன்றிலிருந்தே நீரில் கழிவு எண்ணெய் மிதப்பது அவதானிக்கப்பட்டுள்ளது.**



உரும்பிராயைச் சேர்ந்த பாலவண்ணன் என்பவரது வீட்டுக்கிணற்றிலிருந்தே இவ்வாறு கழிவு எண்ணெய் மிதப்பது அவதானிக்கப்பட்டுள்ளது. கடந்த இரண்டு, மூன்று தினங்களாக கிணற்று நீரில் எண்ணெய் படிந்திருப்பது போன்று காணப்பட்டதாகவும் இது நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்வதை மிகத் தெளிவாகக் காணக்கூடியதாக இருப்பதாகவும் பிரஸ்தாப வீட்டு உரிமையாளர் தெரிவித்தார்.

இந்த எண்ணெய்க் கசிவு தொடர்பாக சுகாதாரப் பகுதியினருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது.

இதேவேளை அயல் வீடுகள் சிலவற்றிலும் கழிவு எண்ணெய் கிணற்று நீரில் மிதப்பதாகவும் கூறப்படுகின்றது. இவ்வாறு நாளுக்குநாள் கழிவு எண்ணெய் பரவி குடாநாட்டு நீரில் கலந்து பெரும் பாதகத்தை விளைவிப்பது குறித்து மந்த கதியில் நடவடிக்கைகள் இடம் பெறுவது குறித்துப் பலரும் கவலையடைந்துள்ளனர். எனினும் இந்தப் பிரச்சினையின் தீவிரம் குறித்து சம்பந்தப்பட்டவர்களின் நடவடிக்கைகள் திருப்தியளிப்பதாக இல்லை என சமூக ஆர்வலர்கள் ஆதங்கத்துடன் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை சுன்னாகத்தில் இருந்து மருதனார்மடம் இணுவில் பகுதிகளுக்கு இந்த எண்ணெய்க் கசிவு ஏற்பட்டுள்ளதாக ஏற்கனவே செய்திகள் வெளியாகியிருந்தன. தற்போது உரும்பிராய் பகுதியிலும் இந்த எண்ணெய்க் கசிவு அவதானிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இந்த எண்ணெய்க்கசிவு தொடர்பாக ஆராய்வதற்கு 9 பேர் கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக வடமாகாண சபை அறிவித்துள்ளது.

எது எவ்வாறாகவிருப்பினும் இந்த எண்ணெய்க்கசிவின் விபரீதத்தை உணர்ந்து விரைவாக தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என பல தரப்பட்டவர்களும் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-5)

## இல்லமெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

கச்சாய் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையின் இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை பொது மைதானத்தில் பாடசாலை அதிபர் கா. குணசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமாரும் சிறப்பு விருந்தினராக ஓய்வுபெற்ற அதிபரும் பாடசாலையின் பழைய மாணவியுமான செ.பத்மநாதனும் கலந்து கொள்ளவுள்ளனர். (இ

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் கந்தரோடை ஸ்கந்தவரோதயா ஆரம்பப் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் 30 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப. 1.30 மணிக்கு பாடசாலை பொது மைதானத்தில் பாடசாலை அதிபர் வ.நந்தீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கொழும்பு பழைய மாணவர் சங்கப் பிரதிநிதி இ.இராஜவிஜயன், சிறப்பு விருந்தினராக வலிகாம கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் பா.சிவன்சேய், கௌரவ விருந்தினராக உடுவில் பிரதேச செயலக முகாமைத்துவ உதவியாளர் ந.வரதயோகர், துறைசார் விருந்தினராக இலங்கை தேசிய இளைஞர் சேவை சம்மேளன உபதலைவர் செ.விஜிதரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ




# முறையற்ற நிர்வாகத் தெரிவுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

சுதுமலை நாமகள் சனசமூக நிலைய முறையற்ற நிர்வாகத் தெரிவு தொடர்பாக நிலவிய முரண்பாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் வடமாகாண முதலமைச்சர் செயலகம் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் சி.திருவாகரன் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

21.09.2014 அன்று நடைபெற்ற சுதுமலை நாமகள் சனசமூக நிலையத்தின் புதிய நிர்வாகத் தெரிவு முறையற்ற விதத்தில் நடைபெற்றதாகத் தெரிவித்து அப்பகுதி மக்களால் ஒப்பமிடப்பட்ட கடிதம் ஒன்று யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

இது விடயம் தொடர்பாக வடமாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரினால் அனுப்பப்பட்டுள்ள அக்கடிதத்தில் சுதுமலை நாமகள் சனசமூக நிலைய நிர்வாகத் தெரிவானது பிரதேச சபை மூலம் நிர்வாக அங்கத்துவ விண்ணப்பப்படிவத்தை வழங்கி குறித்த காலத்தின் பின்பு மொத்த அங்கத்துவப் படிவங்களையும் பெற்று பிரதேச சபையின் செயலாளர், சனசமூக உத்தியோகத்தரினால் பொதுக்கூட்டத்தை கூட்டி சனசமூக நிலைய நிர்வாக சபையைத் தெரிவு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக என்று அறிவித்துள்ளார். (இ

# யாழ். மாவட்ட சுற்றாடல் முன்னோடிப் பாசறை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட சுற்றாடல் முன்னோடிப் பாசறை நிகழ்வு எதிர்வரும் 31 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு வட்டுக்கோட்டை தொழில்நுட்பக்கல்லூரியில் வட மாகாண மத்தியசுற்றாடல் அதிகாரசபை பிரதிப் பணிப்பாளர் வி.சத்தியகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண சபை முதலமைச்சர் சி.வி. விக்கினேஸ்வரனும் சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண விளையாட்டுத்துறை அமைச்சர் த.குருகுலராஜா, வடமாகாண விவசாயத்துறை அமைச்சர் பொ.ஐங்கரநேசன் யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், வடமாகாண கல்விப்பணிப்பாளர் ஏ.இரா ஜேந்திரன், மத்திய சுற்றாடல் அதிகாரசபை பிரதிப் பணிப்பாளர் ஜயவிலால் பெர்னாந்து ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக வடமாகாண உதவிக் கல்விப் பணிப்பாளர் கே.ஏ.சிவனருள்ராஜா யாழ். மாவட்ட சுற்றாடல் முன்னோடி ஆலோசகர் பி.சண்முகதேவன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இப் பாசறை நிகழ்வில் நெல்லியடி மத்திய கல்லூரி, இராமநாதன் கல்லூரி, கொட்டடி நமசிவாய வித்தியாலயம், மானிப்பாய் மகளிர் கல்லூரி, கலாநிதி ஆ.தியாகராசா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளைச்சேர்ந்த மாணவர்கள் பங்குகொள்ள வுள்ளனர்.

இதேவளை இப்பாசறை நிகழ்வின் ஓர் அங்கமான கள ஆய்விற்காக மாணவர்கள் பளையில் இயங்கும் காற்றாலைக்கு அழைத்து செல்லப்படவுள்ளனர் என வடமாகாண பதில் பிரதிக் கல்விப்பணிப்பாளர் வி.சத்தியகுமார் அறிவித் துள்ளார். (இ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சதித் திட்டம் தொடர்பில் தகவல் கிடைத்துள்ளது

## சரத் பொன்சேகா தெரிவிப்பு

யுத்தத்தை காரணம் காட்டி இன்னமும் வடக்கில் இராணுவ ஆக்கிரமிப்பினை மேற்கொள்வது ஜனநாயகத்திற்கு எதிரானது. வடக்கில் இருந்து இராணுவத்தினரை குறைக்க வேண்டும் என தெரிவிக்கும் ஜனநாயகக் கட்சியின் தலைவர் சரத் பொன்சேகா தேர்தலை தடுக்க இராணுவ யுக்திகளை பயன்படுத்திய தகவல்கள் எமக்கும் கிடைத்துள்ளது எனவும் தேசிய நிறைவேற்று சபையில் அங்கம் வகிப்பதனூடாக வடக்கின் இராணுவக் குறைப்புக்களை மேற்கொண்டு பொதுமக்களின் காணிகளை பெற்றுக் கொடுக்க வலியுறுத்தப்படுமா? என வினவிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித் தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சர்வதேச அளவில் இன்றும் விடுதலைப் புலிகளின் செயற்பாடுகள் இயங்கி கொண்டிருக்கின்றது. அதனுடன் தொடர்புபட்டு இலங்கையிலும் சிலர் செயற்படுகின்றனர் என்பதும் தெரியும். ஆனால் இலங்கையில் மிக சரியான அரசியல் செயற்பாடுகளை மேற்கொள்வதன் மூலமும் பாதுகாப்பு செயற்பாடுகளை சரியாக கையாள்வதன் மூலமும் விடுதலை புலிகளின் செயற்பாடுகளை தடுக்க முடியும். அதற்காக பொது மக்களின் செயற்பாடுகளுடன் இராணுவத்தினை தலையிட செய்து இராணுவ ஆக்கிரமிப்பினை மேற்கொள்ள முயற்சித்தமை தவறானது.

யுத்த கால கட்டத்தில் விடுதலை புலிகளின் ஆக்கிரமிப்பினை கட்டுப்படுத்தி வடக்கு கிழக்கினை பாதுகாக்க இராணுவத்தினரின் உதவி தேவைப்பட்டது. விடுதலை புலிகளுக்கு முற்றுப்புள்ளி வைத்து நாட்டை பாதுகாத்து விட்டோம். இப்போதும் யுத்தத்தை காரணம் காட்டி பொதுமக்களுக்கு இடையூறு விளைவிப்பது ஜனநாயகத்தினை மீறும் செயற்பாடாகும்.

அதேபோல் தேர்தல் காலத்தில் வடக்கில் பொது மக்களின் வாக்களிப்பினை தடுக்கவும் அச்சுறுத்தல்களை செய்து தேர்தல் முடிவுகளை மாற்றவும் இராணுவத்தினரை பயன்படுத்தியதாக குறிப்பிடும் குற்றச்சாட்டுக்கள் எந்தளவிற்கு உண்மை என்பது எனக்கு தெரியாது. அவ்வாறு இராணுவத்தை பயன்படுத்தி அச்சுறுத்தும் செயற்பாடுகளில் எவரேனும் செயற்பட்டிருந்தால் அது தண்டனைக்குரிய குற்றமாகும்.

எனினும் பொதுவாகவே இராணுவத்தின் உதவியுடன் தேர்தல் தலையீடுகளில் செயற்பட முக்கிய நபர்கள் சிலர் முயற்சிகளை மேற்கொண்டார்கள் என்ற குற்றச்சாட்டு தொடர்பில் ஆரம்பத்தில் எனக்கும் சில தகவல்கள் கிடைக்க பெற்றிருந்தது. எனினும் நாம் முடிந்தளவு முயற்சி செய்து குற்றங்கள் நடைபெறாத வண்ணம் தடுத்து ஜனநாயக ரீதியிலான தேர்தலை நடத்தியுள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார்.(இ-5)

# பேசும் படம் - 10

திருநெல்வேலி பரமேஸ்வராச் சந்தியில்



மோட்டார் சைக்கிள் கம்பனிக்காரர் பார்த்திட்டா
சிறந்த கண்டுபிடிப்புக்கான விருது உங்களுக்குத் தான்

குறிப்பு: அன்பு வாசகர்களே! நீங்களும் பேசும் படங்களை உங்கள் பெயர், முகவரி, சம்பவம் நிகழ்ந்த இடம் என்பவற்றுடன் அனுப்பி வைக்க முடியும்.

மின்னஞ்சல் : valampuriijaffna@gmail.com

facebook: www.facebook.com/valam.puri.1

தபால் முகவரி :ஆசிரியர், பேசும் படம்,வலம்புரி,
இல.03, 2-ம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

அல்லது நேரில்.

அனுப்பியவர்:
G.மதீசன்
திருநெல்வேலி.

# அரசியல் பழிவாங்கல் செய்ய வேண்டுமாயின் என்னிடமும் தந்தையிடமும் மேற்கொள்ளுங்கள்

## மகிந்தவின் மகன் நாமல் கூறுகிறார்

(கொழும்பு)

**அரசியல் ரீதியாக பழிவாங்கல் செய்ய வேண்டுமாயின் என்னிடமும் என் தந்தையிடமும் மேற்கொள்ளுங்கள் என நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.எனது தாயார் எந்தவொரு ஊழல் மோசடிகளிலும் ஈடுபட்டதில்லை.**

முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர் வாஸ் குணவர்த்தனவின் மனைவி கூறுவதனைப் போன்று எனது தாயாரான ஷிராந்தி ராஜபக்ஷ எந்தவிதமான தங்க மோசடிகளிலும் ஈடுபட்டதில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

திறைசேரியில் காணப்படும் தங்கத்தை கொள்ளையிட்டதாக என் தாய் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

தங்க மோசடியில் ஈடுபட்டதாக சுமத்தப்படும் குற்றச்சாட்டை முற்று முழுதாக எனது குடும்பத்தின் சார்பில் நிராகரிக்கின்றேன்.



எனது தாயாருக்கும் குடும்பத்திற்கும் மிகவும் இழிவான முறையில் சேறு பூசும் நோக்கில் இவ்வாறான குற்றச்சாட்டுக்கள் முன் வைக்கப்படுகின்றன.

எனது குடும்ப உறுப்பினர்கள் ஐந்து பேரில் நானும் தந்தையும் மட்டுமே அரசியலில் ஈடுபட்டோம்.

எனது தாயாரும் இரண்டு சகோதரர்களும் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டதில்லை.

எவருக்கேனும் அரசியல் ரீதியாக பழிவாங்க வேண்டுமாயின் என்னையும் எனது தந்தையும் அதற்காக பயன்படுத்திக் கொள்ள முடியும்.

எனது தாய் எந்தவொரு மோசடியிலும் ஈடுபடவில்லை. உண்மையான விபரங்கள் வெளியிடப்படும் என நம்புகின்றேன் என நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதியின் பாரியார் ஷிராந்தி ராஜபக்ஷவிற்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள தங்க மோசடி குற்றச்சாட்டு குறித்து கொழும்பு ஊடகங்களுக்கு விளக்கமளித்த போது நாமல் ராஜபக்ஷ இதனைத் தெரிவித்துள்ளார். (இ-5)

# பிரதம நீதியரசராக மொஹான் பீரிஸ்!

(கொழும்பு)

சட்டத்தரணிகள் சங்கம் எந்த அறிவித்தல்களை விடுத்தாலும் அதனை பொருட்படுத்தாது பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் தமது பணியை தொடர்வார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது

பிரதம நீதியரசரின் பேச்சாளர் என்று தம்மை அடையாளப்படுத்திக் கொள்ளும் சட்டத்தரணி விஜேரட்ன கொடிப்பிலி இதனை தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தேர்தலின் பின்னர் மேற்கொள்ளப்பட்டதாக கூறப்படும் புரட்சி முயற்சியில் மொஹான் பீரிஸும் தொடர்பு கொண்டிருந்தார் என்ற குற்றச்சாட்டை முன்வைத்து, அவரை பதவி விலகுமாறு சட்டத்தரணிகள் சங்கம் கோரிக்கை விடுத்து வருவது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# முகப்புத்தகம் முடங்கியது!

உலகின் முன்னணி சமூக வலைத்தளங்களில் ஒன்றான முகப்புத்தகத்தின் சேவை நேற்று செவ்வாய்க்கிழமை 5 நிமிடங்கள் முடக்கப்பட்டிருந்தது.

முகப்புத்தகத்தை பயன்படுத்தும் பயனாளிகள் பலருக்கு வலையமைப்பை பாவித்துக்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டிருந்தது.

முகப்புத்தகத்தில் உள்நுழைவதற்கு முயற்சிக்கும் போது மன்னிக்கவும், வலையமைப்பில் பிரச்சினை ஏற்பட்டுள்ளது. கூடிய விரைவில் [illegible] செய்தி [illegible] (இ-5)

# குமார் குணரத்தினத்திற்கு மீண்டும் சிக்கல்

முன்னிலை சோஷலிச கட்சியின் மத்திய குழு உறுப்பினர் குமார் குணரத்தினம் மீண்டும் நாடு கடத்தப்படலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜனாதிபதி தேர்தல் காலத்தில் இலங்கைக்கு வந்த குமார் குணரத்தினம் அரசியல் செயற்பாடுகளிலும் பொது கூட்டங்களிலும் கலந்து கொள்ளவுள்ளார்.

இந்நிலையில் வாக்குமூலம் ஒன்றை வழங்கவென குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்திற்கு வருமாறு குமார் குணரத்தினம் நேற்று அழைக்கப்பட்டுள்ளதாக முன்னிலை சோஷலிச கட்சி யின் பிரசார செயலாளர் புபுது ஜயகொட தெரிவித்தார்.


ஆனால் குமார் குணரத்தினம் வாக்குமூலம் அளிக்கச் செல்ல மாட்டார் என அவர் கூறினார்.

சட்ட ஆலோசனைகளைப் பெற்றுக் கொண்டு பின்னர் செல்வார் என அவர் தெரிவித்தார்.

நல்லாட்சி என்று கூறிக் கொண்டு இந்த அரசாங்கமும் பொய் குற்றச்சாட்டுக்களை முன்வைத்து ஜனநாயக உரிமையை பறிப்பதாக முன்னிலை சோஷலிச கட்சியின் பிரசார செயலாளர் புபுது ஜயகொட தெரிவித்தார். (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வான்வழித் தாக்குதலில் சிக்கி 35 தீவிரவாதிகள் உயிரிழப்பு!



**(பெஷாவர்)**

**பாகிஸ்தானில் பாடசாலையில் மேற்கொள் ளப்பட்ட தலிபான் தீவிரவாதிகளின் கொலை வெறித் தாக்குதலையடுத்து அந்நாட்டு அரசு படைகள் தீவிரவாதிகளுக்கு எதிரான தாக்கு தலை முடுக்கி விட்டுள்ளது. இந்நிலையில் நேற்று முன்தினம் நள்ளிரவு வேளை பாகி ஸ்தான் போர் விமானங்கள் மேற்கொண்ட தாக்குதலில் 35 தீவிரவாதிகள் உயிரிழந் துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.**

இந்தத் தாக்குதல் குறித்து மேலும் தெரிய வருவதாவது.

பாகிஸ்தானின் பெஷாவரில் உள்ள இராணுவ பாடசாலையில், கடந்த டிசெம்பர் மாதம் 16 ஆம் திகதி தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 133 குழந்தைகள் உட்பட 154 பேர் உயிரிழந்தனர். இதனையடுத்து தீவிரவாதிகள் மீதான தாக்குதலை பாகிஸ்தான் இராணுவம் தீவிரப்படுத்தியுள்ளது.

இந்த நிலையில் வடக்கு வஜிரிஸ்தானில் உள்ள தத்தா ஹெல் பகுதியில் பாகிஸ்தான் இராணுவம் போர் விமானங்கள் மூலமாக வான்வழி தாக்குதல் நடத்தியது.

இந்த அதிரடி தாக்குதலில் வெளிநாட்டு தீவிரவாதிகள் உட்பட 35 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர்.

வடக்கு வஜிரிஸ்தானில் கடந்த ஆண்டு ஜூன் மாதம் முதல் பாகிஸ்தான் இராணுவம் நடத்தி வரும் தாக்குதலில் இதுவரை ஆயிரத்து 200 இற்கும் மேற்பட்ட தீவிரவாதிகள் கொல்லப்பட்டு இருப்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## சோதனை மேல் சோதனை

மலேசிய ஏர்லைன்ஸ் விமான நிறுவனத்திற்கு கடந்த ஆண்டு சோதனையாக அமைந்தது. இந்த ஆண்டும் அதே சோதனை தொடர்கிறது. மார்ச் மாதம் 8 ஆம் திகதி மலேசியாவில் இருந்து சீனா நோக்கி 227 பயணிகளுடன் சென்ற இந்த நிறுவனத்தின் எம்.எச்.370 என்ற விமானம் மாயமானது. இதேபோல், கடந்த ஜூலை மாதம் 17 ஆம் திகதி நெதர்லாந்தில் இருந்து மலேசியா நோக்கி சென்ற மலேசிய ஏர்லைன்ஸ் விமானம் உக்ரைன் ரஷ்ய எல்லைப்பகுதியில் சென்ற போது சுட்டு வீழ்த்தப்பட்டது. இதில் விமானத்தில் பயணம் செய்த 283 பயணிகள் உயிரிழந்தனர்.

தற்போது மலேசிய ஏர்லைன்சின் இணையத்தளம் முடக்கப்பட்டு உள்ளது. இதனை ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகள் முடக்கி இருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது. இணையத்தளத்தை திரும்ப பெரும் முயற்சியில் அதிகாரிகள தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

முதலில் ஏர்லைன்சின் இணையத்தளம் மாற்றப்பட்டது. முத லில் 404 விமானம் கிடைக்கவில்லை என அதில் தகவல் வெளியிடபட்டது. மேலும் அதில் 3 அடையாளம் தெரியாத டுவிட்டர் கணக்குகளும், ஒரு ராப் பாடலும் இடம் பெற்று இருந்தது. இணையத்தளம் ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகளின் சைபர் குரூப்பால் முடக்கப்பட்டது. பின்னர் அதில் ஒரு பல்லியின் படம் இடம் பெற்றது.பிறகு ஐ.எஸ்.ஐ.எஸ் இயக்கத்தின் குறிப்பு நீக்கப்பபட்டு பல்லி அணி அதிகார பூர்வ ஐ.எஸ். ஐ.எஸ்.சைபர்பிரிவு என குறிப்பிடப்பட்டுள்ளது. (இ-5)




## நேட்டோ போர் விமானம் விழுந்து நொறுங்கி விபத்து!

### 10 பேர் பலி, 19 பேர் படுகாயம்; பல விமானங்களுக்கும் சேதம்



இந்நிலையில் நேற்று முன் தினம் மாலை கிரேக்க நாட்டை சேர்ந்த எப்16 ரக ஜெட் போர் விமானத்தில் நேட்டோபடை வீரர்களுக்கு ஸ்பெயின் நாட்டில் அல்பாசிட் என்ற இடத்தில் விமான படைத்தளம் உள்ளது. இங்கு 'நேட்டோ' அமைப்பை சேர்ந்த அமெரிக்கா, டென்மார்க், ஜேர்மனி, பெல்ஜியம் மற்றும் இங்கிலாந்து நாடுகளை சேர்ந்த படை வீரர்கள் முகாமிட்டுள்ளனர்.

பயிற்சி அளிக்கப்பட்டது. அப்போது விமானத்தின் இயந்திரத்தில் கோளாறு ஏற்பட்டதால் நிலத்தில் தவறி விழுந்தது. அதனால் விமானம் நொறுங்கி தீப்பிடித்தது. இந்த விபத்தில் விமானத்தில் இருந்த 2 கிரேக்க விமானிகள் உட்பட 10 பேர் அதே இடத்தில் பலியாகினர். 19 பேர் காயம் அடைந்தனர்.

காயம் அடைந்தவர்களில் பெரும்பாலானவர்கள் பிரான்ஸ் மற்றும் இத்தாலியை சேர்ந்தவர்கள். விபத்துக்குள்ளான விமானம் விமான படை தளத்துக்குள் விழுந்து தீப்பிடித்தது. இதனால் அங்கு ஏற்கனவே நிறுத்தி வைத்திருந்த 5 விமானங்கள் கடும் சேதம் அடைந்தன. தகவல் அறிந்ததும் மீட்பு குழுவினர் அங்கு விரைந்து சென்றனர்.

விபத்து குறித்து, 'நேட்டோ' செக்ரட்டரி ஜெனரல் ஜென்ஸ் ஸ்டோலன் பெர்க் ஒரு அறிக்கை விடுத்துள்ளார். அதில், "இந்த சோகமான சம்பவத்தால் நேட்டோ குடும்பம் முற்றிலும் பாதிக்கப்பட்டுள்ளது.

இந்த விபத்தில் பலியானவர்களின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்து கொள்கிறேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

## மதகுருமார்கள் உள்ளிட்ட 9ஆயிரம் பேர் கைதாகினர்

### தீவிரவாதிகளுக்கு எதிராக பாக்.தீவிரம்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின் பெஷாவரில் உள்ள இராணுவ பாடசாலையில் கடந்த டிசெம்பர் மாதம் 16 ஆம் திகதி தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 145 குழந்தைகள் உட்பட 154 பேர் உயிரிழந்தனர். இதனையடுத்து தீவிரவாதிகள் மீதான தாக்குதலை பாகிஸ்தான் இராணுவம் தீவிரப்படுத்தியுள்ளது.

இந்தநிலையில் வடக்கு வஜிரிஸ்தானில் உள்ள தத்தா ஹெல் பகுதியில் பாகிஸ்தான் இராணுவம் போர் விமானங்கள் மூலமாக வான் வழி தாக்குதல் நடத்தியது.

இந்த அதிரடி தாக்குதலில் வெளிநாட்டு தீவிரவாதிகள் உட்பட 35 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர். இந்த தகவலை ஐ.எஸ்.பி.ஆர். என்ற மக்கள் செய்தி மையம் தெரிவித்துள்ளது.

வடக்கு வஜிரிஸ்தானில் கடந்த ஆண்டு ஜூன் மாதம் முதல் பாகிஸ்தான் இராணுவம் நடத்தி வரும் தாக்குதலில் இதுவரை ஆயிரத்து 200 இற்கும் மேற்பட்ட தீவிரவாதிகள் கொல்லப்பட்டுள்ளனர்.

தொடர்ந்து பாதுகாப்பு படையில் தீவிரவாதிகள் மீது அவர்களின் ஆதரவாளர்கள் மீது நடவடிக்கை எடுத்து வருகின்றனர். தீவிரவாதிகள் வேட்டையில் தீவிரவாதிகள் என சந்தேகப்படும் 3 ஆயிரம் மத குருமார்கள் உட்பட 9 ஆயிரம் பேரை பொலிஸார் கைது செய்து ள்ளனர்.

பாகிஸ்தானின் பஞ்சா,கைபர் எல்லைப்புறப்பகுதி மற்றும் இஸ்லாமாபாத்தில் உள்ள பல மசூதிகளில் இருந்து 3ஆயிரத்து 100க்கும் மேற்பட்ட மத குருமார்கள் கைது செயயப்பட்டுள்ளனர்.தீவிரவாத செயல்களில ஈடுபட்டதாக சந்தேகப்பட்ட 3 ஆயிரத்து 650 ஆப்கானிஸ்தான் அகதிகளும்கைது செய்யப்பட்டுளளனர்.

கைபர் எல்லைபுற பகுதியில் நடத்திய வேட்டையில் 6ஆயிரத்து 702 தீவிரவாதிகள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## 5000 விமான சேவைகள் இரத்து

வடகிழக்கு அமெரிக்கா மற்றும் கனடாவின் சில பகுதிகளில் 5 ஆயிரத்துக்கும் மேலான விமான் சேவைகள் இரத்து செய்யப்பட்டுள்ளன.அங்கு சரித்திரத்தில் இதுவரை இல்லாத வகையில் பனிப் பொழிவு ஏற்படக்கூடும் என்று அமெரிக்காவின் தேசிய வானிலை சேவைகள் மையம் அறிவித்துள்ளதை அடுத்தே இந்த அளவுக்கு விமான சேவைகள் இரத்து செய்யப்பட்டுள்ளன.

அப்பகுதிகளில் வீசும் என்று எதிர்பார்க்கப்படும் குளிர்காலப் புயல் காரணமாக 90 செ.மீ அளவுக்கு பனிப்பொழிவு ஏற்படக் கூடும் என்று வானியல் வல்லுநர்கள் அறிவித்துள்ளனர்.மேலும் மணிக்கு 120 கிலோ மீற்றர் வேகத்தில் கடுமையான காற்றும் வீசும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

இதனிடையே மக்களை வீட்டைவிட்டு வெளியே வரவேண்டாம் என நியூயோர்க்கின் மேயர் கூறியுள்ளார்.கனெக்டிகட் மாநில நிர்வாகமோ அங்கு போக்குவரத்துத்துகளை தடை செய்ய உத்தேசித்துள்ளது. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெ.சதிக்குள் வீழ்ந்துவிடாதீர் இந்தியாவுக்கு சீனா எச்சரிக்கை

(பீஜிங்)

**அமெரிக்க சதிவலையில் வீழ்ந்துவிட வேண்டாம் என குடியரசு தின விழாவையொட்டி வெளியிட்ட செய்தியில் இந்தியாவுக்கு சீனப் பத்திரிகைகள் எச்சரிக்கை விடுத்துள்ளன. சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் இந்திய ஜனாதிபதி பிரணாப் முகர்ஜிக்கு அனுப்பியுள்ள குடியரசு தின வாழ்த்துச் செய்தியில் இந்தியா-சீனா உறவு மேம்பட்டு இரு நாடுகளுக்கும் இடையே அமைதி மேலோங்க வேண்டும் என சீனா விரும்புகிறது என தெரிவித்துள்ளார்.**



இதற்கிடையே நேற்று முன் தினம் சீனாவில் வெளியான குளோபல் டைம்ஸ், பீப்பிள்ஸ் டெய்லி ஆகிய இரண்டு பத்திரிகைகளிலும் வெளியான கட்டுரைகளில், அமெரிக்க சதிவலையில் இந்தியா வீழ்ந்துவிட வேண்டாம். சீனாவுக்கு எதிராக இந்தியாவை திசை திருப்பவே அண்மைகாலமாக, அமெரிக்கா இந்தியாவுடன் அதிகளவு நெருக்கம் காட்டுகிறது.

அமெரிக்க ஜனாதிபதி ஒருவர் தனது பதவிக்காலத்தில் இரண்டாவது முறையாக இந்தியாவுக்கு பயணம் மேற்கொண்டுள்ளது சர்வதேச அளவில் அனைவரது கவனத்தையும் ஈர்த்துள்ளது.

சீனாவின் எழுச்சியை கட்டுப்படுத்த ஆசிய நாடுகளில் தனது ஆதிக்கத்தை விஸ்தரிக்க விரும்பும் அமெரிக்கா, இந்தியாவை கூட்டாளியாக மாற்றிக்கொள்ள தனது பிடிவாதங்களை தளர்த்தி, வேறுபாடுகளை களைந்து பெரும் முயற்சி எடுத்து வருகிறது என மேற்கத்தேய நாளிதழ்களில் வெளியாகியுள்ள சில செய்திகளும் சீன செய்திக் கட்டுரையில் மேற்கோள் காட்டப்பட்டுள்ளது.

இந்தியாவுடன் நட்பு பாராட்டுவதால் நெருங்கி வந்து சீனாவுக்கும் -இந்தியாவுக்கும் இடையே நிரந்தரப் பகையை ஏற்படுத்துவதே அமெரிக்காவின் திட்டம்.

மிகவும் நேர்த்தியாக, சாதுரியமாக விரிக்கப்பட்டுள்ள இந்த வலையில் இந்தியா சிக்கிவிடக் கூடாது. இந்தியா - சீனா இடையே நிலவும் மிகவும் சிக்கலான பிரச்சினைகளைக்கூட பேச்சுவார்த்தை மூலம் தீர்த்துக்கொள்ள இரு நாடுகளும் முன்வர வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா 3 நாட்கள் சுற்றுப்பயணமாக இந்தியா சென்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## வரலாறு காணாத பனிப்புயல்; அமெ.மக்களுக்கு எச்சரிக்கை

### நியூயோர்க் ஸ்தம்பித்தது

அமெரிக்காவின் நியூயோர்க்கில் அடுத்த இரண்டு நாட்களுக்கு வரலாறு காணாத பனிப்புயல் தாக்க உள்ளதால் நகர மக்களின் இயல்பு வாழ்க்கை பெருமளவில் பாதிப்படைந்துள்ளது.

சுமார் 90 செ.மீ அளவில் பனி பதிவாகும் என்பதால், பனிப்புயலின் தாக்கம் மோசமானதாக இருக்கும் எனவும், மணிக்கு 130 கி.மீ அளவில் பலத்த காற்று வீசும் என்வும் தேசிய வானிலை மையம் எச்சரித்துள்ளது.

எதிர்வரும் ஆபத்தை சமாளிக்க நியூயோர்க் அரசு பாதுகாப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை தொடங்கியுள்ளது.

மேலும் New York, New Jersey, Connecticut, Rhode Island, Massachusetts மற்றும் New Hampshire நகரங்களில் 'அவசர நிலை' பிரகடனப்படுத்தி உள்ளதாக அரச அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சுமார் 6,500 விமானங்களின் சேவைகளை இரத்து செய்ததுடன், அங்குள்ள வர்த்தக நிறுவனங்கள், பாடசாலைகள் உள்ளிட்டவைகளை மூட உத்தரவிட்டுள்ளதாகவும் அரசு தெரிவித்துள்ளது.

வானிலை மைய நிபுணரான Glenn Field கூறுகையில், ஒட்டு மொத்த Massachusetts பகுதிகளில் சுமார் 76 செ.மீ அளவிற்கு பனி பொழிவு காணப்படும் என்றார்.

நியூயோர்க் நகரின் 13 மண்டலங்களில் உள்ள எந்த வீதியிலும் வாகனங்களை பயன்படுத்தக் கூடாது எனவும், மீறி வாகனத்தை பயன்படுத்துபவர்கள் மீது குற்றவியல் சட்டம் பாயும் எனவும் ஆளுநர் Andrew Cuomo எச்சரித்துள்ளார்.

வடகிழக்கு அமெரிக்காவை பனிப்புயல் தாக்க கூடும் என்பதால், கனடாவின் எல்லையோர நகரங்களும் பாதிப்பிற்கு உள்ளாகும் என வானிலை மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது. (இ-5)



*மூன்று நாட்கள் பயணமாக இந்தியா வந்துள்ள அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற கைலாஷ் சத்யார்த்தியை சந்தித்து கலந்துரையாடியுள்ளார். 2009 ஆம் ஆண்டு அமைதிக்கான நோபல் பரிசு பெற்றவரான ஜனாதிபதி ஒபாமா, குடியரசு தினமான நேற்று முன்தினம் ராஷ்டிரபதி பவனில் நடந்த விருந்து ஒன்றில் கைலாஷ் சத்யார்த்தியை சந்தித்து சில நிமிடங்கள் உரையாடினார். இந்நிலையில் நேற்று தனது நிகழ்ச்சிகள் முடிவடைந்த பின் கைலாஷ் சத்யார்த்தியுடன் ஒபாமா விரிவான கலந்துரையாடலை மேற்கொண்டார். இதேவேளை சத்யார்த்தியால் மீட்கப்பட்ட மூன்று சிறுவர்களையும் ஒபாமா சந்தித்தார்.*

*இந்த மூவரும் கைலாஷ் சத்யார்த்தி நடத்தும் பச்பன் பந்தோ அதோலன் (குழந்தைப்பருவ பாதுகாப்பு) என்ற இயக்கத்தின் மூலம் மீட்கப்பட்டவர்கள் ஆவார்கள். மூவரில் தீபக்(வயது-8), அயூப் கான் (வயது-12), என்ற இருவரும் குழந்தை தொழிலாளர்களாக இருந்தவர்கள்.பயல் (வயது-14) என்ற சிறுமி கட்டாய திருமணத்திலிருந்து காப்பாற்றப்பட்டவள்.1980 இல் கைலாஷ் சத்யார்த்தியால் தொடங்கப்பட்ட இந்த இயக்கத்தின் மூலம் இதுவரை 83 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குழந்தை தொழிலாளர்கள் மீட்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (இ-5)*

## பொலிஸ்-பொதுமக்கள் மோதல் எகிப்தில் 18 பேர் உயிரிழந்தனர்

(கெய்ரோ)

எகிப்தில் பொலிஸாருக்கும் ஆர்ப்பாட்டக்காரர்களுக்குமிடையே இடம்பெற்ற மோதலில் குறைந்தது 18 பேர் பலியானதுடன் பலர் காயமடைந்துள்ளனர்.

பலியானவர்களில் 3 பொலிஸ் உத்தியோகத்தர்கள் உள்ளடங்குகின்றனர். கடந்த சனிக்கிழமை கெய்ரோ நகரில் இடம்பெற்ற எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்றில் ஆர்ப்பாட்டக்காரர் ஒருவர் பலியானதையடுத்தே இந்த மோதல் இடம்பெற்றுள்ளது.

2011 ஆம் ஆண்டு இடம்பெற்ற மக்கள் எழுச்சியின் நான்காவது ஆண்டு தினத்தைக் குறிக்கும் வகையிலேயே மேற்படி ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள் இடம்பெற்றன. இந்த மக்கள் எழுச்சியின் நான்காவது ஆண்டு தினத்தையொட்டி அந்நாட்டின் பாதுகாப்பு என்றுமில்லாதவாறு பலப்படுத்தப்பட்டிருந்தது.

கெய்ரோவில் நடைபெற்ற ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் இடம்பெற்ற மோதலிலேயே பொலிஸ் உத்தியோகத்தர்கள் பலியாகியுள்ளனர். வட நகரான அலெக்ஸாண்ட்ராவில் ஆர்ப்பாட்டக்காரர்கள் பலர் கொல்லப்பட்டுள்ளனர். அதே சமயம் 400இற்கு மேற்பட்டவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். (இ-5)

### கண்ணிவெடி தாக்குதலில் பாகிஸ்தானில் 5 பேர் பலி!

பாகிஸ்தானின் பலுசிஸ்தான் மாகாணத்தில் தேரா முராத் ஜமாலியில உள்ள சத்தார் மலைப்பகுதியில் ஆட்களை ஏற்றிக்கொண்டு ஒரு வாகனம் சென்று கொண்டிருந்தது. அப்போது வீதியில் புதைத்து வைத்திருந்த கண்ணிவெடி வெடித்து சிதறியது.

அதில் வாகனம் தூள் தூளாக நொறுங்கியது. இச்சம்பவத்தில் 4 பேர் அதே இடத்தில் பலியாகினர். ஒருவர் வைத்தியசாலைக்கு செல்லும வழியில் உயிரிழந்தார். இவர்கள் தவிர ஒருவர் காயத்துடன் வைத்தியசாயையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இத்தாக்குதலுக்கு எந்த ஒரு தீவிரவாத அமைப்பும் பொறுப்பு ஏற்கவில்லை. இந்த நிலையில் பலுசிஸ்தான் பகுதியில் பொலிஸார் நடத்திய அதிரடி சோதனையில் 50 ஆயிரம் துப்பாக்கி குண்டுகள் பறிமுதல் செய்யப்பட்டன. (இ-5)

## ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளிடம் இருந்து குர்திஷ் படையினர் முக்கிய நகரை மீட்டனர்

(பெய்ரூட்)

சிரியா மற்றும் ஈராக்கில் ஐ.எஸ். ஐ.எஸ். தீவிரவாதிகள் புதிய நாடு உருவாக்கியுள்ளனர். இவர்களின் ஆதிக்கத்தை ஒடுக்க அமெரிக்காவும் அதன் தோழமை நாடுகளும் இணைந்து தாக்குதல் நடத்தி வருகின்றன.

இவர்களுக்கு ஈராக் மற்றும் சிரியாவில் வாழும் குர்திஷ் இன மக்களின் குர்திஷ் படையும் உதவி வருகின்றன. ஈராக்கில் ஐ.எஸ். ஐ.எஸ். தீவிரவாதிகள் பிடியில் இருந்து தியாலா மாகாணம் முற்றிலும் விடுவிக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று சிரியா எல்லையில் உள்ள 'கொபானே' என்ற குர்திஷ் நகரம் ஐ.எஸ். ஐ.எஸ். தீவிரவாதிகள் பிடியில் இருந்தது. அதை மீட்க குர்திஷ் படைகள் தீவிரமாக போரிட்டு வந்தன.

இவர்களுக்கு அமெரிக்கா தலைமையிலான படைகளும் உதவின. இந்த நிலையில் கடந்த 4 மாதங்களுக்கு பிறகு கொபானே நகரம் மீண்டும் குர்திஷ் வசம் ஆனது. அங்கிருந்த தீவிரவாதிகள் அனைவரும் விரட்டி அடிக்கப்பட்டு விட்டனர்.

எனவே, அங்கு தற்போது சண்டை நடைபெறவில்லை. இந்த தகவலை சிரியா மனித உரிமைகள் கண்காணிப்பு குழு தெரிவித்துள்ளது. மேலும், மக்தாலா மாவட்டத்தில் உள்ள நகரங்களையும் தீவிரவாதிகளிடம் இருந்து மீட்க குர்திஷ் படை தீவிரமாக போராடி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அன்பின் வலிமை

...வ்ரசேனன் சிலையென அப்படியே நின்றுவிட்டான். சிவரஞ்சனிக்கும் என்ன செய்வதென்று தெரியாமல் அங்கிருந்து சென்று விட்டாள்.

இதற்கு முன் வீரசேனன் தேவயானியைப் பார்த்தது கூடக் கிடையாது. ஆனால் அவளைப்



பற்றி நிறையக் கேள்விப்பட்டிருக்கிறான்.

அவள் கோசல நாட்டின் மன்னனான அமரேந்திரனின் ஒரே மகள்.

அவளது தந்தைக்கு மிகவும் பிரியமானவள். அவர் முறையாக ஆட்சி செய்யாமல், எப்போதும் சதுரங்கம் விளையாடுவதில் தன் நேரத்தைக் கழிப்பவர். ஆகையால் அவர் மகள் ஆட்சிப் பொறுப்பை தன் கையில் எடுத்துக் கொண்டாள். சிறு வயதிலிருந்தே செல்லமாக வளர்ந்ததால், தேவயானி கர்வம் பிடித்தவளாக இருந்தாள். அவள் யதேச்சாதிகாரம் புரிந்ததால், கோசல மக்கள் பெரிதும் துன்புற்றனர்.

மிகுந்த அவமானத்திலும், கோபத்திலும் திரும்பிய தேவயானியை அவளுடைய தந்தை சமாதானப்படுத்தினார்.

அவர் நினைத்திருந்தால் விஜயபுரி மீது படையெடுத்து இருக்கலாம். ஆனால் அவர் அவ்வாறு செய்யா மல்தன்மகளின்ஆசையை நிறைவேற்ற எண்ணினார்.

ஆகையால் வயதில் மூத்த மந்திரியை அழைத்து இது குறித்து விவாதித்தார். அதன் பிறகு, அவரிடம் வீரசேனனிடம் கொடுக்குமாறு ஒரு கடிதம் எழுதி அனுப்பினார்.

கோசலராஜ்ய மந்திரி வீரசேனனை அடைந்து அமரேந்திரன் எழுதிய கடிதத்தைக் கொடுத்தார்.

அதில் பின்வருமாறு எழுதியிருந்தது. "மதிப்பிற்குரிய வீரசேனரே! என் மகள் தேவயானி தான் யுவராணி என்ற உண்மையை மறைத்து, தாங்கள் நடத்திய போட்டிகளில் கலந்து கொண்டு, தங்களை ஏமாற்றியதற்கு அவள சார்பாக நான் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன்.

அவள் தங்கள் மீது கொண்டிருக்கும் அளவிடமுடியாத அன்பு தான் அத்தகைய தவறை அவளை செய்யத் தூண்டியது. தயவுசெய்து, அவளுடைய உணர்வு களை



மதித்து, அவளைத் திருமணம் செய்து கொள்ளவேண்டுமாய் நான் தங்களை மன்றாடிக் கேட்டுக் கொள்கிறேன்.

இது வெறும் சுயநல நோக்குடன் கூடிய தல்ல! தாங்கள் அவளை மணம் புரிந்தால் இந்த கோசல நாடு தங்களுக்கு உரியதாகிவிடும்.

தங்கள் சாம்ராஜ்யம் விரிவடைந்தால், நன்மை அடையப்போவது தங்கள் ராஜ்யம்தான்! இப்போது கோசல நாட்டின் ஆட்சிப் பொறுப்பு தேவயானியிடம் இருந் தாலும், அவளை சரியாக வழி நடத்திச் செல்வோர் இல்லாததால், எங்கள் நாட்டின் நிர்வாகம் சரிவர இல்லை. ஆனால், கோசல நாடும் தங்கள் ஆதிக்கத்தில் வந்தால், மகா திறமைசாலியான நீங்கள் எங்கள் நாட்டையும் நன்றாக ஆட்சி செய்வீர்கள்! கோசல நாட்டு மக்களும் நன்மை அடைவார்கள். ஆகையால் உங்கள் சொந்த விருப்பு வெறுப்புகளை ஒதுக்கி வைத்து, நாட்டு மக்களின் நலன் கருதி, தேவயானியை மணம் புரிய சம்மதிக்கும்படி நான் கெஞ்சிக் கேட்டுக்கொள்கிறேன்.

"அந்தக் கடிதத்தைப் படித்த பின் வெகு நேரம் யோசித்த வீரசேனன் இறுதியில் கோசல நாட்டு மந்திரியிடம் தேவயானியை மணக்க சம்மதம் தெரிவித்தான்.

(முற்றும்)

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

01.2015 28

- 1547 - எட்டாம் ஹென்றியின் இறப்பு. அவனது 9 வயது மகன் ஆறாம் எட்வர்ட் இங்கிலாந்தின் மன்னன் ஆனான்.
- 1624 - கரிபியனில் முதலாவது பிரித்தானியக் குடியேற்ற நாடான சென் கிட்ஸ் சர் தொமஸ்வார்னர் என்பவரால் அமைக்கப்பட்டது.
- 1820 - ஃபாபியன் பெலிங்ஷோசென் தலைமையில் ரஷ்யா நாடுகாண் பயணக்குழு அண்டார்ட்டிக்காவை அடைந்தது.
- 1846 - அலிவால் என்ற இடத்தில் சீக்கியர்களுடன் இடம் பெற்ற போரில் சர் ஹரி ஸ்மித் தலைமையிலான பிரித்தானியப் படைகள் வெற்றி பெற்றனர்.
- 1882 - சென்னையில் முதன்முதலாக தொலைபேசி அறிமுகப்படுத்தப்பட்டது.
- 1909 - ஐக்கிய அமெரிக்கப் படைகள் குவாண்டானாமோ விரிகுடாவைத் தவிர்த்து கியூபாவின் மற்றைய பகுதிகளிலிருந்து விலகினர்.
- 1918 - பின்லாந்தின் தலைநகர் ஹெல்சிங்கியை புரட்சியாளர்கள் கைப்பற்றினர்.
- 1932 - ஜப்பானியப் படைகள் ஷங்காய் நகரைத் தாக்கினர்.
- 1935 - ஐஸ்லாந்து கருக்கலைப்பைச் சட்டபூர்வமாக்கிய முதல் நாடானது.
- **1986 - சாலஞ்சர் மீள்விண்கலம் புறப்பட்ட 73ஆவது விநாடியில் வானில் வெடித்துச் சிதறியதில் ஏழு விண்வெளிவீரர்கள் கொல்லப்பட்டனர்.**

**பிறப்புகள்**

- 1853, ஹொசே மார்த்தி, கியூபாவின் புரட்சியாளர் (இ. 1895)
- 1922 - ரொபேர்ட் ஹோலி, நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர் (இ. 1993)
- 1925 - ராஜா ராமண்ணா, இந்திய அணுவியல் நிபுணர

**இறப்புகள்**

- 1939 - வில்லியம் யீட்ஸ், நோபல் பரிசு பெற்ற ஐரிஸ் எழுத்தாளர் (பி. 1865)
- 1996 - ஜோசப் புரொட்ஸ்கி, நோபல் பரிசு பெற்ற ரஷ்யக் கவிஞர் (பி. 1940)

### சாலஞ்சர் விண்ணோடம்



சாலஞ்சர் விண்ணோடம் (Space Shuttle Challenger) (மீள்விண்கலம்) என்பது நாசாவின் கொலம்பியா விணணோடத்துக்கு அடுத்ததாக தயாரிக்கப்பட்ட இரண்டாவது விண்ணோடம் ஆகும். இதன் முதலாவது பயணம் ஏப்ரல் 4, 1983 இல் இடம்பெற்றதிலிருந்து மொத்தம் ஒன்பது தடவைகள் இது விண்ணுக்கு ஏவப்பட்டது. இதன் பத்தாவது கடைசி ஏவலில் ஜனவரி 28, 1986 இல் விண்ணுக்கு ஏவப்பட்டு 73 விநாடிகளில் ஏழு விண்வெளி வீரர்களுடன் வானில் வெடித்துச் சிதறியது. சாலஞ்சருக்குப் பின்னர் என்டெவர் விண்ணோடம் தயாரிக்கப்பட்டு 1992 இல் முதற்றடவையாக ஏவப்பட்டது. சாலஞ்சர் ஜனவரி 28, 1986 இல் தனது பத்தாவது பயணத்தில் STS-51-டு என்ற விண்கலத்தை சுமந்து புளோரிடா, கனாவரல் முனை (Cape Canaveral, Florida) ஏவுதளத்திலிருந்து செங்குத்தாக எழுந்து, ஒரு நிமிடம் இயங்கி 50,000 அடி உயரத்தில் செல்லும் போது, திடீரெனப் பழுது ஏற்பட்டு வானில் வெடித்தது. அதில் பய்ணம் செய்த வண்வெளி வீரர்கள் இறந்தனர். அதில் இரு பெண்களும் அடங்குவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த்

## வாழ்க்கை வரலாறு...

பாராட்டு

**"நான் வாழ வைப்பேன்"** படபபிடிப்பெல்லாம் முடிந்து, முதல் பிரதியை சிவாஜி பார்த்தார். நானும் அவருடன் இருந்தேன். உச்சக்கட்ட காட்சியில் ரஜினியின் நடிப்பைப் பார்த்துக்கொண்டே பக்கத்தில் உட்கார்ந்திருந்த என்னிடம் சிவாஜி சொன்னார்:

பாத்தியா! அன்றைக்கு நான் என்ன சொன்னேன்? கடைசியில் அந்த ரோல் தான் நிக்கும்னு சொன்னேன்ல. ரஜினியும் நல்லா நடிச்சிருக்கான் பாரு! படம் முடிஞ்சு ஜனங்க போகும் போது, ரஜினிதான் அவுங்க மனசுல நிப்பான். தெரிஞ்சதுதானே! பரவாயில்லை. படம் நல்லா வந்திருக்கு. எனக்கு அதுதான் வேணும்.

இவ்வாறு சிவாஜி கூறினார். பிறர் நன்றாக நடித்தால், மனந்திறந்து பாராட்டும் பண்பாளர் சிவாஜி.

10-08-1979இல் வெளியான **"நான் வாழவைப்பேன்"** நூறு நாள் ஓடிய வெற்றிப்படம். இவ்வாறு ஆரூர்தாஸ் கூறினார்.

ரஜினிகாந்த் முற்றிலும் மாறுபட்ட வேடத்தில் நடித்த **"ஆறிலிருந்து அறுபது வரை"** படம், மகத்தான வெற்றி பெற்று, சிறந்த குணச்சித்திர நடிகர் என்ற புகழை அவருக்குப் பெற்றுத் தந்தது.

வில்லனாகவும், ஆண்டி ஹீரோவாகவும், ஆக்ஷன் ஹீரோவாகவும், ஸ்டைல் மன்னனாகவும் ஜொலித்து வந்த ரஜினியை, முற்றிலும் மாறுபட்ட வேடத்தில் நடிக்க வைக்க பட அதிபரும், கதாசிரியருமான பஞ்சு அருணாசலம் முடிவு செய்தார். அதற்காக அவர் உருவாக்கிய கதைதான் **"ஆறிலிருந்து அறுபது வரை."**


குடும்பப் பாசம்

சிறு வயதிலேயே பெற்றோரை இழக்கும் ஒரு சிறுவன், கஷ்டப்பட்டு தன் தம்பிகளையும், தங்கையையும் படிக்க வைக்கிறான். குடும்பத்துக்காக தன்னை மெழுகுவர்த்தி போல் அழித்துக் கொள்கிறான். ஆனால், 60 வயதாகும் தருணத்தில் அவருடைய குடும்பத் தினர் நன்றி விசுவாசத் தோடு நடந்து கொள்ளவி ல்லை. இன்றைய உலக நடப்பை யதார்த்தமாகச் சித்த ரிக்கும் கதை. வசனத்தையும் பஞ்சு அருணாசலம் எழுதினார்.

**மாறுபட்ட வேடம்**

இந்தப் படத்தில், ரஜினிக்கு சண்டை இல்லை, ஸ்டைல் இல்லை. குடும்பத்துக்காக தன்னையே தியாகம் செய்யும் நல்லவராக நடித்திருந்தார். 25 வயது முதல் 60 வயது வரையுள்ள பல தோற்றங்களில் தோன்றினார். ரஜினியுடன் படாபட் ஜெயலட்சுமி, சங்கீதா, ஜெயா, மல்லிகா, திலக், சோ, தேங்காய் சீனிவாசன் ஆகியோர் நடித்திருந்தார்கள். பாடல்களை பஞ்சு அருணாசலம் எழுத, இளையராஜா இசை அமைத்திருந்தார். டைரக்ஷன்: எஸ்.பி. முத்துராமன். புதிய தோற்றத்தில் ரஜனியை அவருடைய ரசிகர்கள் ஏற்பார்களா? படம் வெற்றி பெறுமா? என்று பலரும் சந்தேகப்பட்டார்கள்.

39



ஆறிலிருந்து அறுபது வயது வரையில் ரஜினியின் தோற்றம்

## ரஜினியின் அற்புத நடிப்பு; சிவாஜியின் பாராட்டு

ரஜினியும், படத்தின் ரிசல்ட்டை ஆவலுடன் எதிர்பார்த்தார். 16-09-1979 இல் வெளிவந்த இந்தப்படம், **"ஓகோ"** என்று ஓடியது. நூறு நாடகள் ஓடி வெற்றி பெற்றது. "சிவாஜிகணேசன் நடிக்கும் குடும்பப் பாங்கான வேடங்களிலும் நன்கு நடிக்கக் கூடியவர் ரஜினி" என்பது, இப்படத்தின் மூலம் நிரூபிக்கப்பட்டது. அந்த ஆண்டின் சிறந்த படமாக இதை சினிமா ரசிகர்கள் சங்கம் தேர்ந்தெடுத்தது. தமிழக அரசின் சிறந்த நடிகருக்கான விருது ரஜினிக்கும், சிறந்த டைரக்டருக்கான விருது எஸ்.பி.முத்துராமனுக்கும கிடைத்தது. இப்படம், **"ஓ இண்டி கதா"** என்ற பெயரில் தெலுங்கில் "டப்" செய்யப்பட்டது. தெலுங்கிலும் வெற்றிகரமாக ஓடியது.

எஸ்.பி.முத்துராமன்

**"ஆறிலிருந்து அறுபது வரை"** படத்தின் டைரக்டரான எஸ்.பி. முத்துராமன், அந்தப் படத்தில் தனக்கு ஏற்பட்ட அனுபவங்கள் பற்றி கூறியதாவது:- ரஜினி, ஒவ்வொரு காட்சி படமாக்கப்படும் போதும், அது பற்றிய முழு விவரத்தையும் கேட்டறிந்து, கதையை உள்வாங்கிக் கொண்டு, தான் நடிக்க வேண்டிய காட்சியை நன்கு சிந்தித்து ஜீரணித்துக்கொண்டு நடிப்பார்.

**"ஆறிலிருந்து அறுபது வரை"** படத்தின் படப்பிடிப்பின்போது, ரஜினிக்கு ஒரு சந்தேகம் வந்தது. "குடும்பத்துக்கே தன்னை தியாகம் செய்யும் அண்ணனிடம், உடன் பிறந்தவர்கள் நன்றி கெட்டவர்களாக நடந்து கொள்வார்களா?" என்று கேட்டார். பெரும்பாலான குடும்பங்களில் இப்படித்தான் நடக்கிறது. இதுதான் யதார்த்தம் என்று கதாசிரியர் பஞ்சு அருணாசலமும், நானும் விளக்கினோம். இருப்பினும், ரஜினி முழுவதுமாக திருப்தி அடையவில்லை.

இதன் காரணமாக பஞ்சு அருணாசலம் ஒரு முடிவுக்கு வந்தார். 5 ஆயிரம் அடி வரை படத்தை எடுத்து ரஜினிக்கு போட்டுக் காட்டுவது, அது அவருக்குப் பிடித்திருந்தால் தற்போதுள்ள கதையை தொடர்ந்து படமாக்குவது, இல்லாவிட்டால் கதையின் போக்கை மாற்றுவது - இதுதான் பஞ்சு அருணாசலத்தின் முடிவு.

(தொடரும்)



# கருவாச்சி காவியம்



## வைரமுத்து- 61

....ஆத்தா வாசன அடிச்சுச்சு அதுல.

ஆத்தாள நெனச்ச ஊத்தா ஊத்துது கண்ணீரு.

தொடச்சுக்கிட்டே எந்திரிச்சு ஆத்தாளுக்குக் கால் அமுக்கி விடுறா கருவாச்சி.

காடு கரடு கடந்த காலு என்னியத் தூக்கிக் கல்லுலயும் முள்ளுலயும் நடந்த காலு தேஞ்சு சிறுத்துப் போனாலும் ஓஞ்சு போகாத காலு.

இந்தா படுத்திருக்காளே ஆத்தா! இதே எடந்தான்.

எனக்கு அப்ப ஏழெட்டு வயசிருக்கும். அம்மை பாத்துக் கெடக்கேன்.

எள்ளு விழுக எடமில்லாம ஒடம்பெல்லாம அம்மை போட்டு நெற பூட்டுப் பூட்டிருக்கா மாரியாத்தா.

வாழ இலைய விரிச்சு என்னப் பெறந்த மேனியா உரிச்சுப் படுக்க வச்சிருக்கா ஆத்தா. ஒடம்பெல்லாம் முத்துப் போட்டிருக்கு. அசைய முடியல.

நாக்குலயும் கொப்புலம் போட்டிருக்கு. முழுங்க முடியல. இமைக்கு மேல ரெண்டு மூணு அம்மை; ஒறங்க முடியல. அம்மை பாத்த வீட்டுக்கு ஆளுக யாரும் வாரதில்ல. போறதில்ல. இந்த இருவத்தோரு நாளும் ஆத்தா பெரிய மூக்கி பட்டிருக்கா பாரு ஒரு பாடு அதை நெனச்சாப் போதும். நெஞ்சுக் குழியில முட்டி கண்ணுவழியா எட்டிப் பாக்கும் கண்ணீரு.

தல மாட்டுல எப்பவும் எளநி வெட்டி வச்சு வேப்பங்கொழை ஒடிச்சு விடாம நீவி விட்டு மஞ்சள் வேப்பங் கொழுந்து அருகம்புல்லு. ஆமணுக்கு வித்து நாலையும் அம்மியில வச்சு கல் இல்லாத களிமண் மாதிரி அரைச்சு இதாண்ணடி அம்மன் காப்புன்னு திரேகமெல்லாம் பூசிவிட்டு இருவத்தோரு நாளும் கண்ணுறங்காம கண்ணுக்கெட்டின தூரத்துலயே இருந்தாளே.. அது கூடப் பெருசில்ல.

ஒடம்பு முழுக்கப் போட்டிருக்கிற அம்மையில ஒவ்வொரு முத்தா ஒடஞ்சு இதுல ஒழுகுன தண்ணி அடி



வாழ இலையில் ஓடி ஆறாப் பெருகி வீடே வீச்சமெடுத்துக் கெடக்க அம்மனப் பழிக்கப்படாது அத வெளக்க மாத்துல பெருக்கவும் படாதுன்னு ரெண்டு கையும குமிச்சு அத வாரி எடுத்து மஞ்சத் தண்ணியோட வீதியில எறிஞ்சாளே கடவுளாயிருந்தாலும் போதுமடி பிள்ளைன்னு போயிருமா இல்லையா ஆத்தா போனாளா இல்லையே. எல்லாக் கடவுளுக்கும் பிள்ளை இருக்கோ இல்லையோ எல்லாப் பிள்ளைக்கும் கடவுள் இருக்கு ஆத்தா ரூபத்துல. நம்மூர்ல காலங்காலமாப் பொம்பளைக்குன்னு வந்ததெல்லாம் ஆத்தா வழிவந்த அறிவுதான்.

கோலம் போடச் சொல்லிக் குடுத்தவ ஆத்தா. குழம்பு கூட்டிப் போடச் சொல்லிக் குடுத்தவ ஆத்தா. ரசம் வைக்கயில அது இளங்கொதி கொதிச்சு அடங்க நுனி நகத்துல இத்துனூண்டு வெல்லங் கிள்ளி அதுல சுண்டி விட்டு எறக்கணும்னு சொல்லிக் குடுத்தவ ஆத்தா.

ஆத்துமீனும் கொளத்துமீனும் பெரியமீனாயிருந்தா சுத்தம் பண்றது லேசு. உரசு உரசுன்னு உரசி அதுக வாயில இருக்கிற பாசி தூயியக் கூட விரல விட்டு எடுத்து வெளியில எறிஞ்சிரலாம். அயிரமீனுக சின்னது. அதுக வாயில மண்ணு இருக்கும்; எடுக்க வாரது. அதுக்கும் ஒரு வழி சொல்லிக் குடுத்தவ ஆத்தா. உசுருள்ள அயிர மீனாத்தான் வாங் குவா. தண்ணி ஊத்தி நல்லா அலசி ட்டு மீனுக மேல பால ஊத்தி விட்ருவா.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதுக்குடியிருப்பில்

# காளான் செய்கை

(முல்லைத்தீவு)


**மாகாண குறித்தொகுக்கப்பட்ட அபிவிருத்தி நிதியத்தில் காளான் உற்பத்தி ஊக்குவிப்பு செயற்றிட்டத்தின் கீழ் புதுக்குடியிருப்பு விவசாயப் போதனாசிரியர் பிரிவில் கைவேலியைச் சேர்ந்த மூன்று பயனாளிகளுக்கு இதற்கான செய்முறை பயிற்சி ஒட்டுசுட்டானிலுள்ள மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் வழங்கப்பட்டு காளான் செய்கை மேற்கொள்ளப்பட்டு அறுவடை செய்யப்படுகின்றது என புதுக்குடியிருப்பு விவசாயப் போதனாசிரியர் ச.இலட்சுமிதரன் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

காளான் செய்முறை பயிற்சியை முல்லை.மாவட்ட விவசாயத் திணைக்கள உதவி விவசாயப் பணிப்பாளர் திருமதி ந.விஜயன், பாடவிதான உத்தியோகத்தர் சி.கஜரூபன் ஆகியோர் நடத்தியுள்ளனர்.

இதற் கான உள்ளீடுகள் அனைத்தும் இத் திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டன.

இந்த உள்ளீடுகளில் 36Kg இறப்பர் மரத்தூள், 36Kg அரிசி தவிடு, 350g பயற்றம்மா, 700g நீறிய சுண்ணாம்பு, 35g மக்னீசியம் சல்பேற், பொலிபுறப்பலின் (ஒரு அடி நீளம்) பைகள் 60, 200g காளான் வித்தி, காளான் செய்கையின் போது 'அவற்றை தொற்று நீக்குவற்கு மண்ணெண்ணெய் பரலால் செய்யப்பட்ட உபகரணம், காளான் பைகளை அடுக்கி வைப்பதற்கான ராக்கை என்பன கடந்த வருடம் நவம்பர் மாதத்தில் வழங்கப்பட்டன.



இதனைப் பயன்படுத்தி குறித்த செய்கையை மேற்கொண்ட புதுக்குடியிருப்பு கைவேலியைச் சேர்ந்த விவசாயி ஒருவரின் காளான் உற்பத்தி வயல் விழா கடந்த 21 ஆம் திகதி இடம்பெற்றது.

அத்துடன் வழங்கப்பட்ட உள்ளீடுகளைப் பயன்படுத்தி 60 பைகளில் இந்தக் காளான் வித்திகள் போடப்பட்டு, இச் செய்கை மேற்கொள்ளப்பட்டது.

தற்போது ஒரு பையிலிருந்து ஒரு தடவையில் 150 தொடக்கம் 200 கிராம் வரையிலான காளான் அறுவடை செய்யப்படுகின்றது.

இந்த 60 பைகளில் இருந்தும் ஒன்றுவிட்ட ஒருநாளுக்கு ஒரு கிலோவிற்கு அதிகமான அளவில் காளான் அறுவடை செய்யப்படுகின்றது.

ஒரு கிலோ காளான் தற்போது 400 ரூபாவாக விற்பனை செய்யப்படுகின்றது. மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே காளான் உற்பத்தி நடைபெறுவதால் போதுமான அளவு விற்பனைக்கு விடப்படவில்லை.

உலக தரிசனம் நிறுவனத்தின் அனுசரணையுடன் புதுக்குடியிருப்பு விவசாய போதனாசிரியர் பிரிவில் இக் காளான் செயற்றிட்டம் இன்னும் 24 பயனாளிகளுக்கு வழங்கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)




## வன்னேரிக்குளம் வைத்தியசாலைக்கு நிரந்தர வைத்தியரை நியமியுங்கள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி வன்னேரிக்குளம் பிரதேச வைத்தியசாலைக்கு நிரந்தர வைத்தியர் நியமிக்கப்படாமையால் கிசிக்சை பெற செல்லும் நோயாளர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் தெரியவருதாவது,

குறித்த வைத்தியசாலைக்கென மீள்குடியேற்றத்தை அடுத்து இதுவரை நிரந்தர வைத்தியர்கள் நியமிக்கப்படவில்லை.

இதேவேளை அக்கராயன் பிரதேச வைத்தியசாலையில் கடமையாற்றும் வைத்தியரே இங்கு வாரத்தில் இரு நாட்கள் நோயாளர்களுக்கு சிகிச்சையளித்து வருகின்றார்.

அவசர சிசிக்சைக்கென வரும் நோயாளர்கள் வைத்தியர் இன்மையால் முழங்காவில் மற்றும் அக்கராயன் பிரதேச வைத்தியசாலைகளுக்கே செல்ல வேண்டியுள்ளது. அத்துடன் நோயாளர் காவு வண்டியும் வழங்கப்படாமையால் நோயாளர்களை கொண்டு செல்வதில் சிக்கல் நிலை காணப்படுகின்றது.

எனவே இவ்விடயத்தில் சம்பந்தப்பட்ட திணைக்கள அதிகாரிகள் நடவடிக்கையை எடுத்து குறித்தவைத்தியசாலைக்கு நிரந்தர வைத்தியர் ஒருவரை நியமித்துத்தருமாறு பொது மக்களும் நோயாளர்களும் கோரிக்கை விடுக்கின்றனர். (அ-2-272)

## விவசாய போதனாசிரியர் பிரிவுகள் ஊடாக பயிர்ச் சிகிச்சை முகாம்




கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள விவசாயிகளின் நன்மை கருதி, விவசாய யேபாதனாசிரியர் பிரிவுகளின் ஊடாக பயிர் சிகிச்சை முகாம்கள் நடத்தப்பட்டு வருவதாக கிளிநொச்சி மாவட்ட விவசாயப் பணிப்பாளர் அ.செல்வராசா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில், கிளிநொச்சி மாவட்டம் ஒரு விவசாய மாவட்டமாக இருப்பதனால், விவசாயத்தை மேம்படுத்தும வகையில் மாவட்ட விவசாய விரிவாக்கல் அலுவலகத்தால் சகல போதனாசிரியர் பிரிவுகளிலும் பல்வேறு விவசாய அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

விவசாயத்தை மேம்படுத்தும் வகையில் பயிர் செய்கைகளில் காணப்படுகின்ற நோய்த்தாக்கங்கள், அவற்றுக்கான சிகிச்சை முறைகள் தொடர் பாகவும் முகாம்கள் நடத்தப்பட்டு, அவற்றின் மூலம் விவசாயிகளுக்கு அறி வுறுத்தல்களும், ஆலோசனைக ளும் வழங்கப்பட்டு வருகின்றன.

விவசாயப் போதனாசிரியர்களிடமும, மாவட்ட விவசாயத் திணைக்களதிடமும் இவ்வாறான ஆலோசனைகளை பெற்றுக்கொள்ள முடியும் என அவர் மேலும் கூறினார். (அ-2)





செந்தாமரை உதவும் கரங்கள் நிறுவனத்தின் நிதி அனுசரணையுடன் மனிதாபிமான புனர்வாழ்வு செயற்பாடுகளுக்கான தேசிய சங்கத்தின் நாறோ (NAHRO) சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் தையல் கண்காட்சியும் கடந்த 24 ஆம் திகதி கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயத்தில் நடைபெற்றது. இதில் தையல் பயிற்சியினை நிறைவு செய்த கரைச்சி பிரதேச செயலக பிரிவிலுள்ள கோணாவில் ராஜன்குடியிருப்பைச் சேர்ந்த பயிற்சியாளர்களுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து பயிற்சியாளர்களால் தைக்கப்பட்ட ஆடைகள் காட்சிப்படுத்தப்பட்டு விற்பனை செய்யப்பட்டது.

(படங்கள்:-மல்லாவி, சிவநகர் செய்தியாளர்கள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊழலில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக துரித கதியில் விசாரணை வேண்டும்

## சோபித தேரர் மீண்டும் வலியுறுத்து

(கொழும்பு)

**ஊழல் மோசடிகள் தொடர்பிலான முறைப்பாடுகளுக்கு எதிராக துரிதகதியில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென நீதியான சமூகத்திற்கான தேசிய அமைப்பின் அழைப்பாளர் மாதுலுவாவே சோபித தேரர் தெரிவித்துள்ளார். புதிய அரசாங்கத்தின் 100 நாட்கள் திட்டம் இன்னமும் துரிதப்படுத்தப்பட வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.**

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஆட்சிக் காலத்தில் இடம்பெற்றதாக கூறப்படும் ஊழல் மோசடிகள் தொடர்பில் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

கோட்டே ஸ்ரீநாக விஹாரையில் நேற்று நடைபெற்ற கூட்டமொன்றில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். புதிய அரசாங்கத்தின் ஒரு சில நடவடிக்ககைகள் ஏற்றுக்கொள்ளக் கூடிய வகையில் அமையவில்லை என நீதியான சமூகத்திற்கான தேசிய அமைப்பின் உறுப்பினர்கள் விசனம் வெளியிட்டுள்ளனர். விசாரணைகளை கிரமமாக நடத்துவதற்கு தற்போதைய இலஞ்ச ஊழல் மோசடி ஆணைக்குழு போதுமானதல்ல எனவும், நீதிமன்ற அதிகாரங்களுடன் கூடிய ஓர் ஆணைக்குழு அவசியம் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ குடும்பத்தின் முக்கியமான உறுப்பினர்கள் பலருக்கும், முக்கிய அமைச்சர்களுக்கு எதிராகவும் நாள்தோறும் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் முறைப்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

# வடமேல் மாகாண சபை உறுப்பினர் சனத் நிசாந்த பொலிஸில் சரண்!

வடமேல் மாகாண சபை உறுப்பினர் சனத் நிசாந்த நேற்று செவ்வாய்க்கிழமை பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

ஜனாதிபதித் தேர்தல் காலத்தின் போது பொது எதிரணியின் ஜனாதிபதி வேட்பாளரின் அலுவலகம் ஒன்றின் மீது தாக்குதல் நடத்தி ஆதரவாளர்களை அச்சுறுத்திய சம்பவத்துடன் தேடப்பட்டு வந்த நிலையிலேயே அவர் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளார்.

இதேவேளை சனத் நிஷாந்தவை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-5)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 160 | 80 | 160 | 100 |
| உருளைக்கிழங்கு | 60 | 80 | 70 | 70 |
| பச்சைமிளகாய் | 400 | 300 | 800 | 450 |
| தக்காளி | 220 | 200 | 200 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 40 | 60 | 50 |
| கோவா | 150 | 100 | 160 | 80 |
| கரட் | 200 | 150 | 200 | 240 |
| பூசணி | 60 | 80 | 80 | 100 |
| புடோல் | 80 | 120 | 120 | 80 |
| வாழைக்காய் | 80-110 | 120 | 100 | 100 |
| சின்ன வெங்காயம் | 30-90 | 120 | 110 | 160 |
| பெரிய வெங்காயம் | 60-100 | 100 | 120 | 80 |
| பாகற்காய் | 120-160 | 150 | 200 | 200 |
| வெண்டிக்காய் | 80-120 | 120 | 160 | 100 |
| கருணைக் கிழங்கு | 60 | 50 | 60 | 80 |
| பயற்றங்காய் | 120-170 | 100 | 200 | 160 |
| லீக்ஸ் | 220-280 | 250 | 320 | 400 |
| பீற்றூட் | 200 | 200 | 200 | 200 |
| கறிமிளகாய் | — | 400 | 320 | 250 |
| முருங்கைக்காய் | — | 600 | — | — |
| போஞ்சி | — | 200 | 200 | 150 |
| கத்தரிதம்புள்ள | — | 60 | 170 | 80 |
| கீரை - 1 பிடி | 20 | 20 | 20 | 30 |
| தேசிக்காய் | 30-60 | 80 | 80 | 50 |
| தேங்காய் (ஒன்று) | 25-60 | 50 | 45-50 | 35-45 |
| இராசவள்ளி | 80-120 | 120 | 120 | 100 |
| வெங்காயப்பூ | 140-190 | 200 | 140 | 240 |

# இளைஞனை தாக்கிய மூவருக்கு விளக்கமறியல்

தமக்கு தர வேண்டிய பணத்தைப் பெறுவதற்காக இளைஞன் ஒருவரை அடித்து மோசடியான முறையில் அவரிடம் கடிதம் பெற்ற இளைஞர்கள் மூவரை தாம் கைது செய்து நீதிமன்ற உத்தரவுக்கமைய விளக்கமறியலில் வைத்துள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

வவுனியாவைச் சேர்ந்த இளைஞன் ஒருவர் கொடுக்க வேண்டிய பணத்திற்காக குறித்த இளைஞனை தொலைபேசியில் அழைத்து மறைவான இடத்தில் வைத்து தாக்கி மோசடியான முறையில் கடிதம் மற்றும் இளைஞனின் மோட்டார், சைக்கிள் என்பவற்றை பெற்றுக் கொண்ட மூவருக்கு எதிராக கடந்த சனிக்கிழமை எமக்கு புகார் செய்யப்பட்டது.


இது தொடர்பாக வவுனியா, குருமன்காடு பகுதியில் உடல் வலுவூட்டல் நிலையம் ஒன்றை நடத்தும் நபர் உட்பட மூவர் கைது செய்யப்பட்டு நேற்றைய தினம் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டனர். இவர்களை நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை வரை விளக்கமறியலில் வைக்க மாவட்ட நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை நாம் மேற்கொண்டு வருகின்றோம் எனவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர். (அ-2-250)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 266

கோபால் கோபாலகிருஷ்ணன்





கீர்த்திகா கீர்த்தி





பிரதீபன் சந்திரசேகர்




மயூரதன் மயூரன்




சக்தி வேல்




நிரு நி[illegible]




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் [illegible] செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிர[illegible]ாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் அரசியலில் இளைஞர்களின் கடப்பாடு!



மஹிந்த ராஜபக்ஷ என்கிற சர்வாதிகாரத்துக்கு எதிராக வட மாகாண சபைத் தேர்தலிலும், ஜனாதிபதித் தேர்தலிலும் தீர்க்கமான முடிவுகளோடு செயற்பட்ட தமிழ் மக்கள், ஜனநாயக ரீதியிலான அரசியல் போராட்டங்களில் அடுத்த கட்டம் நோக்கி நகர வேண்டிய தருணம் இது.

மஹிந்த ராஜபக்ஷவின் வீழ்ச்சியோடு அரசியல் ரீதியிலான போராட்டங்கள் முடிந்துவிட்டதாகவோ, புதிதாக பதவியேற்றுள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான தேசிய அரசாங்கம் தமிழ் மக்கள் எதிர்பார்க்கும் தீர்வினை உடனடியாக தந்துவிடும் என்றோ கொள்ள முடியாது.

. தொடர்ச்சியான அழுத்தங்களை வழங்கக் கூடிய அரசியலை எந்தவித விட்டுக் கொடுப்புமின்றி தமிழ் மக்கள் தொடர்ந்தும் முன்னெடுக்க வேண்டும். இப்போது கிடைத்திருக்கின்ற ஜனநாயக இடைவெளியை குறிப்பாக, தமிழ் அரசியல் தலைமைகளும், கட்சிகளும், இளைஞர்களும் சரியாகக் கையாள வேண்டும்.

ஆயுதப் போராட்டங்களின் வீழ்ச்சிக்குப் பின்னரான சிறுகாலம் தமிழ் இளைஞர்கள் மத்தியில் வெறுமையை மாத்திரமே விட்டு வைத்திருந்தது. ஆனால், மெல்ல நகர்ந்த காலம் யதார்த்தப் போராட்டக்களத்தை உணர வைத்தது. அதுதான், தமிழ் இளைஞர்கள் மத்தியில் போராட்ட குணம் இன்னமும் அதே ஆக்ரோசத்தோடு இருக்கின்றது என்பதையும் வெளிப்படுத்த வைத்தது.

வட் மாகாண சபைத் தேர்தலும், ஜனாதிபதித் தேர்தலும் பெரும அச்சுறுத்தலான ஆட்சிக் காலத்திலேயே நடைபெற்றது. ஆனாலும், அவ்வாறான காலங்களிலும்கூட தம்முடைய கருத்துக்களினூடு அடுத்த கட்ட அரசியல் நகர்வு குறித்து அக்கறையோடு செயலாற்றினார்கள்.

இரண்டு தேர்தல்களிலும் தமிழ் மக்களின் பெரும் அர்ப்பணிப்பான வாக்களிப்பு என்பது இளைஞர்களின் குறிப்பிட்டளவான முயற்சியினாலேயே சாத்தியப்பட்டது.

தமிழ் அரசியல் உரிமைப் போராட்டங்களில் இளைஞர்களது பங்களிப்பு என்பது காலம் காலமாக பெரும் வகிபாகத்தைக் கொண்டது. அது, ஆயுத ரீதியிலான போராட்டங்களின் போக்கிலும் கோலொச்சிக் காணப்பட்டது. சில நம்பிக்கைகள், கொள்கைகள் பொய்த்துப் போனாலும் கூட, புதிய நம்பிக்கைகளைக் கொள்வதும், உரிமைகளை இழந்துவிடாது தக்கவைப்பதற்காக போராட்டத்தை முன்னெடுப்பதையும் தமிழ் இளைஞர்கள் என்றைக்குமே கைவிட்டதில்லை.

வேணுமென்றால் சிறிய இடைவெளியை எடுத்துக் கொண்டிருக்கின்றார்கள் என்று கொள்ள முடியும். இளைஞர்களும், தொழிலாளர்களுமே ஜனநாயக அரசியலின் பெரும் சக்தி. அவர்களே நாட்டு மக்களின் அபிப்பிராயங்களை அதிகம் பிரதிபலிக்கின்றனர்.

அப்படிப்பட்ட நிலையில், வட - கிழக்கு தமிழ் இளைஞர்கள் தமது அரசியல் உரிமைப் போராட்டங்களின் பங்களித்தல் நிலையில் அடுத்த கட்டம் நோக்கி செல்ல வேண்டும். அதுவே, ஒட்டுமொத்த தமிழ் மக்களையும் அடுத்த கட்டம் நோக்கி அழைத்துச் செல்ல உதவும்.

தமிழ் இளைஞர்கள் மத்தியில் "அரசியல் போராட்டங்களில் நம்பிக்கை கொண்டவர்கள், தவிர்க்க முடியாமல் இணைந்திருப்பவர்கள், விரக்தி மன நிலையில் இருப்பவர்கள்" என்று மூன்று தரப்பினரைக் காண முடியும்.

இந்த மூன்று தரப்பும் தேர்தல் மற்றும் வாக்களிப்பு உள்ளிட்ட விடயங்களில் ஒரே புள்ளியில் இணைக்கின்றார்கள். வாக களிப்பு என்பது தமிழ் மக்களிடம் இருக்கின்ற இறுதி ஆயுதம் என்ற நிலையில் பெருமளவான வாக்களிப்பை உறுதி செய்கின்றார்கள.

ஆனால், தேர்தலும், வாக்களிப்பும் மட்டுமே அரசியல் போராட்டங்களின் பங்களிப்பாகக் கொள்ள முடியாது. அதனைத் தாண்டி அரசியல் ரீதியிலான தீர்மானங்களை மேற்கொள்ளும் சக்தியாக தமிழ் இளைஞர்கள் மாற வேண்டும்.

சர்வதேச பொறிமுறை என்னவென்பதைப் புரிந்து கொண்டு, அதனைக் கையாளும் அளவுக்கு தம்முடைய அரசியல் அறிவினை வளர்த்துக் கொண்டு நகர வேண்டும். அதுதான், தமிழ் மக்களை தொடர்ச்சியாக தக்கவைக்க உதவும்.

தமிழ்த் தேசிய அரசியலைப் பொறுத்த வரையில் தலைமைகள் மீது பெருமளவான இளைஞர்கள் அதிருப்தியில் இருக்கின்றார்கள். இதனை தமிழ் அரசியல் தலைமைகளும் புரிந்து கொண்டிருக்கின்றன. அதிக தருணங்களில் தமிழ் அரசியல் தலைமைகள் இளைஞர்களின் பங்களிப்பு என்பது தேர்தல் மற்றும் வாக்களிப்போடு நிறுத்தப்பட வேண்டும் என்று எதிர்பார்க்கின்றன. ஆனால், அது, நியாயமான அரசியலில் சரியான அணுகுமுறையாக இருக்க முடியாது.

. இளைஞர்களிடம் உணர்ச்சி வேகம் அதிகம்தான், எனினும் தீர்மானங்களை மேற்கொள்ளும் போது யதார்த்தப் புரிதல் இல்லை என்று அர்த்தம் கொள்ள முடியாது.

தனி ஈழம் இனி சாத்தியமில்லை என்பதை பெரும்பான்மையான தமிழ் இளைஞர்கள் ஏற்றுக் கொண்டுவிட்டார்கள். அப்படியிருக்கின்ற நிலையில்தான் ஜனநாயக ரீதியிலான அரசியல் போராட்டங்களில் நம்பிக்கை கொள்ள ஆரம்பித்திருக்கின்றார்கள்.

ஆனால், நேரடியாக செயற்பாட்டு அரசியல் தளத்துக்குள் நுழைவது தொடர்பில் அவர்களுக்கு பெரும் சந்தேகம் இருக்கின்றது. அதற்கு தமிழ் அரசியல் தலைமைகளும் காரணமாக இருக்கின்றன.

தமது அரசில் இருப்பு காணாமற்போய்விடும் என்ற காரணத்தினாலும் தமிழ் அரசியல் தலைமைகள் இளைஞர்களை உள்வாங்குவது தொடர்பில் அச்சம் கொண்டிருக்கின்றன. இது, நியாயமான அரசியலின் அடுத்த கட்டம் நோக்கிய நகர்வுக்கு பெரும் இடையூறாகும். தவிர்க்க முடியாமல் தமிழ் மக்களின் அடுத்த கட்டங்களை தமது தோள்களில் இள்ளைஞர்களே சுமந்தாக வேண்டும் என்கிற சூழ்நிலையில் அதனைத் புரிந்து கொண்டு இளைஞர்களை உள்வாங்குவது தொடர்பில் அரசியல் தலைமைகள் அக்கறை கொள்ள வேண்டும

மாறாக, தமது பதவிகளுக்கு அச்சுறுத்தலானவர்கள் என்று புறந்தள்ளும் போது அது, தமிழ் சமூகத்துக்கு ஆற்றும் துரோகமாக மாறும. இதனை நாம் தொடர்ச்சியாக எதிர்கொண்டே வந்திருக்கின்றோம்.

தமிழ் அரசியல் தலைமைகள் மீது அதிருப்தியிலுள்ள இளைஞர்கள் தமது தெளிவான அரசியல் குறித்தும் நிறையவே செயலாற்ற வேண்டியிருக்கின்றது. ஏனெனில், பரவலாக சிதறடிக்கப்பட்டிருக்கும் கருத்தியலை ஒரே புள்ளியில் இணைத்துக் கொள்ள வேண்டும்.

அதுபோல, விரக்தி மனநிலையிலிருக்கும் இளைஞர்களையும் நம்பிக்கையுள்ளவர்களாக மாற்ற வேண்டும். இந்த இரண்டு செயற்பாடும் தமிழ் அரசியல் தலைமைகளுக்கு பெரும் அழுத்தங்களை வழங்கி தமிழ் அரசியலில் தீர்மானங்களை மேற்கொள்ளும் சக்தியாக மாற்றும்.

தமிழ் இளைஞர்களின் அரசியல் முழு முனைப்பு என்பது புதியதொரு அமைப்பினூடாக முன்னெடுக்கப்பட வேண்டும் என்று அர்த்தம் கொள்ள வேண்டியதில்லை. மாறாக, எம்மிடையே இருக்கின்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்கிற அமைப்புக்குள் உள்நுழைந்தும்கூட ஆரம்பிக்கக் கூடியதாக இருக்கும்.

தமிழ் அரசியல் உரிமைப் போராட்டங்களைச் சீர்குலைப்பதற்காக தொடர்ச்சியாக பினாமிக்குழுக்களையும், முகவர்களையும் சிங்கள பெளத்த தேசியவாத அரசாங்கங்கள் தமிழ் மக்கள் மத்தியில் ஏவி வந்திருக்கின்றன.

அப்படிப்பட்ட நிலையில், தமிழ் மக்கள் மத்தியில் பலமான அரசியல் அமைப்பாக இருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினை முழுமையாகப் புறக்கணித்து புதிய அரசியல் அமைப்பினை தோற்றுவிக்க வேண்டிய அவசியம் இல்லை. ஏனெனில், பலமான கட்டமைப்பொன்றுக்குள் புதிய வழிகளைத் திறப்பதுதான் தமிழ் இளைஞர்களின் முன்னாலுள்ள இப்போதைய கடமை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தவிர்த்து வடக்கு கிழக்கு தமிழ் மக்கள் மத்தியில் பலமான அரசியல் அமைப்பொன்று இல்லை என்கிற நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினை தமிழ் இளைஞர்கள் மேற்கொள்ளும் அரசியல் முடிவுகள் சிதறடித்துவிடக்கூடாது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள், கட்சிகள் மீதான விமர்சனங்களை கூட்டமைப்பின் செயற்பாட்டு அரசியலுக்குள் நுழைந்து வெளிப்படுத்த வேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்களோ, முக்கியஸ்தர்களோ இளைஞர்களின் பலமான கோரிக்கைகளை அல்லது செயற்பாட்டு அரசியலை புறந்தள்ள முடியாத சூழல் இருக்கின்றது. அப்படியான நிலையில், இரண்டு தரப்பும் ஒன்றையொன்று பற்றி தமிழ் மக்களின் அரசியலை சரியாக நகர்த்த வேண்டும்.

தேர்தல்கள் உள்ளிட்ட முக்கிய அரசியல் நிகழ்வுகளின் போது அதிக அக்கறையோடு இருக்கும் தமிழ் இளைஞர்களில் குறிப்பிட்டளவானவர்கள் மற்றைய காலங்களில் ஆழ் உறக்க நிலைக்கு சென்று விடுகின்றார்கள். அது, தமிழ் மக்கள் மத்தியில் தொடர்ச்சியாக அரசியல் விழிப்புணர்வை ஏற்படுத்த வேணடிய கடமையை இல்லாமற் செய்து விடுகின்றது.

வடக்கு, கிழக்கில் தமிழ் அரசியல் பிரதிநிதித்துவங்களை எவ்வாறு பேணுவது, அதற்கான தயார்ப்படுத்தல்கள், தெளிவூட்டல்கள் என்ன?, என்பதையெல்லாம் அதிகம் கவனத்தில் கொள்ளாது விடுகின்றது. ஆயுதப் போராட்ட்ம் வடக்கு, கிழக்கிலுள்ள தமிழ் மக்களில் ஒரு தொகையானவர்களை பலிவாங்கி விட்டது. அதுபோல, குறிப்பிட்டளவானவர்களை வெளிநாடுகளை நோக்கி புலம்பெயர வைத்துவிட்டது.

அப்படியான நிலையில், எஞ்சியுள்ள தமிழ் மக்களின் பிரதிநிதித்துவத்தைக் காப்பது எப்படி, அதற்கான முனைப்புக்கள் எவ்வாறு அமைய வேண்டும் என்றெல்லாம் சிந்திக்க வேண்டியிருக்கின்றது.

பல்லின நாடான இலங்கை இனவாத அரசியலினால் ஆட்சியைத் தக்க வைத்து வரும் நாடு. எப்போதாவது அதிசயம் நிகழ்ந்து மாற்றங்களும் ஏற்படுதுண்டு.

இலங்கை தேர்தல் முறையின் பிரகாரம் சிறுபான்மையினமான தமிழ் மக்களின் ஒரு பிரதிநிதித்துவம் இழப்பும் கூட பெரும் இழப்பாகவே கொள்ள வேண்டும்.

தேர்தல் காலங்களில் வாக்குகளைப் பிரிக்கும் சதித்திட்டங்களை முறியடிப்பது போல, வடக்கு, கிழக்கலுள்ள தமிழ் மக்களின் தொகைக்கு ஏற்ப எத்தனை நாடாளுமன்ற பிரதிநிதித்துவம், மாகாண சபைப் பிரதிநிதித்துவம் கிடைக்க வேண்டும் என்பதில் கவனமாக இருக்க வேண்டும்.

தமிழ் மக்களின் வாக்குகளைப் பிரித்தாழும் சக்திகள் அந்த வாக்குகளைக் கொண்டு தம்மை அரசியல் அரங்கில் தக்கவைக்க முயல்கின்றன. இந்த விடயம் தொடர்பில் தமிழ் இளைஞர்கள் முழு அக்கறையோடு இருக்க வேண்டும்.

வடக்கில் வன்னித் தேர்தல் மாவட்டமும், கிழக்கு மாகாணத்திலுள்ள அனைத்து மாவட்டங்கள் தொடர்பிலும் தமிழ் மக்கள் மத்தியில் முழுமையான விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.

அந்த மாவட்டங்களில் வாக்களிப்பு என்பது ஏன் முழு முனைப்போடு முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதுவும், மாறாக அக்கறையற்ற வாக்களிப்பு என்பது இன சமநிலையை கேள்விக்குள்ளாக்கும் வகையிலான பிரதிநிதித்துவத் தெரிவை ஏற்படுத்தி விடும் என்பதையும் கருத்தில் கொள்ள வேண்டும். இலங்கையில் இப்போது ஏற்பட்டிருக்கின்ற ஆட்சி மாற்றம் தமிழ் அரசியலை சீர்ப்படுத்துவதற்கும், இளைஞர்களை சரியான புள்ளியில் ஒருங்கிணைப்பதற்கும் உதவக் கூடியது. ஆனால், இந்த ஆட்சி மாற்றம் வழங்கியிருக்கும் ஜனநாயக இடைவெளி எவ்வளவு காலத்துக்கு நீளும் என்பது கேள்விக்குறி.

அப்படியான நிலையில், தமிழ் இளைஞர்கள் ஆழ் உறக்க நிலைக்கு செல்லாது அரசியல் போராட்டத்தின் அடுத்த கட்டத்துக்கு விரைவிலேயே நகர வேண்டும். முதல் அடியை யார் எடுத்து வைப்பது என்ற சந்தேகம் அனைவர் மத்தியிலும் இருக்கின்றது.

ஏன், தனித்த ஒருவர் முதல் அடியை எடுத்து வைக்க வேண்டும். அனைவரும் இணைந்தே முதல் அடியை எடுத்து வைக்கலாம். அதுதான், தமிழ் அரசியல் உரிமைப் போராட்டத்திற்கு மிகவும் அவசியமானது!

-தமிழ்மிரர்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் ஜனாதிபதியாக பசில் தான் காரணம்

## மைத்திரி நகைச்சுவையாக தெரிவிப்பு



(கொழும்பு)

**என்னை ஜனாதிபதி கதிரைக்கு அமர வைத்தது முன்னாள் ஜனாதிபதியின் சகோதரர் பசில் ராஜபக்ஷ என்று நகைச்சுவையாக பேசிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நாட்டின் பாரிய அபிவிருத்தி செயற்றிட்ட பணிகளுக்கு காலம் கடத்துவது மக்களுக்கு துரோகமிழைக்கும் செயலாகும். மொறகஹகந்த செயற்றிட்டத்திற்கு மகிந்த ராஜபக்ஷ ஐந்த வருட காலமாக உரிய நிதியினை ஒதுக்கவில்லை. இதன்மூலம் அவர் என்னை பழிவாங்கவில்லை. மாறாக ரஜரட்டை மக்களையே பழிவாங்கியுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.**

மேலும் ரஜரட்டை மக்களின் நலனுக்காக மொறகஹகந்த செயற்றிட்டத்தினை முழுமையாக செய்து முடிப்பேன் எனவும் உறுதியளித்துள்ளார். மொறகஹகந்த செயற்றிட்டப் பணிகளை நேற்று முன்தினம் பார்வையிட செல்வதற்கு முன்பு இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

2005 ஆம் ஆண்டு மகிந்த ராஜபக்ஷ வெற்றியீட்டிய பின்னர் மகாவலி அமைச்சராக என்னை நியமித்தார். இதன்போது ரஜரடடை மக்களின் நலனுக்காக மொறகஹகந்த செயற்றிட்டத்திற்கு 2007 ஆம் ஆண்டு அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டது. எனினும் இந்த அடிக்கல் நாட்டு விழா நிறைவு பெற்று 48 மணி நேரத்தில் அமைச்சரவை திருத்தத்தினூடாக மகாவலி அமைச்சு பதவியிலிருந்து தன்னை நீக்கிவிட மகிந்த ராஜபக்ஷ முயற்சித்தார்.

மகாவலி அமைச்சு பதவிக்கு பதிலாக விவசாய துறையை என் மீது சுமத்த நடவடிக்கை எடுத்தமையை அப்போதே நான் அறிந்திருந்தேன். இதன்போது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் சென்று மொறகஹகந்த செயற்றிட்டம் எனது நீண்ட நாள் கனவாக இருந்தது. ஆகவே மகாவலி அமைச்சை என்னால் விட்டுக் கொடுக்க முடியாது. மகாவலி அமைச்சை எனக்கு வழங்கா விட்டால் வேறு எந்த அமைச்சு பதவியும் எனக்கு தேவையில்லை. நான் பொலநறுவைக்கே சென்று வருவேன். இதன் பிற்பாடு அலரிமாளிகையில் ஜனாதிபதியுடன் இடம்பெற்ற கலந்துரையாடலில் இது தொடர்பில் என்னுடன் பெரும் வாக்குவாதமும் இடம்பெற்றது. இக் கலந்துரையாடலின் போது முன்னாள் ஜனாதிபதியின் சகோதரர்களான சமல் ராஜபக்ஷவும் தன்னை இந்த ஜனாதிபதி கதிரைக்கு அமர வைத்த பசில் ராஜபக்ஷவும் அமர்ந்திருந்தனர் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# திஸ்ஸ அத்தநாயக்க மீளவும் ஐ.தே.கவில் இணைய நினைப்பது வெட்கக்கேடானது



ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க மீண்டும் கட்சியில் இணைந்து கொள்ள முயற்சிப்பது வெட்கப்பட வேண்டிய விடயமாகும் என சமூக சேவைகள் மற்றும் கால்நடைவள அபிவிருத்தி பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து விலகி, அமைச்சுப் பதவிக்காக ஆளும் கட்சியில் இணைந்து கொண்ட திஸ்ஸ மீளவும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு தாவ நினைப்பது ஏற்புடையதல்ல.

ஜனாதிபதி தேர்தல் நடைபெற்ற தினத்திற்கு முதல் நாள் வரையில் திஸ்ஸ அத்தநாயக்க கட்சியின் தலைவர் ரணிலுக்கும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கும் சேறு பூசினார்.

வெட்கம்கெட்ட திஸ்ஸ அத்தநாயக்க இன்று தாம் செய்த காரியத்திற்காக வேதனைப்படுவதாக குறிப்பிட்டுள்ளார்.

திஸ்ஸ அத்தநாயக்க எப்படியாவது மீளவும் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொள்ள முயற்சிக்கின்றார்.

ரணில் - மைத்திரி போலி ஆவணமொன்றை காண்பித்தே முன்னாள் ஜனாதிபதி மகிந்தவிடம் திஸ்ஸ அத்தநாயக்க சுகாதார அமைச்சர் பதவியினைப் பெற்றுக்கொண்டார். மைத்திரிபால சிறிசேன நாட்டின் ஜனாதிபதியாவார் என ஒருபோதும் திஸ்ஸ அத்தநாயக்க எதிர்பார்க்கவில்லை.

போலி உடன்படிக்கை பற்றிய உண்மைகளை திஸ்ஸ அத்தநாயக்க அம்பலப்படுத்தினால், அவரது கோரிக்கை குறித்து கொஞ்சமேனும் கவனம் செலுத்த முடியும்.

அவ்வாறு இன்றி திஸ்ஸ அத்தநாயக்கவை கட்சிக்குள் இணைத்துக் கொண்டால் அது ஆபத்தானது என ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்துள்ளார். சிங்கள பத்திரிகையொன்றுக்கு அவர் இந்தக் கருத்துக்களை நேற்று முன்தினம் வெளியிட்டுள்ளார். (இ-5)

# எக்னெலிகொடவை கண்டு பிடிக்க மைத்திரி அக்கறை காட்டவில்லை

லங்கா ஈ நியூஸ் ஊடகத்தின் கேலிச்சித்திர கலைஞரும் ஊடகவியலாளருமான பிரகீத் எக்னெலிகொடவை கண்டுபிடிக்க புதிய அரசாங்கம் உரிய அக்கறை காட்டவில்லை என அவரது மனைவி சந்தியா எக்னெலிகொட தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் பேசவுள்ளேன்.

2010 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தல் நடைபெறுவதற்கு இரணடு தினங்களுக்கு முன்னர் எக்னெலிகொட காணாமற் போயிருந்தார். கடந்த 2010 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 24 ஆம் திகதி காணாமற் போன எக்னெலிகொட ஐந்து வருடங்கள் கடந்துள்ள நிலையிலும் இன்னமும் கண்டு பிடிக்கப்படவில்லை.

பிரகீத் ஏக்னெலிகொட தொடர்பில் விசாரணை நடத்தப்படும் எனவாக குறுதி அளித்து ஆட்சிக்கு வந்த புதிய அசராங்கமும் அந்த விடயத்தை மறந்து செயற்பட்டு வருகின்றது.

உயிரிழந்த பல ஊடகவியலாளர்களின் மரணங்கள் தொடர்பில் விசாரணை நடத்தப் போவதாக அறிவித்த அரசாங்கம் எக்னெலிகொடவின் பெயர் பற்றி எதனையும் குறிப்பிடவில்லை.

பிரகீத் எக்னெலிகொட காணாமற் போய் ஐந்து ஆண்டுகள் கடந்துள்ள நிலையில் நானும் பிள்ளைகளும் கடுமையான நெருக்கடிகளுக்கு மத்தியில் வாழ்ந்து வருகின்றோம்.

கடந்த 23 ஆம் திகதி பிரகீத் எக்னெலிகொட தொடர்பில் கொழும்பு கோட்டே புகையிரத நிலையத்திற்கு எதிரில் நடைபெற்ற நிகழ்விலும் பலர் பங்கேற்கவில்லை என அவர் கொழும்பு ஊடகங்களுக்கு அளித்த நேர்காணலில் குற்றம் சுமத்தியுள்ளார். (இ-5)

# இன்று ஒரு தகவல்

## மனமும் குரங்கும்

ஒரு தடவை பெர்னாட்ஷோவைப் பார்த்து "உலகம் ஏன் உங்களை சிந்தனையாளர் என்று பாராட்டுகிறது?" என்று கேட்டார்களாம்.

அதற்கு அவர் சொன்னாராம்.

"ஒரு வருடத்தில் 2 அல்லது 3 தடவைக்கு மேல் யாருமே சிந்திப்பதில்லை. நான் வாரத்திற்கு ஒன்றிரண்டு தடவை சிந்திக்கிறேன். அதுதான் உலகம் என்னை சிந்தனையாளர் என்று பாராட்டுகிறது" என்று சொன்னாராம்.

இதிலிருந்து என்ன தெரிகிறது?

மனிதர்கள் யாருமே அதிகமாக சிந்திப்பதில்லை என்பது தெரிகிறது. மனம் சுத்தமாக இருக்க வேண்டும். அப்பொழுது தான் சிந்தனை தெளிவாக இருக்கும்.

மனம் எந்தளவுக்கு சுத்தமாக இருக்க வேண்டும் தெரியுமா?

மார்க்ஸ் அரேலியஸ் என்ற அறிஞர் அதற்கு ஓர் அளவுகோல் கொடுத்திருக்கிறார். திடீரென்று உங்கள் முன் ஒருத்தர் வந்து நின்று இப்ப நீங்கள் என்ன நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள்? அப்படியே சொல்லுங்கள் என்று கேட்டால் உடனே தயங்காமல் உள்ளது உள்ளபடியே...

"இதைத்தான் இப்பொழுது நான் நினைத்துக் கொண்டிருக்கிறேன்" என்று சுலமாக சொல்லக்கூடிய அளவிற்கு மனம் இருக்க வேண்டுமா? அதுதான் சுத்தமான மனம் என்கிறார் அவர்.

அப்படி சொல்லக்கூடிய நிலைமையிலேயா நாமெல்லாம் இப்ப இருக்கிறோம்.

வெளிப்படையாகப் பேசுங்கள் சேர் என்று கேட்டால்...

"அது எப்படி சேர்? மனதில் நினைப்பதையெல்லாம் வெளியில் காட்டிக் கொள்ள முடிகிறதா?" என்றுதானே கேட்கிறோம். அதன்பின் எப்படி மனம் சுத்தமாகிறது?

நம்மில் பலர் மனதை கட்டுப்பாட்டில் வைக்க வேண்டும் என்று தான் நினைக்கிறோம். ஆனால் அது முடிவதில்லை. மிகவும் கஷ்டமாக இருக்கிறது. மனம் ஒரு குரங்கு மாதிரி என்று சும்மாவா சொன்னார்கள்? மனதுக்கும் குரங்குக்கும் அப்படி என்ன ஒரு சம்பந்தம்?

இரண்டும் அடிக்கடி தாவிக்கொண்டிருக்கிறது. இது தான் நமக்குத் தெரிந்த ஒற்றுமை.

எனக்கு தெரிந்த நண்பர் ஒருத்தர் இதற்கு இன்னொரு விளக்கம் கொடுத்தார்.

"மனமும், குரங்கும் இவை இரண்டையும் எப்பொழுதும் கட்டுப்படுத்தியே வைத்திருக்க வேண்டும். இல்லையெனில் நமக்குத்தான் மிகவும் கஷ்டம்" என்றார்.

சில சமயம் குரங்கை விட மோசமான மனதெல்லாம் கூட நம்மில் சிலரிடம் உண்டு.

திருக்குற்றாலத்தில் ஒரு தடவை ஒரு ஆள் கையில் வாழைப்பழத்தை வைத்துக் கொண்டு வேகமாக ஓடிக் கொண்டிருந்தான்.

பின்னால் ஒரு குரங்கு துரத்திக் கொண்டே ஓடி வந்தது. அதற்கு பின்னால் ஒருத்தர் அவர்கள் இருவரையும் துரத்திக் கொண்டு வெறுங்கையுடன் ஓடிக்கொண்டிருந்தார்.

வழியில் ஒருத்தர் இந்த ஆளை நிறுத்திக்கேட்டார்.

அந்த ஆள் தன் கையில் வாழைப்பழம் வைத்திருக்கிறான். அந்தக் குரங்கை பார்த்துவிட்டு ஓடுகிறான். அது நியாயம்.

குரங்கு அந்த வாழைப்பழத்தை பார்த்து விட்டது. அதனால் அவனுக்குப்பின்னால் ஓடுகிறது. அது நியாயம். நீ எந்த சம்பந்தமும் இல்லாமல் அவருக்குப்பின் ஓடுகிறாயே? இது என்ன நியாயம்? என்றார்.

"நான் ஓடுவது நியாயம் தான்" என்றார் இவர்.

"எப்படி" என்று கேட்டார் அவர்.

"அந்த ஆள் என் கடையில்தான் வாழைப்பழம் வாங்கினான். காசு கொடுக்காமல் ஓடுகிறான் சேர்" என்று சொல்லிவிட்டு துரத்த ஆரம்பித்தார் அவர்.

*தென்கச்சி கோ:சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தை மாத இராசி பலன்கள்

## 15.01.2015 - 12.02.2015



**அலைச்சலைக் கூட்டும் அஷ்டமத்து குரு! நியாயத்திற்கும், நேர்மைக்கும் முக்கியத்துவம கொடுக்கும் தனுசு ராசி அன்பர்களே!**

தை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும்பொழுது மாதத் தொடக்கத்தில் குரு 8 இல் சஞ்சரிக்கின்றார். இருந்தாலும் அந்த குரு வக்ரம் பெற்று இருப்பது நன்மைதான். கேந்திராதிபத்ய தோஷம் பெற்ற கிரகங்கள் வக்ரம் பெறும் பொழுது யோகத்தைக் கொடுக்கும். அந்த அடிப்படையில் பயணங்களால் உங்களுக்கு பலன் கிடைக்கப் போகிறது.

ஏழரைச் சனியில் விரயச் சனி நடப்பதால் பிறருக்கு பணப்பொறுப்பு சொல்வதைத் தவிர்ப்பது நல்லது. நூதனப் பொருட்களின் சேர்க்கை ஏற்படும். நுண்ணறிவாளர்களின் ஒத்துழைப்போடு எண்ணிய காரியங்களை எளிதில் முடித்துவிடுவீர்கள். திடீர் இடமாற்றங்கள், ஊர் மாற்றங்கள் வருவதைத் தவிர்க்க முடியாது. தெய்வ வழிபாட்டில் ஆர்வம் கூடும்.

முதல் சுற்றில் ஏழரைச் சனி நடபபவர்கள் கொஞ்சம் கவனமுடன் செயறபடுவது நல்லது. 2ஆவது சுற்று ஏழரைச் சனி நடப்பவர்கள் இனிய வாழ்விற்கு அடித்தளமிடுவீர்கள். 3 ஆவது சுற்று, 4 ஆவது சுற்று சனியின் ஆதிக்கம் நடப்பவர்கள் பணியில் தொய்வு ஏற்படாமல் பார்த்துக் கொள்வது நல்லது. சனி உங்கள் ராசிக்குத் தனாதிபதியாக விளங்கி விரய ஸ்தானத்தில் தற்சமயம் சஞ்சரிப்பதால் தன விரயம் அதிகரிக்கும்.

வீண் விரயங்கள் ஆகாமல் இருக்க விழிப்புணர்ச்சியோடு செயறபடுவது நல்லது. சனியை மந்தன் என்று சொல்வதால், காரியங்களில் தடைகள் ஏற்படும். சனிக்கிழமை தோறும் விரதமிருந்து சனி பகவானுக்கு நீல வண்ண வஸ்திரம் அணிவித்து சுகந்த வாசமுள்ள மலரைச் சூட்டி, எள் அன்னம் நைவேத்தியம் படைத்து வழிபட்டால் காரிய வெற்றி ஏற்படும். கவலையும் தீரும்.

**கும்ப சுக்ரனின் சஞ்சாரம்!**

ஜனவரி 23 ஆம் திகதி கும்ப ராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப்போகிறார். விரயாதிபதியும், லாபாதிபதியும் இணையும் இந்த நேரத்தில் வரவும் செலவும் சமமாகும். வாழ்கைத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும். திடீர் பயணங்கள் அலைச்சலைக் கொடுக்குமே தவிர, ஆதாயம் தராது. எனவே மிகுந்த விழிப்புணர்ச்சியோடு செயறபடுவது நல்லது. நண்பர்களை நம்பிச் செய்த காரியங்களில் ஏமாற்றம் ஏற்படலாம்.

**பொன்னான புதனின் பெயர்ச்சி!**

ஜனவரி 28 ஆம் திகதி தனுசு ராசியில் புதன் வக்ரம் பெறுகிறார். 7, 10 இற்கு அதிபதி வக்ரம் பெறுவது நல்லதுதான். திடீர் மாற்றங்கள் தித்திக்கவும் வைக்கும், திகைக்கவும் வைக்கும். வாழ்க்கைத் தேவைகள் உடனுக்குடன் பூர்த்தியாகும். பிரிந்து சென்றவர்கள் வந்திணைவர். புதிய தொழில் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். பிப்ரவரி 8ஆம் திகதி மகரத்திற்கு செல்கிறார் புதன். எனவே உத்தியோகத்தில் முன்னேற்றம ஏற்படும். உயர்பதவியில் இருப்பவர்கள் உங்களுக்கு உறுதுணையாக இருப்பார்கள்.




# அலைச்சலைக் கூட்டும் அஷ்டமத்துக் குரு!

**மீன செவ்வாயின் சஞ்சாரம்!**

பெப்ரவரி 10ஆம் திகதி மீனத்தில் செவ்வாய் சஞ்சரிக்கின்றார். விரயாதிபதி சுக ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது மருத்துவச் செலவுகள் கூடும். ஆரோக்கியத் தொல்லை அதிகரிக்கும். அதே நேரத்தில் பஞ்சம ஸ்தானாதிபதியாகவும் செவ்வாய் விளங்குவதால், பிள்ளைகளின் கல்வி சம்பந்தமாக எடுத்த முயற்சியில் வெற்றி கிடைக்கும். கடல் தாண்டும் முயற்சிகளிலும் ஆர்வம் காட்டுவீர்கள். இடம் வாங்கும் பொழுது பத்திரப்பதிவிலிருந்த தடைகள் அகலும். உடன்பிறப்புகள் உங்களுக்கு அனுசரணையாக இருப்பார்கள். முருகப்பெருமான் வழிபாட்டை மேற்கொண்டால் இந்த செவ்வாய் பெயர்ச்சிக் காலம் செழிப்பாக இருக்கும். இம்மாதம் குரு தட்சிணாமூர்த்தியை வியாழக்கிழமை தோறும் வழிபடுவதால், குழப்பங்களிலிருந்து விடுபட இயலும்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

உழைப்பிற்கேற்ற பலன் கிடைப்பது அரிது. ஊர்மாற்றம், உத்தியோக மாற்றம் எதிர்பார்த்தபடியே வந்து சேரும். பணப்புழக்கம் அதிகரித்தாலும் மனதில் இனம் புரியாத கவலை மேலோங்கும். விலையுயர்ந்த பொருட்களை வாங்குவதில் கவனம் செலுத்துவீர்கள். கணவனும், மனைவியும் அனுசரித்துச் செல்வது அவசியம்.

குழந்தைகளின் எதிர்காலத் திட்டங்களுக்கு செலவு ஏற்படலாம். புதிய உத்தியோகம் ஒரு சிலருக்கு வந்து சேரும். சேமிப்பு கரையாமலிருக்க அனுமன் வழிபாட்டை மேற்கொள்வது நல்லது.

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்



**புத-சுக்ர யோகம் செயற்படும் நேரம்! விட்டுக்கொடுக்கும் தன்மையினால் விருப்பங்கள் நிறைவேற வழிவகுத்துக் கொள்ளும் மகர ராசி அன்பர்களே!**

தை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாதத் தொடக்கத்தில் புதனும், சுக்ரனும் உங்கள் ராசியில் கூடியிருக்கிறார்கள். குருவின் பரிபூரண பார்வை உங்கள் ராசியில் பதிகின்றது. எனவே, குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் நடைபெறும். கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும். இதுவரை துரிதமாக நடைபெறாத சில காரியங்கள் இப்பொழுது வேகமாக நடக்கும். வேற்று மனிதர்களின் ஒத்துழைப்போடு செய்யும் புது முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள்.

ஆயினும் அஷ்டமாதிபதி சூரியன் உங்கள் ராசியில் சஞ்சரிப்பது அவ்வளவு நல்லதல்ல. பணக்கவலை இருக்காது என்றாலும் மனக்கவலை இருக்கத்தான் செய்யும். அரசு வழியில் சில பிரச்சினைகள் ஏற்படும். அரசியல்வாதிகளை நம்பிச் செய்த சில காரியங்களில் தடைகளும, தாமதங்களும் வந்து சேரலாம்.

சனியின் பார்வை உங்கள் ராசியில் பதிவதால் உங்களுக்கோ, உங்கள் குடும்ப உறுப்பினர்களுக்கோ உடல் ஆரோக்கியத்தில் குறைபாடுகளும், வைத்தியச் செலவுகளும் உருவாகலாம். மேலும் விலையுயர்ந்த பொருட்களை விற்கவும் நேரிடும். வாக்கு ஸ்தானத்தில் செவ்வாய் இருப்பதால் எதையும் ஒரு முறைக்குப் பலமுறை யோசித்துச் சொல்வது நல்லது.

கோபத்தைக் குறைத்துக் கொண்டு செயல்படுவதன் மூலம் நல்ல வாய்ப்புகளை உபயோகப்படுத்திக் கொள்ள இயலும். சனியின் பார்வை உங்கள் ராசியில் பதிவதால், மந்தன் சனிக்குரிய சிறப்பு வழிபாடுகளை நீங்கள் செய்வது நல்லது. குறிப்பாக ஆதிப...ந்தப் பிரபு வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். ஆனைமுகப் பெருமான் வழிபாட்டையும், அனுமன் வழிபாட்டையும் மேற்கொள்ளலாம். அன்னதானம், வஸ்திர தானங்களை இயன்றவரை செய்து இனிய பலன்களை வரவழைத்துக் கொள்ளலாம்.

**கும்ப சுக்ரனின் சஞ்சாரம்!**

ஜனவரி 23 ஆம் திகதி கும்ப ராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப் போகிறார். இதன் விளைவாக நற்பலன்கள் உங்களைத் தேடிவரப் போகிறது.




# புத-சுக்ர யோகம் செயற்படும் நேரம்

பிள்ளைகள் வழியில் சுபகாரியப் பேச்சுக்கள் நல்ல முடிவிற்கு வரும். தங்கம், வெள்ளி போன்றவைகள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். மங்கல நிகழ்ச்சிகள் மனையில் நடைபெறுவதற்கான அறிகுறிகள் தென்படும்.

**பொன்னான புதனின் பெயர்ச்சி!**

ஜனவரி 28 ஆம் திகதி புதன் தனுசு ராசியில் வக்ரம் பெறுகிறார். 6 இற்கு அதிபதி 12 இல் சஞ்சரிக்கும் பொழுது விபரீத ராஜயோக அடிப்படையில் சில நல்ல பலன்கள் நடைபெறும். மேலும் செலவிற்கேற்ற வரவு முன்னதாகவே வந்து சேரும். உறவினர் பகை நீங்கி உற்சாகத் தோடு செயறபடுவீர்கள். பெப்ரவரி 8 இல் மகர புதனின் சஞ்சாரம் வரும் பொழுது உத்தியோக உயர்வு, ஊதிய உயர்வு போன்றவைகள் எதிர்பார்த்தபடி அமையும். அதிகாரிகளால் ஏற்பட்ட அல்லல்கள் அமையும். எதிரிகள் விலகுவார்கள.

**மீன செவ்வாயின் சஞ்சாரம்!**

பிப்ரவரி 10 ஆம் திகதி மீன ராசியில் செவ்வாய் சஞ்சரிக்கப் போகிறார். 4, 11 இற்கு அதிபதியான செவ்வாய் சகாய ஸ்தானத்தில் சஞ்சரிகக்கும் பொழுது, தாய் வழி ஆதரவு பெருகும். பூர்வீக சொத்து தகராறுகள் அகலும். தொழிலில் புதியவர்களைக் கூட்டுச் சேர்த்துக் கொள் வீர்கள். சமூகத்தில் உயர்ந்த மதிப்பு உருவாகும். கேதுவுடன் செவ்வாய் இணைவதால் ஆன் மிக நாட்டம் அதிகரிக்கும். கோவில திருப்பணிகளை முன்னின்று நடத்தி வைக்கும் வாய்ப்பு கிட்டும். இம்மாதம் பெருமாள் வழிபாடு பெருமையைச் சேர்க்கும்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாதம் பார்க்கும் குருவைப் பலப்படுத்த வேண்டிய மாதமாகும். வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகும் என்றாலும், சனியின் பார்வை பதிவதால் ஆரோக்கியத் தொல்லை அதிகரிக்கும். மருத்துவச் செலவுகள் தவிர்க்க முடியாததாக அமையும். கணவன்- மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். உங்கள் பெயரில் தொழில் தொடங்கும் திட்டங்கள் உருவாகலாம். மக்கள் செல்வங்களின் வழியில் மங்கலங்கள் நடைபெறலாம். மாதக் கடைசியில் சொத்துக்கள் வாங்கும்யோகம்உண்டு. கண்ணன் வழிபாடு கவலையைப் போக்கும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரியானாவில் கோர விபத்து!

## ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 12 பேர் பலி

அரியானா மாநிலம் ஹிசார் மாவட்டத்தில் நேற்று முன்தினம் காலை இடம்பெற்ற புகையிரத விபத்தில் 12 பேர் பலியாகினர்.

ஹிசார் மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு குடும்பத்தினர் நேற்று முன் தினம் காலை மத வழிபாட்டு நிகழ்ச்சியில் கலந்துகொள்வதற்காக ஒரு வாகனத்தில் சென்றனர். சர்சோத் கிராமத்தில் உள்ள ஆளில்லா ரயில்வே கட்வையை அந்த வாகனம் கடக்க முயன்றபோது, அந்த வழியாக வந்த பயணிகள் புகையிரதம் மோதியது.

கண்ணிமைக்கும் நேரத்தில் நடந்த இந்த கோர விபத்தில், வாகனத்தை ஓட்டி வந்த சாரதி, 4 குழந்தைகள் உட்பட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 12 பேர் பலியானார்கள். படுகாயம் அடைந்த மூன்று பேர் ஹிசாரில் உள்ள அரசு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

இதுகுறித்து புகையிரத பொலிஸார் வழக்குப்பதிவு செய்து விசாரித்து வருகின்றனர். காலையில் பனிமூட்டம் அதிகமாக இருந்ததே விபத்துக்கு காரணமாக இருந்திருக்கலாம் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-5)

# இந்து பெண்களை மதமாற்றம் செய்வதை தடுக்க வேண்டும்

## விஸ்வ இந்து பரிஷத் மாநாட்டில் தீர்மானம்

கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூரில் தமிழ்நாடு விஸ்வ இந்து பரிஷத்தின் மாநில மாநாடு நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்த மாநாட்டிற்கு காஞ்சி சங்கராச்சாரியார் ஜெயந்திர சரஸ்வதி சுவாமிகள் தலைமை தாங்கினார். விஸ்வ இந்து பரிஷத் தமிழ்நாடு அமைப்பின் ஸ்தாபகர் வேதாந்தம்ஜி முன்னிலை வகித்தார். கிருஷ்ணகிரி மாவட்ட செயலாளர் சூரி வரவேற்றார்.

மாநாட்டில் காஞ்சி சங்கராச்சாரியார் ஜெயந்திர சரஸ்வதி சுவாமிகள்உரையாற்றுகையில்,

கோவில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம் என்ற பழமொழிக்கேற்ப கோவில்கள் உள்ள ஊரில் மட்டுமே குடியிருக்க வேண்டும். இந்துக்கள் அனைவரும் நாயன்மார்கள், ஆழ்வார்கள் குறித்து அறிந்து மதத்தை வளர்க்க வேண்டும். தேவாரம், திருவாசகம் ஆகிய நூல்களை படித்து திருஞான சம்பந்தர், மாணிக்கவாசகர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகியோர் குறித்து தெரிந்து கொள்ள வேண்டும். அதேபோல வேறு மதத்திற்கு மாறியவர்கள் தாய் மதத்திற்கு வரவேண்டும் எனத் தெரிவித்தார்.

இதையடுத்து விஸ்வ இந்து பரிஷத் தமிழ்நாடு அமைப்பின் பொதுச் செயலாளர் ஆர்.ஆர். கோபால்ஜி தீர்மானங்கள் குறித்து விளக்கி பேசினார்.

மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் விபரம் வருமாறு,

பூரண மதுவிலக்கு வேண்டும், காவிரியின் புனிதத்தை காக்க வேண்டும், விளை நிலங்களை வீட்டு மனைகளாக மாற்றுவதைத் தடுக்க வேண்டும். இந்து பெண்களை நூதன முறையில் மதமாற்றம் செய்வதை தடுக்க வேண்டும், பசுவதை தடை சட்டம், மதமாற்றத் தடை சட்டத்தை கொண்டு வர வேண்டும், இந்து கோவில்களுக்கு சுய அதிகாரம் கொண்ட ஆட்சி மன்றம் தேவை, ஜாதி கட்சிகள் தேர்தலில் போட்டியிடுவதை தடை செய்ய வேண்டும்,

ஒரு குடும்பத்தில் ஒரு குழந்தை இருப்பதால் இந்துக்கள் எண்ணிக்கை குறைந்து வருகிறது. இந்த நிலை நீடித்தால் இந்து மக்கள் சிறுபான்மையின மக்களாக மாறும் அவல நிலை ஏற்படும். எனவே ஒரு குடும்பத்திற்கு பஞ்ச பாண்டவர்கள போல் 5 குழந்தைகளை இந்துக்கள் பெற்றுக் கொள்ள வேண்டும். இதனால் முதியோர் இல்லங்கள் குறையும்.

மேற்கண்ட தீர்மானங்கள் உட்பட பல்வேறு தீர்மானங்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# குடியரசுதின விழாவில் மரபை மீறிய ஒபாமா

திறந்த வெளிப் பகுதிகளில் பொதுநிகழ்ச்சி நடக்கும்போது அமெரிக்க ஜனாதிபதி அதிக பட்சமாக 45 நிமிடங்களுக்கு மேல் அங்கே தங்கி இருக்கமாட்டார். இதற்காக அமெரிக்காவின் இரகசிய சேவை முகமை வழிகாட்டுதல் நெறிமுறைகளையும் வகுத்துள் ளது.

அதன்படியே அமெரிக்க ஜனாதிபதிக்கான பாதுகாப்பை பிரத்தியேகமாக கவனித்துக் கொள்ளும் அவருடைய இரகசிய சேவை படையினர் மேற்கொள்வார்கள். அமெரிக்க ஊடகங்களும் அமெரிக்க ஜனாதிபதிகள் திறந்த வெளிப் பகுதியில் 45 நிமிடங்களுக்கு மேல் இருக்கமாட்டார் என்ற தகவலை உறுதி செய்துள்ளன.

ஆனால், அமெரிக்க ஜனாதிபதிக்கான இந்த மரபை நேற்று முன்தினம் ஒபாமா மீறினார். டில்லியில் குடியரசு தினவிழா அணிவகுப்பு நடந்த திறந்த வெளிப் பகுதியில் அவர் 2 மணி நேரத்துக்கும் மேலாக அமர்ந்து இருந்து நிகழ்ச்சிகளை கண்டுகளித்தார்.

### மோடி-ஒபாமா இடையே தொடரும் நல்லுறவு

பிரதமர் மோடிக்கும், அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவுக்கும் இடையே நல்லுறவு நீடித்து வருகிறது. இரண்டு நாடுகளின் தலைவர்கள் என்ற முறையையும் கடந்து அவ ர்களுக்கு இடையே சிறந்த நட்புறவு இருப்பதை, ஒபாம்மாவின் தற்போ தைய பயணத்திலும் பார்க்க முடிந் தது.

கடந்த 25 ஆம் திகதி டில்லி வந்த ஒபாமாவை, விமான நிலையத்துக்கே சென்று மோடி வர வேற்றார். அவர் கட்டித்தழுவி வரவேற்றது இருவருக்கும் இடையிலான சிறந்த நட்பை வெளிப்படுத்தியது.

அதைத்தொடர்ந்து ஐதராபாத் மாளிகையில் நடந்த நிகழ்வுகளிலும் இரு தலைவர்களும் சிறந்த உறவை வெளிப்படுத்தினர்.

டில்லியில் நேற்று முன்தினம் நடந்த அணி வகுப்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்ட இரு தலைவர்களும், அடிக்கடி சிரித்து பேசியவாறே இருந்ததை பார்க்க முடிந்தது. முன்னதாக இந்த நிகழ்ச்சிக்கு வந்த ஒபாமாவை, மோடி கைகுலுக்கி இன்முகத்துடன் வரவேற்றார். மேலும் இரு தலைவர்களும் மிகுந்த புன்முறுவலுடன் காணப்பட்டனர். குறிப்பாக கலாசார ஊர்திகளின் அணிவகுப்பு மற்றும் குழந்தைகளின் கலைநிகழ்ச்சிகள் உள்ளிட்ட நிகழ்வுகளின் போதும் இதை காண முடிந்தது. இதை பார்வையாளர்களும் ரசித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)




# அமெ.- இந்தியா இணைந்தால் உலகம் பாதுகாப்பாக இருக்கும்

## இந்தியாவில் ஒபாமா தெரிவிப்பு

(சென்னை)

**இந்தியா - அமெரிக்கா என்ற இரண்டு பெரிய ஜனநாயக நாடுகள் இணைந்து செயற்படும்போது, இந்த உலகமே பாதுகாப்பாக இருக்கும் என்று அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா தெரிவித்துள்ளார்.**

இந்தியாவும் அமெரிக்காவும் இணைந்து உருவாக்கக் கூடிய எதிர்காலம்" (India and America: The Future We Can Build Together) என்ற தலைப்பில் டில்லியில் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா உரையாற்றினார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

"நமஸ்தே! (இந்தியில் "வணக்கம்"). குடியரசு தின விழா நிகழ்வுக ளைக் கண்டு வியந்தேன். குறிப் பாக மோட்டார் சைக்கிள் சாகசங்கள் என்னைக் கவர்ந்தன.

என்னை ஈர்த்த இரு பெரிய மாமனிதர்கள் மார்டின் லூதர் கிங், மகாத்மா காந்தி. மார்டின் லூதர் கிங் அமெரிக்கர், மகாத்மா காந்தி இந்தியர். இதன் காரணமாகவே நான் இன்று இங்கு நிற்கிறேன்.

இந்திய அரசியல் சாசனமும், அமெரிக்க அரசியல் சாசனமும் "வீ த பீப்பிள்" என்ற வார்த்தைகளுடனேயே தொடங்குகிறது. இந்தியா - அமெரிக்கா என்ற இரண்டு பெரிய ஜனநாயக நாடுகள் இணைந்து செயற்படும்போது இந்த உலகமே பாதுகாப்பாக இருக்கும்.

நீண்ட காலமாக இழுபறியில் இருந்துவந்த இந்தியா - அமெரிக்கா இடையேயான அணுசக்தி ஒப்பந்ததத்துக்கு தீர்வு கிடைத்துள்ளது. இதன் மூலம் இந்தியர்களுக்கு மிகவும் தேவைப்படும் மின்சாரம் கிட்டும்.

இரு நாடுகளுமே பயங்கரவாதத்தால் பாதிக்கப்பட்டிருக்கிறது. பயங்கரவாதத்தை கூட்டாக நாம் எதிர்கொள்ள வேண்டும்.

தடுக்கக்கூடிய நோய்களில் குழநதைகள் பலியாவதை தடுப்பதில் இந்தியாவும் - அமெரிக்காவும் இணைந்து செயற்படலாம்.

கடந்த சில ஆண்டுகளில் இந்தியாவில் அதிகமானோர் வறுமையில் இருந்து மீட்டெடுக்கப்பட்டுள்ளனர்.

ஏனைய நாடுகளை ஒப்பிடும் போது இந்த அளவு குறிப்பிடத்தக்கது. வளர்ந்த நாடு, வளர்ந்து கொண்டிருக்கும் நாடுகளிடம் சுற்றுச்சூழல் பாதுகாப்புக்காக கரியமில வாயு வெளியீட்டை கட்டுப்படுத்துமாறு கோருவது சரியாகாது.

ஆனாலும், நாம் அனைவரும் ஒன்றுபட்டு செயற்படாவிட்டால் பருவ நிலை மாற்றத்திற்கு எதிரான போராட்டத்தில் வெற்றி காண முடியாது.

தனிநபர் மரியாதைக்கு நாம் மதிப்பளிக்கும்போதே நாம் வலியவர் ஆகிறோம்.


அமெரிக்கா எனக்கு நிறைய கொடைகள் வழங் கியிருந்தாலும், என் வாழ்வில் நிற பேதத்தால் பாதிக்கப்பட்டிருக்கி றேன். இழிவாக கருதப்படும் தொழிலை செய்பவர்கள் காணும் கனவுகூட மேன்மையானதே. அதிர்ஷ்டவசமாக நாம் கனவு காண சுதந்திரம் உள்ள நாடுகளில் பிறந்திருக்கிறோம்.

இந்தியாவில் ஒரு சமையல் காரரின் பேரன் குடியரசுத் தலைவராக முடியும், ஒரு டீ விற்பவர் பிரதமராக முடியும் என அவர் மேலும் தெரிவித்தார்.

அமெரிக்க ஜனாதிபதியின் இந்தியா வுக் கான விஜயம் சர்வதேச ரீதியாக பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ள நிலையில் இவ்வாறு பராக் ஒபாமா தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

### ஐ.நா.பாதுகாப்பு கவுன்சிலில் இந்தியா இணைய வேண்டும்

## ஒபாமா விருப்பம்



(புதுடில்லி)

ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்பு கவுன்சிலில் இந்தியா நிரந்தர உறுப்பினராக அங்கம் வகிக்க வேண்டும் என்று அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா விருப்பம் தெரிவித்துள்ளார்.

"இந்தியாவும் அமெரிக்காவும் இணைந்து உருவாக்கக் கூடிய எதிர்காலம்" (India and America: The Future We Can Build Together) என்ற தலைப்பில் டில்லி டவுன் ஹாலில் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா நேற்று செவ்வாய்க் கிழமை உரையாற்றினார்.

இரு நாடுகளுமே பயங்கரவாதத்தால் பாதிக்கப்பட்டிருக்கிறது. பயங்கரவாதத்தை கூட்டாக நாம் எதிர் கொள்ள வேண்டும்.

ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்பு கவுன்சிலில் சீர்திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டும். அதில், இந்தியா உறுப்பினராக வேண்டும் என மேலும் தெரிவித்தார். (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிந்தவுக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை பணத்தால் வந்தது

## அமைச்சர் ஹரிசன் குற்றச்சாட்டு

(கொழும்பு)

பணம் கொடுத்தே மகிந்த ராஜபக்ஷ மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தை பெற்றுக்கொண்டதாக சமூக சேவைகள் மற்றும் நலன்புரி அமைச்சர் பீ.ஹரிசன் தெரிவித்துள்ளார். ஜனாதிபதி தேர்தலின் போது நாம் முன்வைத்த 100 நாட்கள் திட்டத்திற்கு மக்கள் ஆணை கிடைத்துள்ளது. அதன் அடிப்படையிலேயே மக்கள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை தெரிவு செய்துள்ளனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த நூறு நாள் திட்டத்தை அமுல்படுத்த மக்கள் எமக்கு பெரும்பான்மை பலத்தை வழங்கியுள்ளனர். நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒவ்வொருவராக திரட்டி மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டிய அவசியமில்லை.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த பணம் மற்றும் ஏனைய சலுகைகளை வழங்கியே மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தைப் பெற்றுக்கொண்டார். நிறைவேற்று அதிகாரத்தை இல்லாமல் செய்யவும் நல்லாட்சியை ஏற்படுத்தவும் பலர் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவளிப்பார்கள். ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பலர் இப்போது எம்முடன் இணைந்து கொண்டுள்ளனர் என அமைச்சர் ஹரிசன் சிங்கள ஊடக மொன்றுக்குத் தெரிவித்துள்ளார். (இ-5)

# சீருடையணிந்த பிக்கு பொலிஸாரால் கைது!

(கொழும்பு)

உப பொலிஸ் பரிசோதகர் போல நடித்த பௌத்த தேரர் ஒருவரை வறக்காபொல பொலிஸார் நேற்றுமுன்தினம் இரவு கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர் வறக்காபொல பிரதேசத்திலுள்ள விஹாரை ஒன்றின் பிக்கு என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது.

வறக்காபொல பிரதேசத்தில், இளைஞர் ஒருவரும் யுவதியும் காதலித்துள்ளனர்.

எனினும், தான் நேசிக்கும் இளைஞன் ஏற்கனவே திருமணமானவர் என யுவதிக்கு தெரியவந்துள்ளது.

தன்னை திருமணம் முடிக்க வேண்டுமாயின் தன்னுடைய வீட்டுக்கு வந்து திருமணம் தொடர்பில் பெற்றோரிடம் கதைக்குமாறு தன் காதலனிடம் அந்த யுவதி தெரிவித்துள்ளார்.

என்ன செய்வதென்று தெரியாத அந்த இளைஞன் தனது பிரதேசத்திலுள்ள விஹாரைக்கு சென்று அங்கிருந்த பிக்குவிடம் விபரங்களை தெரிவித்துள்ளார். அத்துடன் யோசனையொன்றையும் அந்த இளைஞன் கூறியுள்ளார்.

அதன்பிரகாரம், தானும் உப பொலிஸ் பரிசோதகர் என வேடமிட்ட பிக்குவும் யுவதியின் வீட்டுக்கு சென்றுள்ளனர்.

குறித்த இளைஞன் திருமணமாகாதவர் என்று யுவதியின் பெற்றோரிடம் கூறியதுடன் யுவதியையே இளைஞனுக்கே திருமணம் செய்து வைக்கும்படியும் உப பொலிஸ் பரிசோதகர் போல நடித்த பிக்கு கேட்டுக்கொண்டுள்ளார்.

காதலனுடன் வந்தவரின் மன்றாட்டம் தொடர்பில் சந்தேகம் கொண்ட பெற்றோர் உடனடியாக பொலிஸ் அவசர பிரிவு இலக்கமான 119 தொடர்பு கொண்டு விபரங்களை தெளிவுபடுத்தியுள்ளனர்.

அதனையடுத்து யுவதியின் வீட்டுக்கு விரைந்த பொலிஸார் இளைஞனையும் போலி பொலிஸ் அத்தியட்சகராக வந்த பிக்குவையும் கைது செய்துள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வறக்காபொல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-5)

# ஜனாதிபதி, பிரதமரை சந்திப்பதற்கு நேரத்தை ஒதுக்கவும்

காணாமற் போனவர்களை கண்டறிவதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழு, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்ரமசிங்க ஆகியோரைச் சந்தித்து கலந்துரையாடல் நடத்துவதற்கான நேரத்தை ஒதுக்கித்தருமாறு கோரியுள்ளது.

ஜனாதிபதியின் செயலாளர் பி.பீஅபேகோனை, நேற்று முன்தினம் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்திய ஜனாதிபதி ஆணைக்குழு. இதன்போதே மேற்கண்ட கோரிக்கையை விடுத்துள்ளது.

ஜனாதிபதி, பிரதமரை சந்தித்துப் கலந்துரையாடல் நடத்தியதன் பின்னரே முறைப்பாடுகளை தொடர்ந்து பெற்றுக்கொள்வதற்கான திகதியும் பொதுமக்கள் அமர்வு தொடர்பிலான திகதியும் குறிக்கபபடும் என்றும் ஜனாதிபதி ஆணைக்குழு அறிவித்துள்ளது.

ஜனாதிபதி ஆணைக்குழு, எதிர்காலத்தில் என்ன செய்யவேண்டும் என்பது தொடர்பிலேயே ஜனாதிபதி மற்றும் பிரதமரிடம் கலந்தாலோசிக்கவிருப்பதாக ஆணைக்குழுவின் தலைவர் மெக்ஸ்வேல் பரணகம தெரிவித்தார்.

இந்த ஆணைக்குழுவின் கால வரையறை, பெப்ரவரி மாதம் 15ஆம் திகதியுடன் நிறைவடைகின்றது.

இந்த ஆணைக்குழு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் 2013ஆம் ஆண்டு நியமிக்கப்பட்டது. ஆணைக் குழு வின் காலம் ஒவ்வொரு ஆறு மாதங்களுக்கும் நீடிக்கப்பட்டு வந்தது.

இந்த ஆணைக்குழுவானது, 1990ஆம் ஆண்டு ஜூன் மாதம் 15ஆம் திகதியிலிருந்து 2009ஆம் ஆண்டு ஜூன் மாதம் 10ஆம் திகதி வரையான காலப்பகுதியில் இடம்பெற்ற காணாமற் போன சம்பவங்கள் தொடர்பிலான முறைப்பாடுகளை பெற்றுக்கொண்டது.

ஆணைக்குழு, இதுவரை காலமும் நடத்திய பொதுமக்கள் அமர்வுகளிலிருந்து 5 ஆயிரம் படை வீரர்கள் காணாமற போனமை உள்ளிட்ட 20ஆயிரத்து 106 முறைப்பாடுகள் கிடைககப் பெற்றுள்ளதாக அறிவித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## புங்கு

Botanical Name-Pongamia pinnata
Family- Leguminosae
Engl-Indian beech
Sinh- Karanda

பூக்கும் இருவித்திலை மரம். 7 – 10 மீற்றர் உயரமுடையது. நன்கு கிளைத்து தழைத்து வளரும் என்றும் பசிய இலைகளை உடையது. சிற்றிலைகளையுடைய கூட்டிலை. எதிரடுக்கானது. இலைச் செதில்கள் சிறியவை. சிற்றிலைகள் நீள் முட்டை வடிவானது. நுனிவள்ர் பூந்துணர் இலைக் கோணத்தில் உண்டாகும். கொத்தாக காணப்படும்.

மலர்கள் அவரைப் பூப் போன்றது. மலரடிச் செதில்கள் நுண்ணியவை. விரைவில் உதிர்ந்துவிடும்.

புல்லி வட்டம் 5 பசிய புற இதழ் இணைந்து புனல் வடிவு. அல்லி வட்டத்தில் 5 அக இதழ் காணப்படும். சூல்தண்டு உள்வளைவு உடையது. இருசூல் வெடியான கனி தட்டையானது. அடியிலும் நுனியிலும் குறுகியது. சிறுநீரக வடிவ ஒரு விதையுடையது. பெரும்பாலும் ஆற்றோரங்களிலும் தரிசு நிலங்களிலும் வடமாகாணத்திலும் பரவலாகக் காணப்படும். விதைகள் மூலமும் வேர்க்கன்று மூலமும் இனவிருத்தி செய்யலாம்.

### மருத்துவக் குணங்கள்

புங்கம் வேர்ப்பட்டைச்சாறு (புங்கம்பால்) சதை நரம்புகளை சுருங்கச் செய்யவும் தாதுக்கள் அழிவதை தடுக்கப் பயன்படும். பொதுவாக புரையோடிய புண்களுக்கு வேர்ப்பட்டையை பிழிய வரும் சாற்றை பயன்படுத்துவதால் குணமாகும்.

புங்கமிலை, புளியிலை, வேப்பிலை, கறிவேப்பிலை இவற்றை



வகைக்கு 10 கிராம் எடுத்து சுக்கு, சீரகம், இந்துப்பு, மிளகு இவை ஒவ்வொன்றும் 3 கிராம் எடுத்து ஒரு லீற்றர் நீர்விட்டு அரை லீற்றர் ஆக காய்ச்சி 50 மில்லி லீற்றர் ஆக காலை, மாலை கொடுத்துவர பித்தக் காய்ச்சல், மாந்தம், உடற்சூடு போம். குழந்தைகளுக்கு 15 மில்லிலீற்றர் அளவு கொடுக்கலாம்.

புங்கம் பூக்களை சேகரித்து நிழலில் உலர்த்தி நெய்யில் வறுத்து பொடி செய்து அரை தேக்கரண்டி அளவு (4 கிராம்) காலை மாலை 80 நாட்கள் சாப்பிட நீரிழிவு, வெள்ளை சாய்தல் போன்றன தீரும்.

புங்கம்பூ, புளியம்பூ, வெள்ளைப் பூண்டு, சீரகம், நன்னாரி வேர், வெட்பாலையரிசி ஒவ்வொன்றும் 50 கிராம் இடித்து 500 மில்லி லீற்றர் பசும்பாலில் அரைத்து கலக்கி ஒருலீற்றர் நல்லெண்ணெய் கலந்து பதமுறக் காய்ச்சி வடித்து அரைத்தேக்கரண்டி அளவு 40 நாட்கள் உள்ளுக்கும் குடித்து வெளியும் பூசிவர கரப்பன், சிரங்கு போம்.

புறணி நீக்கிய புங்கம் வேர்ப்பட்டையை இடித்து பிழிந்த பாலுடன் அதேயளவு தேங்காய்ப்பாலில் சேர்த்து காய்ச்சி எண்ணெய் பிரியும் பதத்தில் வடித்து பஞ்சில் நனைத்து பிளவை ஆறாத புண் இவற்றுக்கு போட்டுவர விரைவில் ஆறும்.

புங்கம்வேர், சிற்றாமணக்கு வேர், சங்கம்வேர் வகைக்கு 40 கிராம் எடுத்து அரை லீற்றர் பூண்டுச் சாற்றுடன் 2 லீற்றர் விளக்கெண்ணெயில் கலந்து வாதமடக்கி வேர்ப்பட்டை 20 கிராம், கடுகுரோகினி 10 கிராம் இடித்து போட்டு கலந்து 15நாட்கள் வெயிலில் வைத்து வடிகட்டி காலை மட்டும் ஒரு தேக்கரண்டி கொடுத்துவர எவ்வித தோல் நோயும் கரப்பான் சொறி சிரங்கும் புண்புரைகளும் தீரும்.

புங்கம் நெய், வேப்ப நெய், ஆமணக்கு நெய், புன்னை நெய், நல்லெண்ணெய் வகைக்கு அரை லீற்றர் சேர்த்து அதில் வெள்ளைப்பூண்டு, வசம்பு, பெருங்காயம், சுக்கு, மிளகு, திப்பிலி, ஓமம், கிராம்பு, சதகுப்பை, கடுகுரோகினி, கொடிவேலி வேர் வகைக்கு 20 கிராம் காடியில் அரைத்து 2 லீற்றர் காடியில் கரைத்து மேற் கூறிய எண்ணெய்களுடன் கலந்து சிறுதீயில் எரித்து மெழுகுப் பதத்தில் வடிகட்டி அதில் ஒரு தேக்கரண்டி காலை மாலை கொடுத்து மேற்பூச்சாகவும் தடவிவர 80 வகை வாதம், மேகம், சூலை, திமிர்வாதம், இசிவு, நடுக்கவாதம், சூதகவலி தீரும்.

புங்கம் விதைகளுக்கு முப்பிணியை நீக்கும் தன்மையுண்டு.

ஒரு புங்கம் காயை குக்கனுக்கு மாலையாக அணியும் பழக்கமுண்டு.

இலுப்பைப்பட்டை, அத்திப்பட்டை, அகத்திப்பட்டை, புங்கம் பட்டை, நாவற்பட்டை, நிலக்குமிழ்வேர், வட்டு வேர், இயங்கம்வேர், ஆலம்பட்டை இவைகளை வெவ்வேறாய் அரைத்து வகைக்கு தேசிக்காயளவு உமி, தண்ணீரிற் கலக்கி பன்னாடையால் வடித்து காய்ச்சி நீரும் திரையுமாய் வரும்போது இறக்கி மறுபடியும் வடித்து துருசு, சீனாக்காரம், வெள்ளைக் குந்திருக்கும் வகை 5 கிராம் பொடி செய்து போட்டுக் கலக்கி இரவு முழுவதும் ஊறவிட்டு காலையில் 3-4 கிராம் கொடுக்க வாந்தியாகும். பொதுவாக காரக்குடி மருந்துகளில் அடங்கும். வைத்திய ஆலோசனைப்படி பயன்படுத்த வேண்டும்.

புங்கம் பூவைக்கொண்டு வந்து சுத்தமாக ஆய்ந்து எடுத்து 400 மில்லி புங்கன்பூவை ஒரு வாணலியில் போட்டு அதை அடுப்பில் வைத்து 100 கிராம் நெய்யை விட்டு அதை நன்றாகக் கிளறிக் கொண்டே இருந்து 2 பேரீச்சம் பழத்தையும் வைத்து பசும்பால் விட்டு மைபோலரைத்து ஒரு வாயகன்ற சீசாவில் வைத்துக் கொண்டு 5 கிராம் அளவு சாப்பிட்டு வந்தால் நீரிழிவு குணமாகும்.

புண்களுக்கு புங்கம் இலைகளை சேகரித்து கழுவி மைபோல அரைத்து காயத்தின் மேல் வைத்து கட்டினால் புண்கள் இலகுவில் ஆறும்.

டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4 சிறுவர்கள் உட்பட 6 பேர் கழுத்தறுப்பு!

## மீரட்டில் பயங்கரம்

(மீரட்)

**இந்தியாவின் உத்தரபிரதேசம் மீரட்டின் புறநகர் பகுதியில் 4 சிறுவர்கள் உட்பட 6 பேர் கழுத்து அறுக்கப்பட் நிலையில் சடலமாக கிடந்தமை நேற்று கண்டு பிடிக்கப்படடது. குழந்தைகள் அனைவரும் சுமார 6 முதல் 17 வயது உடையவர்கள் என்று தெரிவிக்க ப்படுகிறது.**

மீரட்டின், சுமார் கார்டன் பகுதியின் வீடு ஒன்றில் 4 சிறுவர்கள் கழுத்து அறுத்து கொலை செய்யப்பட்டுள்ளனர். இதுதொடர்பாக தகவல் அறித்த பொதுமக்கள் பொலிஸாருக்கு தகவல் கொடுத்தனர். இதுகுறித்து தகவல் அறிந்ததும், பொலிஸ் அதிகாரிகள் மற்றும் மாவட்ட பொலிஸ் கண்காணிப்பாளர் சம்பவ இடத்திற்கு சென்று விசாரணை நடத்தினர். சிறுவர்கள் அனைவரும் கழுத்து அறுக்கப்பட்டு கொலை செய்யப்பட்டு ள்ளனர். இதற்கிடையே அப்பகுதியில் இருந்து சுமார் 3 கிலோ மீற்றர் தொலைவில் ஒரு ஆண் மற்றும் பெண்ணின் சடலம் கிடப்ப தாக செய்தி வெளியாகியது.

40 வயது பெண்ணும், 25 வயது ஆணும் இரத்த வெள்ளத்தில் சடலமாக கிடந்தனர். அவர்கள் கூர்மையான ஆயுதத்தால் வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் இருவரும், வீட்டில் சடலமாக கிடந்த சிறுவர்களின் உறவினர்களா? என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். சிறுவர்களின் சடலங்கள் அப்பகுதியைச் சேர்ந்த பக்ருதீன் என்பவரின் வீட்டிற்குள் கிடைந்தன என்று தகவல்கள் தெரிவித்துள்ளன.

இதுகுறித்து பொலிஸார் செய்தியாளர்களிடம் கூறுகையில், இறந்து கிடந்த 6 பேரில், 5 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். பெண் ரூக்ஷானா என்று அடையாளம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. சிறுவர்கள் ரின்ஷா (வயது-18), ஜ°லி (வயது-8), கூஞ்ஜி (வயது-6), சுஹைல் (வயது-12). ரூக்ஷானாவின் கணவர் நவீத் கடந்த ஒரு வருடங்களுக்கு மேலாக சிறையிலுள்ளார். நவீத் மற்றும் அவரது சகோதரர்களுக்கு இடையே சொத்து பிரச்சினை இருந்து வந்து ள்ளது. பெண்ணுக்கு அருகே கிட ந்த வாலிபர் யார் என்று இன்னும் அடையாளம் காணப்படவில்லை என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். இதுதொடர்பாக தொடர்ந்து விசாரணை நடைபெற்று வருகிறது. சொத்துப் பிரச்சினை காரணமாக இந்த கொலைகள் நடைபெற்று இருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுளளனா. (இ-5)

## விமல் வீரவன்சவின் மனைவியின் கடவுச் சீட்டு குறித்து விசாரணை

முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்சவின் மனைவியான சஷி வீரவன்சவின் கடவுச்சீட்டு தொடர்பான விசாரணைகள் குற்றப்புலனாய்வு பிரிவினரால் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பொய்யான தகவல்களை வழங்கி இராஜதந்திர கடவுச்சீட்டு பெற்றுக்கொண்டதாக அவருக்கு எதிராக குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

சஷி வீரவன்ச 2010ஆம் ஆண்டு, பொய்யான தகவல்களை கொண்டு கடவுச்சீட்டை பெற்றுக் கொண்டுள்ளதாகவும், 2009ஆம் ஆண்டு மே மாதம் 24ஆம் திகதி காலாவதியான அவரது சாதாரண கடவுச்சீட்டுடன் ஒப்பிட்டு பார்க்கையில் அதில் அடங்கியுள்ள தகவல்கள் வித்தியாசப்படுவதாகவும் பொலிஸ் ஊடக பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார். (இ-5)

## மனச்சாட்சிக்கு உண்மையாக வேலை செய்ய வேண்டும்

தேர்தல்கள் ஆணையாளர் அறிவுரை

(கொழும்பு)

சகல அரசாங்க அதிகாரிகளும் நீதியுடனும் மனச்சாட்சிக்கு உண்மையாகவும் வேலை செய்தால் சிறந்த நாட்டை நிர்மாணிப்பது பெரியதொரு வேலை இல்லை என தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

மொனராகலை மாவட்ட செயலாளர் அலுவலகத்தின் புதிய உதவி தேர்தல் ஆணையாளர் அலுவலகத்தை நேற்று முன்தினம் திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்துக் கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

யாராவது தன் மனச்சாட்சிக்கு உண்மையாக நடந்து கொண்டால் அவர்கள் மதங்களின் சார்பாக வாழ்பவர்களாகும். மனச்சாட்சிக்கு உண்மையாக வேலை செய்தால் அவர்கள் சிறந்த அரசியல் கட்சி கொள்கையின் படி வேலை செய்பவர்களாகும்.

மனச்சாட்சிக்கு உண்மையாக வேலை செய்தால் அவர்கள் அரசாங்கத்தின் சட்டதிட்டங்களின் படி வேலை செய்பவராகும்.

எனவே அரசாங்க அதிகாரிகளான நாங்கள் அனைவரும் மனச்சாட்சிக்கு உண்மையாகவும் நீதிக்கு உண்மையாகவும் செயற்பட்டால் எங்கள் நாட்டை சிறந்த நாடாக மாற்ற முடியும் என தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய மேலும் தெரிவித்தார். (இ-5)

### கண்டெடுக்கப்பட்டுள்ளது

பருத்தித்துறை தையிட்டி, காங்கேசன்துறையைச்சேர்ந்த துரைராசா அன்ரனி பிரதாஸ் (912874001V) என்பவருடைய தேசிய அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டுள்ளது. இதன் உரிமையாளர் அலுவலக நேரத்தில் வலம்புரி காரியாலயத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

♦♦♦♦♦♦♦♦

### வட்டிக்காரன் குறும்படம் வெளியீடு

நெடியகாடு இளைஞர் கலா மன்றத்தினால் வல்வெட்டித்துறையில் **வட்டிக்காரன் குறும்படம்** தயாரிக்கப்பட்டு வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளது. வல்வை கலை, கலா சார இலக்கிய மன்றத்தின் 5ஆம் ஆண்டு விழாவில் வல்வை முத்து மாரி அம்மன் ஆலய முன்றிலில் வைத்து அண்மையில் வெளியிடப்பட்டுள்ளது.

இக்குறும்படம் வளர்ந்து வரும் மீனவக் கிராமத்தை கருப் பொருளாகக் கொண்டு திரைப்படமாக்கப்பட்டுள்ளது.

அத்தோடு வட்டிக்கு பணம் வாங்குவதால் ஏற்படும் பிரச்சினைகளை இக்குறும்படம் வெளிப்படுத்தியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## போதைப்பொருள் கடத்தல்காரர்களின் விபரங்கள் வெளியிடப்பட வேண்டும்

### பொதுபல சேனா கோரிக்கை

(கொழும்பு)

இலங்கைக்கு போதைப் பொருள கொண்டு வரும் நபர்களின் பெயர் விபரங்கள் வெளியிடப்பட வேண்டுமென பொதுபல சேனா அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

எவ்வளவு அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டாலும், எவ்வளவு அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டாலும் பொதுபல சேனா சொல்ல வேண்டிய கசப்பான உண்மையை சொல்ல அஞ்சாது என அமைப்பின் நிறைவேற்று அதிகாரி டிலந்த விதானகே தெரிவித்துள்ளார்.

பொதுபல சேனா போதைப் பொருள் மற்றும் ஊழல் மோசடிகள் குறித்து பேசியது தேர்தல்களை இலக்கு வைத்து அல்ல.

2013ஆம் ஆண்டு போதைப் பொருள் நகரமான கொலன்னாவயில் நாம் மாநாடு ஒன்றை நடத்தியிருந்தோம். போதைப் பொருளினால் ஏற்படக்கூடிய அழிவுகள் குறித்து பாடசாலை மாணவர்கள், இளைஞர்கள் உள்ளிட்ட பலருக்கும் தெளிவுபடுத்தல்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

பௌத்த விஹாரைகளை மையமாகக் கொண்டு இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

ஜனாதிபதி தேர்தலில் உறுதியளிக்கப்பட்டது போன்று போதைப் பொருள் கடத்தல்கள் விநியோகத்தை கட்டுப்படுத்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நடவடிக்கை எடுக்க வேண்டுமென அவர் கோரியுள்ளார்.

ஊடக அறிக்கை ஒன்றின் மூலம பொதுபல சேனா இந்த கோரிக்கையை முன்வைத்துள்ளது.

இதேவேளை இலங்கையில் போதைப்பொருள் கடத்தப்பட்ட சம்பவத்துடன் கைதான வெலே சுதா என்ற நபருக்கும் சிங்கள பௌத்த அமைப்புக்களுக்கும் இடையில் தொடர்பு இருப்பதாக குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5)

## பிரிவுத்துயர் பகிர்வு



### நாகலிங்கம் கணேசபிள்ளை

தையிட்டியைப் பிறப்பிடமாகவும் இணுவில்தெற்கு இணுவிலை வசிப்பிட மாகவும் கொண்ட நாகலிங்கம் கணேசபிள்ளை(ஓய்வு பெற்ற பிரதி அதிபர் ) நேற்று முன்தினம் திங்கட்கிழமை அன்று காலமானார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்றது.



### மகாதேவா ரவிந்திரா

யாழ். கைலாச பிள்ளையார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் லண்டன் Raynes Park ஐ நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட மகாதேவா ரவிந்திரா கடந்த 19 ஆம் திகதி திங்கட்கிழமை அன்று காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு Streatham Park Cemetery, Rowan Road, Mitcham, London Sw16 5JF, UK என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



### செல்லத்துரை விமலராஜா

ஆனைக்கோட்டை மூத்த நயினார் கோயிலடியை பிறப்பிடமாகவும் சங்கானை வல்லை வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை விமல ராஜா நேற்று முன்தினம் திங்கட்கிழமை அன்று காலமானார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று முற்பகல் 10.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் சங்கானை கரைச்சி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### இரத்தினம் சுந்தரலிங்கம்

யாழ். கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் கனடா Mississauga ஐ வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினம் சுந்தரலிங்கம் கடந்த 24 ஆம் திகதி சனிக்கிழமை அன்று காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை St. John's Dixie Cemetery & Crematorium 737 Dundas Street East Mississauga, ON L4Y 2B5 Canada என்னும் முகவரியில் நடைபெறும்.



### திருமதி இராமநாதன் சின்னத்தங்கம்

யாழ். புங்குடுதீவு 11 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட இராமநாதன் சின்னத்தங்கம் கடந்த 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பெப்ரவரி மாதம் 2 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு 7 Boulevard de Menilmontant, 75011 Paris, France என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



### திருமதி செல்லத்துரை மனோன்மணி

யாழ். தெல்லிப்பழை வீமன்காமம் வடக்கைப் பிறப்பிடமாகவும் அவுஸ்திரேலியா Melbourne ஐ வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை மனோன்மணி கடந்த 24 ஆம் திகதி சனிக்கிழமை அன்று காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு Boyd Chapel, Arnold Drive, Springvale VIC 3171, Australia என்னும் முகவரியில் நடைபெறும்.



### செபஸ்ரி லூயிஸ் சுவக்கீன்

யாழ். பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும் லண்டன் Coventryஐ வசிப்பிடமாகவும் கொண்ட செபஸ்ரி லூயிஸ் சுவக்கீன் கடந்த 14 ஆம் திகதி புதன்கிழமை அன்று காலமானார். அன்னாரின் திருப்பலி எதிர்வரும் 31 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு St .Patrick R .C Church, Deedmore Road, Coventry, West Midlands CV2 2AA, UK என்னும் முகவரியில் ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.



### இராசரெட்ணம் சாந்தகுமார்

சரவணை கிழக்கு வேலணை 5 ஆம் வட்டாரம் பள்ளம் புலத்தைப் பிறப்பிடமாகவும் சுவிஸ் Thun ஐ வசிப்பிடமாகவும் கொண்ட இராசரெட்ணம் சாந்தகுமார் கடந்த 22 ஆம் திகதி வியாழக்கிழமை அன்று காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை வியாழக்கிழமை நண்பகல் 12 மணிக்கு Schonaustrasse 23, 3600 Thun, Switzerland என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியாவில் உழவர் பெருவிழா

**வடக்கின் பொருளாதாரத்தில் முதுகெலும்பாக விளங்கும் விவசாயத்தில் ஈடுபடும் விவசாயிகளுக்கு மதிப்பளிக்கும் விதமாக வடக்கு மாகாண விவசாய அமைச்சு ஆண்டுதோறும் தைப்பொங்கல் தினத்தையொட்டி உழவர் பெருவிழாவை நடத்தி வருகிறது.**



கடந்த வருடம் இவ்விழா கிளிநொச்சியில் இடம்பெற்றதையடுத்து இம்முறை வவுனியாவில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டுள்ளது. வடக்கு மாகாண விவசாய அமைச்சின் உழவர் பெருவிழா நேற்று முன்தினம் வவுனியா நகரசபை மண்டபத்தில் கோலாகலமாக நிகழ்ந்தேறியது.

இந்நிலையில் ஆரோக்கியமானதும் சூழலுக்கு நட்பானதுமான முறைகளில் வீடுகளிலேயே உணவு உற்பத்தி செய்வதை ஊக்குவிக்கும் நோக்கில் விவசாய அமைச்சால் ஆண்டுதோறும் போட்டிகள் நடத்தப்படுகிறது. 2014ஆம் ஆண்டில் மாவட்ட ரீதியாக வெற்றி ஈட்டிய சிறந்த வீட்டுத்தோட்டச் செய்கையாளர்கள், சிறந்த சேதனப்பயிர்ச் செய்கையாளர்கள், சிறந்த பாற்பசுப் பண்ணையாளர்கள், சிறந்த ஆடு வளர்ப்பாளர்கள் மற்றும் சிறந்த கோழி வளர்ப் பாளர்கள் இவ்விழாவில் விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

வடக்கு விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் வடக்கு முதல்வர் சி.வி.விக்னேஸ்வரன் பிரதம விருந்தினராகவும், யாழ். பல்கலைக்கழக விவசாய பீடத்தின் தலைவர் கலாநிதி சிவமதி சிவச்சந்திரன், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிவசக்தி ஆனந்தன், செல்வம் அடைக்கலநாதன், வினோநோதராதலிங்கம், மாகாணசபை அமைச்சர்கள் த.குருகுலராஜா, ப.சத்தியலிங்கம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொண்டிருந்தார்கள். இவ்விழாவில் கலைமாமணி அருந்தவ நாயகம் சுஜேந்தி ராவின் நெறியாள்கையில் வவு னியா நிருத்திய நிகேதன கலாமன்ற மாணவர்களின் நடன நிகழ்ச்சிகளும் அருணா - கேதீஸ் குழுவி னரின் நமதேசக் காற்று என்ற நாட்டார் இசையரங்கும் இடம்பெற்றன. (அ-2)

# விவசாயிகளுக்கு வறட்சி கொடுப்பனவு; திறைசேரியிடம் நிதி கோரியுள்ளோம்

## கிளி.அரச அதிபர் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் வறட்சியினால் பாதிக்கப்பட்டு இதுவரையில் விதை நெல்லுக்குரிய கொடுப்பனவுகள் வழங்கப்படாதுள்ள விவசாயிகளுக்கான நிதி, திறைசேரியிடம் கோரியுள்ளதாகவும் அந்நிதி கிடைக்கப்பெற்றதும் அதை பகிர்ந்தளிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கிளிநொச்சி மாவட்ட செயலாளர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் நேற்று தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் கூறுகையில், கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த 2013 மற்றும் 2014ஆம் ஆண்டுகளில் வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு விதை நெல்லுக்குரிய கொடுப்பனவுகள் கமநல சேவை நிலையங்கள் ஊடாக வழங்கப்பட்டுள்ள போதும், கிளிநொச்சி, புளியம்பொக்கணை ஆகிய கமநல சேவை நிலையங்களின் கீழுள்ள விவசாயிகளுக்கு இதுவரை கொடுப்பனவு வழங்கப்படவில்லை.

இந்த விவசாயிகளுக்கு வழங்கப்பட வேண்டிய நிதி வேறு தேவைகளுக்கு பயன்படுத்தப்பட்டிருப்பதாகவும், இது திட்டமிட்டு நிறுத்தப்பட்டுள்ளதாகவும் விவசாயிகள் குற்றம் சாட்டுகின்றனர். இந்த நிதியை விவசாயிகளுக்கு வழங்குவதற்கு உரிய அதிகாரிகள் நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என்றும் பல்வேறு கோரிக்கைகள் விடுக்கப்பட்டு வருகின்றன.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த மாவட்ட செயலாளர், கிளிநொச்சி மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிக்ளுக்கான விதை நெல் கொடுப்பனவுகளுக்காக 90 மில்லியன் ரூபாய் நிதி தேவையென மதிப்பீடு செய்யப்பட்டு உரிய திணைக்களங்களுக்கு அனுப்பப்பட்டது.

அத்துடன், இந்தக் கேரிக்கைக்கமைய திறைசேரியூடாக கடந்த 2014ஆம் ஆண்டு 50 மில்லியன் ரூபாய் நிதி கிடைத்தது.

அவற்றை விவசாயிகளுக்கு வழங்கினோம். மிகுதி 40 மில்லியன் ரூபாய் நிதி கிடைத்ததும் ஏனைய விவசாயிகளுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். கமநலசேவை நிலையங்களினூடாக வழங்கப்பட்ட பட்டியலின் அடிப்படையிலேயே இந்தக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளன.

இதற்காக கிடைத்த நிதியை வேறுதேவைகளுக்கு பயன்படுத்தியது அல்லது குடிநீர் விநியோகத்துக்கு பயன்படுத்தியது என்று கூறப்படுவது முற்றிலும் தவறானது. குடிநீர் விநியோகத்துக்கான நிதி அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் ஊடாக கிடைத்தது. அதற்கும் விவசாயிகளுக்கு வழங்குவதற்காக கிடைத்த விதை நெல் கொடுப்பனவு நிதிக்கும் தொடர்புகள் இல்லை என அவர் கூறினார். (அ-2)

# வலயமட்ட கல்விக் கண்காட்சி

துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற சிறுவர் நேய பாடசாலைகளுக்கிடையிலான தரமான கல்விக்கண்காட்சி வலய மட்டத்தில் இன்று புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு மு/வன்னி விளாங்குளம் அ.த.க. பாடசாலையில் பாட சாலை அதிபர் தலைமையில் நடைபெறும். இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக துணுக்காய் வலயக்கல்வி பணிப்பாளர் திருமதி எல்.மாலினி வெனிற்றன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார். மேற்படி கண்காட்சியானது கல்விக்கோட்டங்கள் ரீதியாக ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் ஆகியோரின் பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்டு அதில் வெற்றி பெற்ற தலா 5 பேர் வீதம் தெரிவு செய்யப் பட்டு வலயமட்டப் போட்டியில் இன்று தங்களது பொருட்களை காட்சிப்படுத்தவுள்ளனர். (அ-2-15)




## இல்ல மெய்வல்லுநர் போட்டி

துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட மு/மாங்குளம் மகாவித்தியாலயத்தின் வருடாந்த இல்லமெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டி இன்று புதன்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் ப.இரவீந்திரநாதன் தலைமையில் நடைபெறும். இந்நிகழ்விற்கு துணுக்காய் கல்வி வலயத்தின் மாணவர் கல்வி அபிவிருத்தி பிரதிக்கல்விபணிப்பாளர் சி.ஜெயபாலன் கலந்துகொண்டு சிறப்பிக்கவுள்ளார். (அ-2-15)

◆ ◆ ◆ ◆ ◆

(மல்லாவி)

முல்லைத்தீவு கல்வி வலயத்திற்குட்பட்ட மு/மந்துவில் றோமன் கத்தோலிக்க அ.த.க. பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் விளையாட்டுப்போட்டி நாளை வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை அதிபர் எஸ்.பவலேந்திரன் தலைமையில் பாடசாலைமைதானத்தில் நடைபெறும். இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக இப்பாடசாலையின் பழைய மாணவனும் ஓய்வுநிலை அதிபருமான கணபதி இராஜேந்திரன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார். (அ-15)

◆ ◆ ◆ ◆ ◆

(மல்லாவி)

துணுக்காய் கல்வி வலயத்திற்குட்பட்ட மு/ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டி நாளை வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு வித்தியாலய அதிபர் ந.கருணாகரன் தலைமையில் பாடசாலை மைதானத்தில் நடைபெறும். இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி எல்.மாலினி வெனிற்றன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார். (அ-2-15)

# வயோதிபர் படுகாயம்

(கனகபுரம்)

வயோதிபர் ஒருவர் பேருந்திலிருந்து கீழே இறங்க முற்பட்ட வேளை தவறி விழுந்து படுகாயம் அடைந்துள்ளார். இச்சம்பவம் நேற்று முன்தினம் பிற்பகல் 6.30 மணியளவில் கிளிநொச்சி உதயநகர் பேருந்து தரிப்பிடத்தில் நடைபெற்றுள்ளது. இதில் நயினாதீவு யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சண்முகம் சத்தியானந்தம் (வயது -63) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

இது தொடர்பில் தெரியவருவதாவது, அக்கராயனிலிருந்து கிளிநொச்சி நோக்கி பயணித்த இ.போ.ச. பேருந்து உதயநகர் பேருந்து தரிப்பிடத்தில் நின்றபோது பிரஸ்தாப வயோதிபர் தனது உறவினர் வீடொன்றிற்கு செல்வதற்கு இறங்க முற்பட்ட வேளையிலேயே அவர் கீழே விழுந்து படுகாயம் அடைந்தார். இதனையடுத்து உடனடியாக [illegible] மாவட்ட வைத்தியசாலையில் [illegible] திக்கப்பட்டார். (அ-2-259)

பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு

# ஆனந்தபுரத்தில் தையல் பயிற்சி

லண்டன் நகரிலுள்ள செந்தாமரை உதவும் கரங்கள் (LOTUSL) எனும் சமூகசேவை அமைச்சின் நிதி அனுசரணையுடன் கிளிநொச்சி மாவட்டத்தில் இயங்கும் மனிதாபிமான புனர்வாழ்வு செயற்பாடுகளுக்கான தேசிய சங்கம் (NAHRO) என்ற அமைப்பின் ஊடாக பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்களுக்கு தையல் பயிற்சி நெறிகளை வழங்கி வருகின்றது.

இப்பயிற்சி 20 பெண்களைக் கொண்ட அணியினருக்கு ஏ-9 வீதியிலுள்ள ஆனந்தபுரத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட மனிதாபிமான புனர்வாழ்வு செயற்பாடுகளுக்கான தேசிய சங்கத்தின் நிர்வாக உத்தியோகத்தர் செல்வி ந.தயானி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் கூறுகையில், [illegible] யுத்தம் காரணமாக தொழில் வாய்ப்புக்களை இழந்த நிலையில் வாழ்கின்ற பெண்களுக்கான வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்குடன் தையல் பயிற்சி நெறியை வழங்கி வருகின்றோம்.

இதன்முதல் கட்டமாக கிளிநொச்சி- கோணாவில் கிராமத்தைச் சேர்ந்த 20 பெண்களுக்கு ஆறுமாத காலப் பயிற்சி முடிவடைந்துள்ளது.

இதன் அடுத்த கட்டமாக கிளிநொச்சி நகரை அண்மித்த பகுதியிலுள்ள 18-45 வயதிற்கு இடைப்பட்ட 20 பெண்களுக்கான தையல் பயிற்சி நெறி கிளிநொச்சி நகரில் உள்ள ஆனந்தபுரம் மருதாணி தையலகம் என்ற நிவனத்தில் நடைபெற்று வருகின்றது.

இங்கு பயிற்சியை நிறைவு செய்யும் பெண்களுக்கு சான்றிதழ் வழங்கப்படுவதுடன் இவர்களினால் வடிவமைக்கப்படும் ஆடைகளுக்கு சந்தைப்படுத்தல் வசதிகளையும் மேற்படி தையலகம் ஊடக ஏற்படுத்திக் கொடுத்துள்ளதாகஅவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்றாம் உலக யுத்தம் தண்ணீருக்கானது.

– கவிஞர் வைரமுத்து

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## பலவீனமான நிர்வாகத்தின் சாட்சியமே கிணறுகளில் கலந்த கழிவு ஒயில்

உலகம் முழுவதும் குடிநீரைப் பாதுகாக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கும் வேளையில், எங்கள் மண்ணில் இருந்த அருமையான நன்னீரை பாழாக்கி விட்ட படுபாதகத்தை நினைக்கும் போதெல்லாம் கண்ணீர் விடுவதைத் தவிர வேறு வழி தெரியவில்லை.

சுன்னாகம் பிரதேசத்தில் உள்ள குடிநீர்க்கிணறுகளில் எண்ணெய்க் கசிவு ஏற்பட்டதையடுத்து அப்பகுதியில் தண்ணீர்ப் பிரச்சினை பூதாகரமாகியுள்ளது.

சுன்னாகம் மின்சார நிலையத்தில் சேகரிக்கப்பட்ட கழிவு ஒயில் நிலத்தடி நீருடன் கலந்ததால் ஏற்பட்ட மிகப்பெரிய விபரீதமே இதுவாகும்.

கழிவு ஒயில் நிலத்தடி நீருடன் கலந்து கொண்டதால் சுன்னாகம் பகுதியில் உள்ள கிணறுகளில் எண்ணெய்க் கசிவு ஏற்பட, அந்தக் குடிநீரை எந்தத் தேவைக்கும் பயன்படுத்த முடியாது என்ற மோசமான நிலைமை உருவாகிற்று.

எண்ணெய்க் கசிவுள்ள தண்ணீரைப் பயன்படுத்தினால் ஏற்படக்கூடிய விபரீதங்கள் என்ன என்பதை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீடம் வெளிப்படுத்தியுள்ளது. மருத்துவபீடத்தின் தகவலின் பிரகாரம் பாரதூரமான பிரச்சினையை சுன்னாகம் சார்ந்த பிரதேச மக்கள் எதிர்கொண்டுள்ளனர் என்பது நிரூபணமாகின்றது.

எனினும் இது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவோ அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பாதிக்கப்பட்ட மக்களை எந்த வகையிலும் திருப்திப்படுத்துவதாகவோ இல்லை.

எனவே குறித்த பிரச்சினை ஏற்படுவதற்குக் காரணமாக இருந்தவர்கள் யார்? என்பதைக் கண்டறியும் அதேநேரம், எண்ணெய்க்கசிவு ஏற்பட்டுள்ள கிணற்று நீரை மீளவும் பயன்பாட்டிற்குக் கொண்டு வருவதற்கும்; எண்ணெய்க்கசிவினால் சுன்னாகத்தை அண்மித்த பிரதேசங்களில் உள்ள கிணற்று நீர் மாசடையாமல் தடுப்பதற்கும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

குடிநீரில் எண்ணெய்க்கசிவு என்றவுடன் வடக்கு மாகாண அரசு களத்தில் இறங்கி அந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அதிரடி நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும்.

எனினும் சுன்னாகப் பிரதேசத்து மக்கள் ஆர்ப்பாட்டம் நடத்தி, உண்ணாவிரதம் இருந்து பிரச்சினைக்குத் தீர்வு காணுங்கள் என்று கேட்கும் அளவிலேயே நிலைமையுள்ளது. இத்தகைய அலட்சியப் போக்குகள் தமிழர்களின் எதிர்காலத்தை மிக மோசமான நிலைக்குக் கொண்டு செல்லும் – கொண்டு செல்கிறது.

சுன்னாகம் மின்சார நிலையத்தில் கழிவு ஒயிலை நிலத்திற்குக் கீழ் சேகரிக்கும் போது அதனால் ஏற்படக்கூடிய பாதிப்புக்கள் என்ன? என்பதை சுற்றுச்சூழல் பிரிவினர் கவனித்தனரா? அல்லது சுன்னாகம் மின்சாரசபையில் இருக்கக்கூடிய துறைசார் அதிகாரிகள் கழிவு ஒயில் சேகரிப்பின் பாதிப்புக்கள் குறித்து எச்சரிக்கை செய்தனரா? என்ற கேள்விகள் எழும்.

நிகழ்காலப் பிரச்சினை தீர்ந்தால் போதும் அதன் எதிர்கால விளைவு என்ன? என்பது குறித்து அக்கறைப்படத் தேவையில்லை. யார் எக்கேடு கெட்டாலும் பரவாயில்லை என்ற மனநிலை எம்மிடம் இருக்கும் வரை சுன்னாகத்து குடிநீர் மட்டுமன்றி பல்வேறு சுற்றுச்சூழல் பிரச்சினைகளையும் தமிழ் இனம் எதிர்நோக்க வேண்டி வரும் என்பது திண்ணம்.

ஆகவே, வடக்கு மாகாண அரசு தமிழ் மண்ணில் நடக்கும் அத்தனை விடயங்களிலும் பொது நிர்வாகங்களிலும் கவனஞ்செலுத்த வேண்டும். இல்லாவிடில் எல்லாமே இப்படித்தான் என்றாகிவிடும்.

எனவே, பிரச்சினைகள் ஏற்படாமல் பாதுகாத்தல் ஏற்பட்ட பிரச்சினையை சடுதியாகத் தீர்த்தல் என்ற பணியை வடக்கு மாகாண அரசு தாமதமின்றி முன்னெடுப்பது அவசியம்.

# குரோத உணர்வுடன் எனக்கு எதிராக பிரசாரங்கள் மேற்கொள்ளப்படுகின்றன

## முன்னாள் ஜனாதிபதி மகிந்த ஊடகங்களுக்கு அறிக்கை

(கொழும்பு)

தனக்கு எதிராக குரோத உணர்வுடன் பிரசாரம் செய்யப்பட்டு வருவதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

தங்காலை கார்ல்டன் இல்லத்திலிருந்து வெளியிட்ட ஊடக அறிக்கையில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

எனக்கும் எனது குடும்பத்தினருக்கும் எதிராக குரோத உணர்வுடன் பிரசாரம் செய்யப்பட்டு வருகின்றது.

அண்மைக் காலமாக ஊடகங்களில எனக்கும் எனது குடும்ப உறுப்பினர்களுக்கும் எதிராக மிக மோசமான வகையில் பிரசாரம் செய்யப்பட்டு வருகின்றது.

கடந்த ஜனவரி மாதம் 9ஆம் திகதி இராணுவ சூழ்ச்சித் திட்டம் மேற்கொள்ளப்படவில்லை.

சில தரப்பினர் செய்து வரும் பிரசாரங்களைப் போன்று கடந்த 9ஆம் திகதி அதிகாலையில் அலரி மாளிகையில் இராணுவ சூழ்ச்சித் திட்டங்கள் எதுவும் இடம்பெறவில்லை.

இறுதித் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்படுவதற்கு முன்னதாகவே சுமுகமான முறையில் நான் அலரி மாளிகையை விட்டு வெளியேறினேன்.

தேர்தல் காலத்திலும் அதன் பின்னரும் எனது குடும்பத்தினருக்கு எதிராக கடுமையான சேறு பூசல்கள் இடம பெற்று வருகின்றன.

அலரி மாளிகையின் உட்பகுதியில மக்கள் பணத்தில் பாரியளவில் ஆடம்பர கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளதாகவும் சொகுசு வாழ்க்கை வாழ்ந்து வருவதாகவும் பிரசாரம் செய்யப்படுகின்றது.

எனினும் இலங்கையில் நடைபெற்ற பொதுநலவாய நாடுகள் மாநாட்டில் பங்கேற்ற வெளிநாட்டுத் தலைவர்களின் வசதி கருதி, கழிவறைளில் காற்று சீராக்கி பொருத்தப்பட்டது.

எனது மனைவி தங்கம் கடத்திய தாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. அதற்கு பொலிஸாரே பதிலளித்துள்ளனர். அதனால் அது பற்றி பேசப் போவதில்லை.

எனது அரசாங்கம் ஊழல், விரயம் மற்றும் நிதி மோசடிகளில் ஈடுபட்டதாக சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களில் எவ்வித உண்மையும் கிடையாது.

என்னையும் எனது குடும்ப உறுப்பினர்களையும் பற்றி மக்களிடம் பிழையாக காண்பிக்கும் நோக்கில் இவ்வாறு பிரசாரம் செய்யப்பட்டு வருவ தாக ஜனாதிபதி தனது ஊடக அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். (செ-11)

## இலங்கை வருவார் மோடி; இந்திய தூதரகம் உறுதி

இலங்கைக்கான உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி எதிர்வரும் மார்ச் மாதத்தில் வரவுள்ளார் என்பதை கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகம் உறுதிப்படுத்தியுள்ளது.

மார்ச் மாதத்தில் இந்தியப் பிரதமர் விஜயம் செய்யவுள்ளார். ஆனால், இன்னமும் திகதிகள் உறுதி செய்யப்படவில்லை என்று இந்தியத் தூதரகத்தின் தகவல் ஊடகப்பிரிவுக்குப் பொறுப்பான முதற் செயலாளர் ஈஷா ஸ்ரீ நிவட்சவா தெரிவித்துள்ளார்.

திகதிகளை உறுதி செய்யும் பணிகள் தற்போது முன்னெடுக்கப்பட்ட போதிலும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி மார்ச் 14ஆம், 15ஆம் திகதிகளில் இருநாள் விஜயத்தை மேற்கொண்டு இலங்கை வருவதை 99வீதம் உறுதிப்படுத்திக் கொள்ள முடியும் என இலங்கையிலுள்ள மூத்த இந்திய ஆய்வாளரொருவர குறிப்பிட்டார்.

1987ஆம் ஆண்டில் ராஜீவ் காந்தி விஜயம் மேற்கொண்ட பின்னர் இலங்கைக்கு அரசுமுறைப் பயணமாக இந்தியப் பிரதமர் ஒருவர் வருகை தரும் முதலாவது சந்தர்ப்பமாக நரேந்திர மோடியின் விஜயம் அமையவுள்ளது.

மன்மோகன் சிங் 2008ஆம் ஆண்டில் சார்க் மாநாட்டில் பங்கேற்பதற்காக இல ங்கைக்கு வருகை தந்திருந்தமை போன்று பல்தேசிய நிகழ்வுகளில் பங்கேற்பதற்காக இந்தியப் பிரதமர்கள் வந்திருந்தாலும் 28 ஆண்டுகளாக அரசுமுறைப் பயணத்தை இந்தியப் பிரதமர்கள் இலங்கைக்கு விஜயம் மேற்கொளளவில்லை.

இலங்கையின் புதிய ஜனாதிபதியாக பதவியேற்ற பின்னர் முதலாவது வெளிநாட்டுப் பயணமாக பெப்ரவரி 16ஆம் திகதிமுதல் 19ஆம் திகதிவரை புதுடில்லிக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விஜயம் மேற்கொண்டு ஏறத்தாழ ஒரு மாத காலத்தின் பின்னரே இந்தியப் பிரதமரின் இலங்கை விஜயம் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

## கே.பிக்கு எதிராக வழக்கு விசாரணை

(கொழும்பு)

கே.பி க்கு எதிரான வழக்கில் சட்டமா அதிபரை பெப்ரவரி ஐந்தாம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுபிள்ளை பிரபாகரனைத் தொடர்ந்து தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினது வழிநடத்தும் பொறுப்பை ஏற்ற குமரன் பத்மநாதனுக்கு எதிராக மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித்த ஹேரத்; மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவொன்றை நேற்றைய தினம் பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டபோதே இந்த அறிவித்தல் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த மனு மேன்முறையீட்டு நீதி மன்றத்தின் தலைவர் விஜித் மலல் கொட மற்றும் நீதிபதி எச்.என்.பி. நவாஸ ஆகியோர் முன்னிலையில் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருந்தது.

மனுதாரரான பாராளுமன்ற உறுப்பினர் விஜித்த ஹேரத் சார்பில் சட்டத்தரணி உப்புல் குமரப்பெரும நீதிமன்றத்தில் நேற்று ஆஜராகியிருந்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் 30 வருடங்களாக யுத்தத்தில் ஈடுபட்டது மாத்திரமல்லாது இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜிவ் காந்தி மற்றும் இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸ ஆகியோரை கொலை செய்துள்ளதாக சட்டத்தரணி நேற்று நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார். (செ-11)

## சிக்கலில் துமிந்த சில்வா

நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவின் அனைத்து கணக்குகளையும் சோதனைக்குட்படுத்துமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

வெலே சுதா எனப்படும்போதைப்பொருள் வர்த்தகருடன் தொடர்பு வைத்திருந்ததாக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களை அடுத்து, அவரது கணக்குகளை சோதனைக்குட்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளது. அத்துடன், துமிந்த சில்வா நாட்டை விட்டு வெளியேறுவதற்கு விதிக்கப்பட்ட தடை உத்தரவு நீடிக்கப்பட்டுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார். (செ-11)

## வாகன விபத்தில் இருவர் படுகாயம்

(கரணவாய்)

மோட்டார்சைக்கிள்- துவிச்சக்கர வண்டியும் நேருக்கு நேர் மோதியதில் இருவர் படுகாயமடைந்தனர். இச்சம்பவம் நேற்று மாலை 05.45 மணியளவில் ஓராம் கட்டை, பருத்தித்துறைப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் துன்னாலை மத்தி, கரவெட்டியைச் சேர்ந்த நாகராசா சர்மா உதயசங்கர் சர்மா (வயது22) மற்றும் கஜன் தோட்டம் புலோலி மேற்கைச் சேர்ந்த சிறிதரன் தனுசா (வயது20) ஆகிய இருவருமே படுகாயமடைந்துள்ளனர்.

சம்பவத்தில் படுகாயமடைந்த இருவரும் மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் குறித்த யுவதி மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில்அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் பருத்தித்துறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (செ-60)

## பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்

### கஷ்டப்படுபவர்களுக்கு உதவுங்கள்

❖ மனிதர்கள் பெண்ணாசையும், பொருளாசையும் கொண்டவர்களாக இருக்கிறார்கள். இந்த எண்ணமே தீராத நோயாக அவர்களை பிடித்திருக்கிறது. இதிலிருந்து விடுபட நல்லவர்களோடு பழகுவதுதான் சரியான தீர்வு.



❖ சிலருடைய உள்ளம் கல்சுவர் போல உறுதியாக இருககும். அதில் ஆணி அடித்தால் அது வளைந்து போகும். அதுபோல, எவ்வளவு முயன்றாலும் அவர்களுக்குள் ஆன்மிக விஷயம் எதுவும் உள்ளே போகாது.


❖ மக்களுள் பெரும்பாலோர் புகழுக்காகவோ, புண்ணியத்தைத் தேடுதல் பொருட்டோ பரோபகாரம் செய்கின்றனர். அத்தகைய சேவைகள் யாவும் சுயநலத்தை அடிப்படையாகக் கொண்டவை.


❖ பணம் அளவுக்கு அதிகமாக வைத்திருப்பவர்கள் தங்களுடைய செல்வத்தை சுயநலத்தால் தனக்காகவே வைத்துக் கொண்டிருக்கக் கூடாது. கஷ்டப்படுகிற ஜனங்களுக்கு உதவி புரிய வேண்டும்.

❖ மீன்கொத்திப்பறவை போன்று உலகத்தில் வாழ்ந்திருங்கள். அது நீருக்குள் மூழ்குகின்ற போது, சிறகுகளில் கொஞ்சம் நீர் ஒட்டிக் கொண்டிருக்கும் வெளியில் வந்து சிறகுகளைக் குலுக்கியதும் அந்த நீரும் அகன்றுவிடும். அதுபோல உலகியலில் ஈடுபட்டாலும் பற்றற்று இருக்கக் கற்றுக்கொள்ளுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவுஸ்திரேலியா கிராண்ட்ஸ்லாம் டெனிஸ் போட்டி; செரீனா ,ஜோகோவிச் காலிறுதிக்கு முன்னேற்றம்





இந்த ஆண்டின் முதல் கிராண்ட்ஸ்லாம் போட்டியான அவுஸ்திரேலிய ஓபன் டெனிஸ் போட்டி மெல்பேர்னில் நடந்து வருகிறது. இந்த போட்டியின் 8ஆவது நாளான நேற்று முன்தினம் நடந்த பெண்கள் ஒற்றையர் பிரிவு 4ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில் உலக தர வரிசையில் முதலிடத்தில் இருக்கும் அமெரிக்க வீராங்கனை செரீனா வில்லியம்ஸ், 24ஆம் நிலை வீராங்கனை ஸ்பெயினின் கார்பின் முகுருசாவை சந்தித்தார்.

முதல் செட்டை 2:6 என்ற செட் கணக்கில் இழந்த செரீனா வில்லியம்ஸ் பின்னர் சுதாரித்து ஆடி அனுபவ ஆட்டத்தை வெளிப்படுத்தினார். இதனால் அடுத்த 2 செட்களையும் 6:3, 6:2 என்ற கணக்கில் தனதாக்கிய செரீனா வில்லியம்ஸ் காலிறுதிக்கு முன்னேறினார்.

மற்றொரு ஆட்டத்தில் 11ஆம் நிலை வீராங்கனை டோமினிகா சிபுல்கோவா (டென்மார்க்) 6:2, 3:6, 6:3 என்ற செட் கணக்கில் இரண்டு முறை முன்னாள் சம்பியனான விக்டோரியா அஸரென்காவை (பெலாரஸ்) வீழ்த்தி தொடர்ந்து 2ஆவது முறையாக கால் இறுதிக்குள் நுழைந்தார். கால் இறுதி ஆட்டத்தில் செரீனா வில்லியம்ஸூம் சிபுல்கோவாவும் மோதுகிறார்கள்.

இன்னொரு ஆட்டத்தில் 19 வயதான அமெரிக்க வீராங்கனை மாடிசன் கெய்ஸ் 6:2, 6:4 என்ற நேர்செட்டில் சக நாட்டு வீராங்கனை மாடிசன் பிரெங்லேவை தோற்கடித்து முதல் முறையாக கிராண்ட்ஸ்லாம் போட்டியில் கால் இறுதிக்குள் அடியெடுத்து வைத்துள்ளார்.

மற்றொரு ஆட்டத்தில் 7 கிராண்ட்ஸ்லாம் ஒற்றையர் பட்டம் வென்றவரான 34 வயது அமெரிக்க வீராங்கனை வீனஸ் வில்லியம்ஸ் 6:3, 2:6, 6:1 என்ற செட் கணக்கில் 6ஆம் நிலை வீராங்கனை அக்னிஸ்கா ராட்வன்ஸ்காவை (போலந்து) சாய்த்து கால் இறுதிக்கு முன்னேறினார். 2010 ஆம் ஆண்டுக்கு பிறகு வீனஸ் வில்லியம்ஸ் கிராண்ட்ஸ்லாம் போட்டியில் கால் இறுதிக்கு தகுதி பெறுவது இதுவே முதல்முறையாகும். கால் இறுதி ஆட்டத்தில் வீனஸ் வில்லியம்ஸ், மாடிசன் கெய்ஸ்சை சந்திக்கிறார்.

ஆண்கள் ஒற்றையர் பிரிவில் 4ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில் நடப்பு சம்பியன் ஸ்டானிஸ்லாஸ் வாவ்ரிங்கா (சுவிட்சர்லாந்து) 7:6, (7:2), 6:4, 4:6, 7:6 (10:8) என்ற செட் கணக்கில் ஸ்பெயின் வீரர் குல்லெர்மோ கார்சியா லொபெஸ்சை போராடி வீழ்த்தி கால் இறுதிக்கு முன்னேறினார்.

மற்றொரு ஆட்டத்தில் 5ஆம் நிலை வீரர் நிஷிகோரி (ஜப்பான்) 6:3, 6:3, 6:3 என்ற நேர்செட்டில் 9ஆம் நிலை வீரர் டேவிட் பெரரை (ஸ்பெயின்) விரட்டியடித்து கால் இறுதிக்குள் அடியெடுத்து வைத்தார். கால் இறுதியில் நிஷிகோரி, வாவ்ரிங்காவை எதிர்கொள்கிறார்.


இன்னொரு ஆட்டத்தில் உலகின் நம்பர் வன் வீரரான நோவாக் ஜோகோவிச் (செர்பியா), லக்சம்பர்க் வீரர் ஜிலெச் முல்லரை சந்தித்தார். விறுவிறுப்பான இந்த ஆட்டத்தில் ஜோகோவிச் 6:4, 7:5, 7:5 என்ற நேர்செட்டில் ஜிலெச் முல்லரை தோற்கடித்து கால் இறுதிக்கு முன்னேறினார். கனடா வீரர் மிலோச் ரானிச்-ஸ்பெயின் வீரர் பெலிசியானா லொபெஸ் (ஸ்பெயின்) இடையிலான ஆட்டத்தில் மிலோச் ரானிச் 6:4, 4:6, 6:3, 6:7 (5:7), 6:3 என்ற செட் கணக்கில் பெலிசியானாவை வீழ்த்தி கால் இறுதிக்குள் நுழைந்தார். கால் இறுதியில் ஜோகோவிச்-மிலோச் ரானிச் மோதுகிறார்கள்.

கலப்பு இரட்டையர் பிரிவில் 2ஆவது சுற்று ஆட்டத்தில் சானியா மிர்சா-புருனோ சோர்ஸ் (பிரேசில்) ஜோடி 7:5, 6:7 (3:7), (10:8) என்ற செட் கணக்கில் அபிகைல் ஸ்பியர்ஸ் (அமெரிக்கா)-சான்டி யாகோ கொனாலெஸ் (மெக்சிகோ) ஜோடியை தோற்கடித்து கால் இறுதிக்கு தகுதி பெற்றது.

மற்றொரு ஆட்டத்தில் மார்டினா ங்கிஸ் (சுவிட்சர்லாந்து)-லியாண்டர் பெயஸ் (இந்தியா) ஜோடி 6:3, 6:1 என்ற நேர்செட்டில் ஸ்பெயின இணையான அனபெல்மெடினா-பாப்லோ அன்டுஜரை தோற்கடித்து கால் இறுதிக்கு முன்னேறியது.(க)

விளையாட்டுச் செய்திகள்

## மார்பில் பாய்ந்த கிரிக்கெட் பந்து உயிரிழந்த பாகிஸ்தான் வீரர்



பாகிஸ்தானில் உள்நாட்டு கிரிக்கெட் போட்டியின்போது பந்து தாக்கி, வீரர் ஒருவர் பரிதாபமாக உயிரிழந்த சம்பவம் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

பாகிஸ்தானில் கராச்சி அருகேயுள்ள ஓரங்கி நகரில் கிளப் அணிகளுக்கு இடையிலான கிரிக்கெட் போட்டி நடைபெற்றது.


அப்போது வேகப்பந்து வீச்சாளர் ஒருவர் வீசிய பந்து, 18 வயது இளம் வீரர் ஜீஷன் முகமதுவின் மார்பகப் பகுதியை தாக்கியது.

அதில் பலத்த காயமடைந்த அவர், உடனடியாக அருகில் உள்ள வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

அங்கு அவரை பரிசோதித்த வைத்தியர்கள், அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டதாக தெரிவித்தனர். இதனால் மற்ற வீரர்கள் அதிர்ச்சி அடைந்தனர்.

அவுஸ்திரேலிய கிரிக்கெட் வீரர் பிலிப் ஜூயூக்ஸ் கடந்த நவம்பர் மாதம் உள்ளூர் போட்டியின் போது சீன் அபாட் வீசிய பந்து தலையில் தாக்கி உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (க)

## ஆஸி. ஓபன் டெனிஸ்; காலிறுயில் ஷரபோவா



அவுஸ்திரேலியா ஓபன் கிராண்ட்சிலாம் போட்டிகள் மெல்போர்னில் நடைபெற்று வருகின்றன.இதில் மகளிருக்கான ஒற்றையர் காலிறுதி போட்டியில் ரஷ்யாவின் மரியா ஷரபோவா வெற்றி பெற்று அரையிறுதிக்குள் நுழைந்தார். நேற்று நடைபெற்ற இப்போட்டியில் டெனிஸ் தரவரிசை பட்டியலில் 2 ஆவது இடத்தை பிடித்துள்ள மரியா ஷரபோவா கனடாவின் பவர் சார்ட்டை எதிர்கொண்டார். இதில் 6:3, 6:2 என்ற நேர் செட் கணக்கில் ஷரபோவா வெற்றி பெற்று அரையிறுதிக்குள் நுழைந்தார்.தனது சக நாட்டவரான மகரோவாவை எதிர்த்து அரையிறுதியில் அவர் மோதவுள்ளது குறிப்பிடத்தக்கது. (க)

## லோகதீஸ்வரன்,யதுஷன் துல்லியமான பந்துவீச்சு சென்.மேரிஸ் அணியை வென்றது சென்.ஜோன்ஸ்



ஆர்.லோகதீஸ்வரன், வி.யதுசன் ஆகியோரின் துல்லியமான பந்துவீச்சு எஸ்.ஜெனி பிளமினின் துடுப்பாட்டம் கைகொடுக்க சென் ஜோன்ஸ் கல்லூரி 4 விக்கெட்டுக்களால் வடமேல் மாகாண சென்.மேரிஸ் கல்லூரி அணியை வென்றது.

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில், 19 வயதுப்பிரிவு பிரிவு 3 அணிகளுக்கிடையிலான மட்டுப்படுத்தப்படாத ஓவர்கள் கொண்ட இரண்டு நாட்கள் கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் ஆட்டமொன்று கடந்த 24ஆம் திகதி சென். மேரிஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இந்தப் போட்டியில், ஆர். லோகதீஸ்வரன், வி.யதுசன் ஆகியோரின் துல்லியமான பந்துவீச்சு எஸ்.ஜெனி பிளமினின் துடுப்பாட்டம் கைகொடுக்க சென்.ஜோன்ஸ் கல்லூரி 4 விக்கெட்டுகளால் வட்மேல் மாகாண சென்.மேரிஸ் கல்லூரி அணியை வென்றது. நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய சென். மேரிஸ் அணி, டபிள்யூ றஜிக்க டில்சான் (64), எம்.பெர்ணான்டோ (57) ஆகியோரின் அரைச்சதங்களின் உதவியுடன் முதல் இன்னிங்ஸில் 53.3 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து, 209 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில் சென்.ஜோன்ஸ் சார்பாக வி.யதுசன் 70 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 5 விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

பதிலுக்கு தமது முதலாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாட களமிறங்கிய சென். ஜோன்ஸ் அணி, எஸ்.ஜெனி பிளமினின் 95 ஓட்டங்களின் உதவியுடன் 57 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து, 214 ஓட்டங்களைப் பெற்றது. ஏ.ஹெரோட் லஸ்கி 35 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார். பந்துவீச்சில் சென். மேரிஸ் சார்பாக எம்.பாஷித பீரிஷ் 4 விக்கெட்டுக்களை கைப்பற்றினார். 5 ஓட்டங்கள் பின்னிலையில் இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய சென். மேரிஸ் அணி, ஆர்.லோகதீஸ்வரன் (4 விக்கெட்டுகள்), வி.யதுசன் (4 விக்கெட்டுகள்) ஆகியோரின் பந்துவீச்சை எதிர்கொள்ள முடியாமல், 41.2 ஓவர்களில் 108 ஓட்டங்களுக்குச் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. 104 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றியென்ற இலக்குடன் இரண்டாவது இனிங்ஸை ஆரம்பித்த சென்.ஜோன்ஸ் அணிக்கு, எம்.பாஷித பீரிஷின் பந்துவீச்சு அச்சுறுத்தலாக அமைந்தது. 28.4 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. துடுப்பாட்டத்தில் பி.துவாரகசீலன் 19 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார். பந்துவீச்சில் சென். மேரிஸ் சார்பாக எம்.பாஷித பீரிஷ் 3, டில்சான் 2 விக்கெட்டுகளை கைப்பற்றினார்கள். (க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வர்த்தகரின் காசோலையை களவாடி ரூபாய் பத்து இலட்சம் மோசடி

## ★சந்தேக நபர்கள் இருவர் கைதாகி விளக்கமறியலில்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், திருநெல்வேலி பகுதியை சேர்ந்த வர்த்தகர் ஒருவரின் காசோலையை களவாடி 10 லட்சம் ரூபாய் பணத்தினை எடுத்தனர் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட இரண்டு சந்தேக நபர்களையும் எதிர்வரும் 6 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ்.நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

யாழ்ப்பாணம் பொலிஸார் நேற்று முன்தினம் திங்கட்கிழமை கைது செய்யப்பட்ட மேற்படி இரண்டு சந்தேக நபர்களையும் நேற்று செவ்வாய்கிழமை யாழ்.நீதிமன்றில் முற்படுத்திய போதே நீதவான் இருவரையும் எதிர்வரும் 6 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

இச் மோசடிச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

திருநெல்வேலியில் உள்ள வர்த்தகர் ஒருவர் லீசிங் நிறுவனம் ஒன்றிடம் கடனடிப்படையில் இயந்திரம் ஒன்றினை கொள்வனவு செய்துள்ளார். அதற்கான தவணை கட்டணத்தை காசோலை மூலம் கட்டி வந்துள்ளார்.

தவணை கட்டணத்தை வசூலிப்பதற்காக குறித்த லீசிங் நிறுவனத்தை சேர்ந்த ஒருவர் ஒவ்வொரு தடவையும் வர்த்தகரிடம் சென்று காசோலையை பெற்று செல்வார்.

அந் நிலையில் ஒரு தவணை கட்டணம் செலுத்தும் முகமாக வர்த்தகரால் கொடுக்கப்பட்ட காசோலையை பிரதி எடுத்து வைத்துள்ளார்.

அதன் பின்னர் மீண்டும் ஒரு முறை தவணை கட்டணம் வசூலிப்பதற்காக சென்றவர் வர்த்தகருக்கு தெரியாமல் வர்த்தகரின் காசோலை புத்தகத்தின் அடிப்பகுதியில் இருந்து ஒரு காசோலையை கிழித்து எடுத்து சென்றுள்ளார்.

கிழித்து சென்ற காசோலையில் 10 லட்சம் ரூபாய் என நிரப்பி முன்னர் எடுத்து வைத்திருந்த காசோலையின் பிரதியை பார்த்து வேறு ஒரு நபரின் மூலம் வர்த்தகரின் கையொப்பத்தை ஒத்த கையொப்பத்தை இட்டு காசோலையை மாற்றி வங்கி பணத்தினை பெற்று சென்றுள்ளார்.

பணத்தினை பெற்றவர் காசோலையில் வர்த்தகரின் கையொப்பத்தை ஒத்த கையொப்பத்தை இட்டவருக்கு 3 லட்சம் ரூபா பணம் வழங்கியுள்ளார் அத்துடன் தனது தாயார் பெற்றிருந்த 5லட்சம் ரூபாய் கடனையும் செலுத்தியுள்ளார். மிகுதி 2 லட்சம் ரூபாய் பணத்தினையே கைவசம் வைத்து இருந்துள்ளார்.

பணத்தினை பெற்று சென்ற மறுநாளே வர்த்தகருக்கு 10 லட்சம் ரூபாய் பணம் இவ்வாறு மாற்றப்பட்டது தெரியவந்தது.

அதனை அடுத்து கோப்பாய் பொலிஸாருக்கு முறைப்பாடு செய்ய சென்ற போது 5 லட்சம் ரூபாய் பணத்திற்கு மேலதிகமான மோசடி முறைப்பாட்டினை யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்திலையே முறைப்பாடு செய்யவேண்டும் என கூறியுள்ளனர்.

யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்திற்கு சென்றால் அது கோப்பாய் பொலிஸாரே முறைப்பாட்டை ஏற்க வேண்டும் என யாழ்ப்பாண பொலிஸார் கூறி திருப்பி அனுப்பி உள்ளனர்.

இவ்வாறாக வர்த்தகரை இரண்டு நாட்களாக இரு பொலிஸாரும் அலைகழித்த பின்னர் யாழ்ப்பாண பொலிஸார் முறைப்பாட்டை ஏற்றுக்கொண்டனர்.

அதற்கிடையில் வங்கி முகாமையாளர் தமது உயர் அதிகாரிகளின் அனுமதியை பெற்று கண்காணிப்பு கமராவை பரிசோதித்து காசோலையை மாற்றிய நபரை கண்டு பிடித்துள்ளார்.

அந் நபர் ஏற்கெனவே வர்த்தகருக்கு அறிமுகம் ஆன நபர் என்பதால் வர்த்தகர் அந் நபரை இலகுவாக அடையாளம் கண்டு கொண்டு பொலிஸாருக்கு அவரைப்பற்றிய தகவல் வழங்கியதை அடுத்து பொலிஸார் அந் நபரை கைது செய்தனர்.

பொலிஸார் அவரிடம் மேற்கொண்ட விசாரணையின் போது தம்முடன் காசோலையை வங்கியில் மாற்றுவதற்கு உதவிய நபரைபற்றிய தகவலை கூறியதை அடுத்து உதவிய நபரையும் பொலிஸார் கைது செய்தனர்.

அத்துடன் 3 லட்சம் ரூபா பணத்தை பெற்றுக்கொண்டு காசோலையில் வர்த்தகரின் கையொப்பத்தை ஒத்த கையொப்பத்தை இட்ட நபரை பொலிஸார் தேடி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-6)

## புலிப் பீதியை...

தென்பகுதி தொலைக்காட்சி ஊடகம் ஒன்றின் நிகழ்ச்சியில் நேற்று முன்தினம் இரவு கலந்த கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில், இனக் கலவரத்தைத் தூண்டி ஆட்சியைக் கைப்பற்ற முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தரப்பினர் முயற்சித்து வருகின்றனர்.

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்சவின் பிரிகேடியர் நண்பர் ஒருவரைக் கொண்டு இந்த சதித் திட்டம் முன்னெடுக்கப்பட உள்ளது.

வடக்கின் சில இராணுவ முகாம்கள் மீது புலிகள் தாக்குவதனைப் போன்று இராணுவத்தைக் கொண்டு தாக்குதல் நடத்தப்பட உள்ளது. எதிர்வரும் மூன்று மாத காலப்பகுதிக்குள் இவ்வாறான சூழ்ச்சித் திட்டம் மேற்கொள்ளப்பட உள்ளது.

கோத்தபாயவிற்கு நெருக்கமான பிரிகேடியர் ஒருவரின் தலைமையில் தெரிவு செய்யப்பட்ட இராணுவச் சிப்பாய்கள் இந்த தாக்குதல்களுக்காக ஈடுபடுத்தப்பட உள்ளனர்.

500 இராணுவச் சிப்பாய்களுக்கு இரகசியமாக இவ்வாறு பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றது. வடக்கு முகாம்கள் மீது தாக்குதல் நடத்தி இனவாதத்தை தூண்டி அதன் மூலம அரசாங்கத்தை கவிழ்ப்பதே மகிந்த தரப்பின் முயற்சியாகும்.

எனினும் இந்த சூழ்ச்சித் திட்டம் குறித்து இராணுவத்தினரே எமக்கு தகவல்களை வழங்கினர். புதிய அரசாங்கத்தை பாதுகாக்க பலரும் ஒத்துழைப்பு வழங்கி வருகின்றனர்.

இராணுவ சூழ்ச்சித்திட்டம் தொடர்பில் அமைச்சரவைக்கு தகவல்கள் வழங்கப்படும அதன் பின்னர் இது குறித்து விசாரணை நடதத்தப்படும் என அமைச்சர் தெரிவித்தார். (செ-11)

# படுக்கையில் பந்தாடிய பேய்; அலறியடித்து ஓடிய பாக் வீரர்



நியூசிலாந்தில் சுற்றுப்பயணம் செய்து அந்நாட்டு அணிக்கெதிராக பாகிஸ்தான் கிரிக்கெட் அணி விளையாடி வருகிறது.

இதற்காக அந்த அணி வீரர்கள் கிரைஸ்ட்சர்ச் நகரில் உள்ள ஒரு ஹோட்டலில் பாகிஸ்தான் வீரர்கள் தங்கியுள்ளனர்.

அந்த அணி வீரர்களில் ஒருவரான ஹாரிஸ் சொகைல், ரிட்ஜஸ் லாட்டிமர் ஹோட்டலில் உள்ள தனது அறையில் படுக்கையின் மீது படுத்துக்கொண்டிருந்தபோது, இயற்கைக்கு முரணாக படுக்கை தானாக ஆடியது.

இதைக்கண்டு மிரண்ட அவர் ரூமை விட்டு அலறியடித்து வெளியே ஓடியுள்ளார். உடனடியாக பயிற்சியாளரை தொலைபேசி மூலம் தொடர்பு கொண்ட சொகைல் படுக்கை தான்தாக ஆடியது குறித்து கூறியுள்ளார்.

அவர் அந்த ரூமுக்கு விரைந்து வந்து பார்த்த போது, சோகைல் நடுக்கத்துடன் நின்றிருந்தார். அப்போது அவருக்கு லேசாக காய்ச்சலும் காணப்பட்டதாக கூறப்படுகிறது.

தனது படுக்கை ஆடியதற்கு காரணம் பேய் தான் என சொகைல் கூற, ஹோட்டல் நிர்வாகமோ அங்கு பேய் நடமாட்டம் எதுவும் இல்லை என்று கூறியது. சொகையிலின் உடல்நிலையை தொடர்ந்து கண்காணித்து வரும் மருத்துவ குழுவினர், தற்போது அவர் நல்ல உடல் நலத்துடன் உள்ளதாக தெரிவித்துள்ளனர். (க)

**அறைகள் வாடகைக்கு**

பல்கலைக்கழக மாணவர்கள் தங்கி படிப்பதற்கு அறைகள் வாடகைக்கு உண்டு.

**தொடர்பு**

**0718513913**

இ

# மெஸ்ஸி சிறந்த வீரர் நெய்மர் புகழாரம்

என்னுடன் விளையாடிய வீரர்களில் மெஸ்ஸி தான் சிறந்தவர் என்று நெய்மர் புகழாரம் சூட்டியுள்ளார்.

பிரேசில் நாட்டு கால்பந்து வீரரான நெய்மர் பார்சிலோனா அணிக்காக இந்த சீசனில் விளையாடி வருகிறார்.

இது குறித்து நெய்மர் நேற்று கூறியதாவது, நான் விளையாடிய போட்டிகளில் அனைத்து வீரர்களிலும் மெஸ்சி சிறந்தவர். அவர் மீது மிக பெரும் மரியாதையை நான் வைத்திருக்கிறேன்.

எல்லா நேரங்களிலும் நாங்கள் சிறப்பாக விளையாடி வருகிறோம். நாங்கள் இணைந்து விளையாடி சிறப்பான ஆட்டத்தை வெளிபடுத்த முடியும்.

நீங்கள் மைதானத்திற்கு வெளியே நல்லதொரு நட்பு முறையை தொடர்ந்து வந்தால் அது ஆட்டத்தில் பிரதிபலிக்கும். சிறப்பான ஆட்டத்திற்கு மேலாக விளையாடுவது என்பது மிக எளிதானதாக இருக்கும்.

முதல் சீசன் போட்டியில் அனைத்தையும் நான் தெரிந்திருக்க வேண்டிய நிலை இருந்தது. நிறைய சாதனைகளை நான் செய்ய வேண்டி உள்ளது என்று நான் எப்பொழுதும் கூறி வந்துள்ளேன்.

அதனை இன்றும் நான் உணருகிறேன், விளையாட்டு மற்றும் தனிப்பட்ட முறையில் நான் வளர்ந்துள்ளேன்.

எனது அணியை சேர்ந்த உலக தரமிக்க வீரர்களிடம் இருந்து நான் கற்றுள்ளேன். அவர்களுடன் இணைந்து திறமையான முறையில் பயிற்சி பெறுவது என்பது மகிழ்ச்சியான ஒன்று என கூறியுள்ளார். (க)

## ஊடக அடக்கு...

தப்பட்டுக் காணாமற் போகச் செய்யப்பட்டனர், தாக்கப்பட்டனர், அச்சுறுத்தல் காரணமாக நாட்டை விட்டு வெளியேறினர்.

இவ்வாறான சம்பவங்கள் குறித்து விசாரணைகள் எவையும் ஆரோக்கியமாக நடைபெற்றிருக்கவில்லை.

எனவே இவைகுறித்து புதிய அரசாங்கத்தின் கீழ் விரிவான விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று சபையின் உறுப்பினர் அனுரகுமார திஸாநாயக்க கோரிக்கை விடுத்தார்.

இந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட சபை உறுப்பினர்கள், விசேட குழு ஒன்றை அமைத்து சம்பவங்கள் குறித்து விரிவான விசாரணை நடத்தவேண்டும் என்று தெரிவித்தனர். அதன்படி சிறப்பு பிரிவொன்றை அமைக்க சபை ஒப்புதல் வழங்கியது. (செ-11)

## சகல பேருந்து...

கட்டணம் 5 ரூபாயால் குறைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறாக அதிகபட்சமாக 708 ரூபாய் வரையான கட்டணம் ரூபாய் 651 ஆக 57 ரூபாயால் குறைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, மா, சீனி, பால்மா உட்பட அத்தியாவசிய உணவுப் பொருட்கள் பலவற்றின் விலைகள் குறைவடையும் என்று தெரிவிக்கப்படுகிறது.

புதிய அரசாங்கம் தனது இடைக்கால வரவு செலவுத் திட்டத்தை நாளை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து, அதனூடாக அத்தியாவசிய பொருட்களுக்கு விலைக்குறைப்பு செய்யும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் வர்த்தகர்கள் இவ்வகையான உணவுப்பொருட்களைக் கொள்வனவு செய்து விற்பனை செய்வதை இடை நிறுத்தியுள்ளனர்.

இப்போதுள்ள விலையில் பொருட்களை கொள்வனவு செய்து விற்பன்ன செய்தால், விலைக்குறைப்பின்போது தமக்கு நஷ்டம் ஏற்பட்டுவிடும் என்று கருதியே கடை உரிமையாளர்கள் இவ்வாறு இடைநிறுத்தியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இருக்கும் பொருட்களை மட்டும் விற்பனை செய்யும் நடவடிக்கையிலேயே கடை உரிமையாளர்கள் ஈடுபட்டுள்ளனர்.

இதன்காரணமாக கோதுமை மா, அரிசி வகைகள், பருப்பு, பால்மா வகைகள் உள்ளிட்ட பொருட்களை கடைகளில் கொள்வனவு செய்யமுடியவில்லை என்று மக்கள் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக கிராமப்புறங்களில் இவ்வகையான பொருட்களுக்கு அதிக தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது. (செ-11)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## உறவுகளை மீட்டுத் தாருங்...

முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தலைமையிலான குழுவொன்று நேற்றையதினம் நெடுந்தீவிற்கு சென்று பல்வேறு இடங்களில் மக்கள் சந்திப்புக்களில் ஈடுபட்டனர்.

இதில் மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற சந்திப்பில் இராணுவம் மற்றும் ஒட்டுக்குழுக்களினால் கடத்தப்பட்ட தமது உறவினர்களினை மீட்டுத்தருமாறு கோரி முதலமைச்சிடம் மகஜர் கையளித்துள்ளனர்.

பெண்ணொருவர் தனது கணவரை 2007 ஆம் ஆண்டு அனலைதீவில் வைத்து அரசியல் குழு ஒன்று கடத்திச் சென்றதாகவும் அதன் பின்னர் கணவனை இதுவரை காணவில்லை எனவும் முதலமைச்சரிடம் தெரிவித்தார்.

முள்ளிவாய்காலில் இருந்து வந்தபோது தமது கணவன்மாரை தொலைத்த உறவுகளும் தமது உறவுகளினை மீட்டுத்தருமாறு மகஜர் கையளித்துள்ளனர்.

தனது கணவன் காணாமல் போயுள்ளதால் தனது பிள்ளைகளினைப் பாதுகாப்பதற்கு யாரும் இல்லை எனவும் தனது கணவனை மீட்டுத்தருமாறு கோரியும் கதறி அழுதனர்.

அனைத்து பொது அமைப்புக்களிடமும் இறுதியாக நடைபெற்ற ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணைகளிலும் தாம் சாட்சியமளித்ததாகவும் ஆனால் பயன் ஏதும் இல்லை. எங்கள் உறவுகள் எமக்கு வேண்டும் என அம்மக்கள் முதலமைச்சரிடம் கண்ணீர் விட்டனர்.

பின்னர் காணாமல் போனவர்களின் உறவினர்களைச்சந்தித்து வடமாகாண சபை உறுப்பினர் திருமதி சசிதரன் தான் இது தொடர்பில் ஜெனிவாவில் கதைப்பதாகவும் அவர்களது விபரங்களைப் பெற்றுக் கொண்டார். (செ-4)

## நொதர்ன் பவர் நிறுவன...

னூடாக தகுதி வாய்ந்த நிறுவனங்களின் உதவியுடன் விஞ்ஞான ரீதியிலான பரிசோதனைகளை விரைந்து மேற்கொண்டு மன்றுக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு உரிய அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

2009 ஆம் மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் குறித்த பிரதேசத்தில் கழிவு எண்ணெய் ஆபத்து காணப்படுகின்ற போதும் இது தொடர்பாக அரச திணைக்களங்கள் பலவற்றின் உத்தியோகத்தர்கள் விரைந்து நடவடிக்கை எடுக்கவில்லை.

அத்துடன் கழிவு எண்ணெய் பாதிப்புக்கள் குறித்து பொதுமக்களுக்கு எந்தவிதமான விழிப்புணர்வு நடடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. எனவே பாதிக்கப்பட்ட இடங்களை உடனடியாக பார்வையிட்டு அங்கே எவ்வாறான பாதிப்பு ஏற்பட்டுள்ளது எனக் குறிப்பிட்டு அது தொடர்பான விபரங்களை உடனடியாக மன்றுக்கு சமர்ப்பிக்குமாறு தெல்லிப்பழை, உடுவில் மற்றும் கோப்பாய் பிரதேச செயலாளர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

அதுமட்டுமின்றி பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு சுத்தமான குடிநீர் வழங்குவதற்கு உரிய நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளுமாறும், பொதுமக்களை பாதுகாக்கும் பொருட்டு மருத்துவ ரீதியிலான உரிய அதிகாரிகளுக்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (செ-4)

## மைத்திரியின்...

கர் ஜயந்த தனபால, விரைவில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர் சயிட் அல் ஹூசெய்ன் இளவரசரை சந்திக்க உள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையினால் நடத்தப்பட்டு வரும் இலங்கை குறித்த விசாரணைகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் இதன் போது கலந்துரையாடப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையினால் மேற்கொள்ளப்பட்டு வரும் இலங்கை தொடர்பிலான விசாரணை அறிக்கை மார்ச் மாதம் வெளியிடப்பட உள்ளதாகத தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் மார்ச் மாதம் 2ம் திகதி ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வு ஜெனீவாவில் ஆரம்பமாகவுள்ளது. எதிர்வரும் மார்ச் மாதம் 27ம் திகதி ஆணையாளர் அல்ஹூசெய்ன் ஆற்ற உள்ள உரையில் இலங்கை விவகாரம் குறித்தும் சுட்டிக்காட்டுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளினால ஐககிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வில், இலங்கைக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்த தீர்மானத்திற்கு அமையவே இலங்கை யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பில் சர்வதேச விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை தெரிந்ததே. (செ-11)

## புதிய ஆளுநர்...

புதிய ஆளுநர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

வடக்கு மாகாண ஆளுநராக எச்.எம்.ஜி.எஸ்.பலிஹக்கார, கிழக்கு மாகாண ஆளுநராக ஒஸ்ரின் பெர்னான்டோ, சப்ரகமுவ மாகாண ஆளுநராக பி.எம்.ஏ.ஆர்.பெரேரா, மத்திய மாகாண ஆளுநராக சுராங்கனி எல்லாவல, வடமத்திய ஆளுநராக பி.பி.திஸநாயக்கா, ஊவாமாகாண ஆளுநராக எம்.ஜி.ஜெயசிங்க ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். (செ-11)

## கறுப்பு பட்டியலில்...

தடை விதிக்கப்பட்டுள்ளது.

பிரசெல்சில் இடம்பெற்ற ஐரோப்பிய ஒன்றியத்தின் கடற்றொழில் அமைச்சர்களின் பேச்சுக்களின் போது இதற்கான முடிவு எடுக்கப்பட்டதாக ஐரோப்பிய ஒன்றிய அதிகாரி ஒருவர் நேற்று முன்தினம் திங்கட்கிழமை தெரிவித்தார்.

ஐரோப்பிய ஒன்றியத்துக்கு சூரை மற்றும் வாள் மீன் ஏற்றுமதியில் இலங்கையே இரண்டாவது இடத்தில் இருந்து வந்த நிலையில், சட்டவிரோத மீன்பிடி முறைகளைத தடைசெய்ய நடவடிக்கை எடுக்குமாறு 2012 ஆம் ஆண்டு முதல் இலங்கைக்கு ஐரோப்பிய ஒன்றியம் எச்சரிக்கை விடுத்துவந்திருந்தது.

இந்நிலையில், இலங்கை இருந்து மீன் ஏற்றுமதி செய்வதற்கு ஐரோப்பிய ஒன்றியம் விதித்துள்ள தடையை பிற்போடக் கோரும் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்காகவே வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர பிரசெல்ஸ் புயணமாகியுள்ளார். (செ-11)

## உணவு எடுத்து...

மணல் ஏற்றிவந்த உழவு இயந்திரம் பிரஸ்தாப குடும்பஸ்தரை மோதி அவரது தலைமீது ஏறிச் சென்றுள்ளது.

இதனால் பிரஸ்தாப நபர் சம்பவ இடத்திலேயே தலை சிதறி உயிரிழந்துள்ளார். உழவு இயந் திரத்தை ஓட்டிச்சென்ற நபர் மணலை அருகில் அவசரமாக பறித்து விட்டு தப்பிச் சென்றுள்ளார்.

சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணை மேற்கொண்ட பருத்தித்துறை நீதிவான் மா.கணேசராஜா மேற்படி விபத்தில் உயிரிழந்த நபரின் சடலத்தை உறவினர்களிடம் கையளிக்குமாறு உத்தரவிட்டார்.

இதேவேளை நேற்றுமாலை மேற்படி விபத்துடன் சம்பந்தப்பட்டதாக கூறப்படும் உழவு இயந்திரத்துடன் வல்லிபுர குறிஞ்சியைச் சேர்ந்த நபர் ஒருவரையும் பொலிஸார் சந் தேகத்தின் பேரில் கைது செய்து தடுத்து வைத்துள்ளனர். (செ-60)


# வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

அமரர்
**கதிரவேல் தவமணி**
(பெரியதுரை)



மலர்வு : 23.08.1935
உதிர்வு : 29.12.2014

எமது அன்புத்தாயாரின் மறைவு செய்தி அறிந்து ஓடோடி வந்து உதவிகள் ஒத்தாசைகள் புரிந்த, அஞ்சலி ஆறுதல் தெரிவித்த, தொலைபேசி மூலமாகவும் அஞ்சலி ஆறுதல் தெரிவித்த, வைத்திய சாலை வைத்தியர்கள், தாதியர், மற்றும் ஊழியர்களுக்கும் மற்றும் இறுதி ஊர்வலத்தில் கலந்துகொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம். மற்றும் இன்று 28.01.2015 புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்தி பிரார்த்தனை யிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். (9274)

'கதிர்மணி' - அல்வாய் - குடும்பத்தினர்

# கட்டிங் பேப்பர் விற்பனைக்கு

மாணவர்கள் பயிற்சிகள் செய்யக்கூடிய கட்டிங் பேப்பர் மற்றும் உணவுச்சாலைகளுக்குத் தேவையான றீம் பேப்பர் என்பன விற்பனைக்கு உண்டு. வலம்புரி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். (இ)

# WORLD MOVIES - JAFFNA

*Alliance Française de Jaffna*
cordially invites you to the screening of
**FRIDA**
The life of the Mexican artist Frida Kahlo
(2002, 123 min.)
on
Thursday 29 January 2015 at 4:00 p.m. at
*Alliance Française de Jaffna.*
61, Kachcheri-Nallur Road, Jaffna.
Phone: 021 222 8093
(9268)
English Language. English subtitles. Free entrance

# ALLIANCE FRANÇAISE DE JAFFNA

பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்



- வடமாகாணத்தில் FRENCH EMBASSY யின்கீழ் இயங்கும் ஒரே சர்வதேச நிறுவனம்.
- உலகம் முழுவதும் 1040+ கிளைகள்.
- INTERNATIONAL DIPLOMAS.
- ஆசிரியர்கள்: யாழ்.பல்கலைக்கழக பிரெஞ் விரிவுரையாளர்கள் (பிரான்ஸ் நாட்டவரும்)

ஆரம்பம் : 07.02.2015
021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்
(C-9267)

# மாபெரும் புத்தகக் கண்காட்சியும் மலிவு விற்பனையும்

இடம் : யாழ் புத்தகசாலை (மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்) (305, 307, 309 ஞானம்ஸ் ஹோட்டல் அருகாமை)
காலம் : 29.12.2014 முதல் 15.02.2015 வரை
நேரம் : காலை 8.00 மணி முதல் இரவு 7.00 மணி வரை
(ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறந்திருக்கும்)
Grade 6க்கு உரிய Science வெளிவந்துவிட்டது (2015 New Syllabus)

யாழ். புத்தகசாலை
305, 307, 309 மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
(ஞானம்ஸ் ஹோட்டல் அருகாமை)
(C-9851)
தொடர்புகளிற்கு : 077 8349 507, 021 4545 552

# KICK YOUR KNOWLEDGE IN ENGLISH
# ONE DAY WORKSHOP



31st of JAN 2015
@ KILINOCHCHI
ESOFT
Shaping Lives, Creating Futures.
with Certificate
10 Years Experienced Lecturer From Negombo
10.00 am to 4:00pm
Spoken
Grammar
Comprehension
ONLY Rs. 1100 including Refreshment
MULTIMEDIA ENABLED TRAINING
Start your Diploma in English after TRAINING
REGISTER BEFORE 30th of JAN 2015
SMS your Details to this NO
077 55 888 95
(C-9944)
ESOFT Shaping Lives, Creating Futures.
**ESOFT METRO COLLEGE**
No.01, Kanagapuram Road, Kilinochchi, Sri Lanka
Tel : 021 228 5444 | Hotline : 077 55 888 95
Sri Lanka's Largest Higher Education Network

விசேட விலைக்குறைவு
25/01/2015-25/02/2015 வரை
மிகத் துல்லியமான,உயர் தரத்திலான



6 கலர்ஸ்
டிஜிற்றல் பனர் பிறின்டிங்
டிஜிற்றல் பனர்,டிஜிற்றல் ஸ்ரிக்கர்கள்
விளம்பரப் பெயர்ப் பலகைகள்
மற்றும்
பந்தல் தட்டிகள்,முகப்புகள்,
ஆலய திரை அலங்காரங்கள்
என்பன உடனுக்குடன் பெற்றுக் கொள்ளலாம்.
(C-9924)
ஜனா டிஜிற்றல் பிறின்டிங்
**JANA DIGITAL PRINTING**
மானிப்பாய் வீதி,
ஆறுகால் மடம் ஆனைக்கோட்டை,
யாழ்ப்பாணம்.
T.P; 021 221 3233
077 0731654


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் [illegible] என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.01.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.